விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-4463)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை (25.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 341

## மக்கள் ஓரங்கட்டியவர்களை ஆட்சியில் அமர்த்தி
# ஜனாதிபதி மைத்திரி பாரிய தவறிழைத்தார்
### ரணில் விக்கிரமசிங்க ஆவேச உரை



(கொழும்பு) மக்களால் ஓரங்கட்டப்பட்டவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பாரிய தவறிழைத்து விட்டதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். மேலும் தாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை என்றும் ஆனால் நீதியான ஒரு அரசாங்கத்தின் கீழ் தேர்தலை நடத்தவே போராடுவதாகவும் ஆவேசமாக தெரிவித்துள்ளார். (15-ம் பக்.)

கொய்யாத்தோட்டத்தில்
## 4 கிலோ ரி.என்.ரி வெடிமருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்திற்கு அருகாமையில் இருந்து 4 கிலோ ரி.என்.ரி வெடிமருந்து விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளது. 16

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக சுரேன் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் புதிய பணிப்பாளராகவும், ஜனாதிபதியின் ஆலோசகராகவும் 16

வர்த்தமானியை மீளப்பெற்று
## தேர்தலை நடத்த மைத்திரி முயற்சி
-சரத் என். சில்வா

(கொழும்பு)

புதிய பிரதமர் நியமனத்தை அடுத்து இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி இன்றும் ஓயாத நிலையில் ஜனாதிபதி 15

முப்படைகளின் பிரதானியை
## குற்றப்புலனாய்வில் முன்னிலையாக அழைப்பு

(கொழும்பு)

முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் காலை 10 மணிக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு 16

## ரணிலின் ஆசீர்வாதத்துடனேயே எந்தவொரு பதவியையும் ஏற்பேன்
### சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்



(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், கட்சியின் நிறைவேற்றுக் குழுவும் ஒப்புதல் வழங்கினால் மாத்திரமே எந்தவொரு பதவியையும் ஏற்றுக் கொள்வேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் சஜித் பிரேமதாஸ 15

## முகமாலையில் புகையிரத விபத்து; சம்பவ இடத்தில் ஒருவர் பலி

(கண்டாவளை)

முகமாலையில் புகையிரதக் கடவையை கடக்க முற்பட்ட ஒருவர் புகையிரதம் மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அவரது சடலம் சிதைவடைந்ததால் அடையாளம் காணமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி முன்னர் இருந்த இடத்தில் நேற்று பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வந்த கடுகதி புகையிரதத்துடனேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (3-315)

பொதுத் தேர்தலுக்கு இணங்கினால்
## ஐக்கிய தேசியக் கட்சியுடன் காபந்து அரசை அமைக்க தயார்
### லக்ஷ்மன் யாப்பா எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

பொது தேர்தலுக்கு இணங்கினால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் காபந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க தயார் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபே 15

## சர்வாதிகாரத்தை தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம்
### அகிலவிராஜ் எம்.பி அறைகூவல்



(கொழும்பு)

சர்வாதிகாரத்தை போராட்டத்தின் ஊடாக தோற்கடித்து ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட தயார் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கண்டியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பு போராட்ட 15

வடமராட்சிப் பகுதியில்
## மகனின் இழப்பை தாங்க முடியாத தந்தை உயிர்மாய்ப்பு

(கரணவாய்)

மகனின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியாத தந்தை ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் வடமராட்சி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சமரபாகு வடக்கு தோட்டத்தை சேர்ந்த தேவராஜா துரைராஜா (வயது-66) என்பவரே உயிரை மாய்த்துக் 16

## மாவீரர் நாள் நிகழ்வுக்கு அனுமதியில்லை
### அரசாங்க தகவல் திணைக்களம் அறிவிப்பு

மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்த எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம்நாலக கலுவெவின்கையொப்பத்துடன் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிவிப்பில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாயில் உள்ள படை முகாமிற்கு முன்னால் நாளை மறுதினம் 27ஆம் திகதி மாவீரர் தினம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னங்கள், கொடிகள் பயன்படுத்த தடை விதித்ததோடு மாவீரர்களை நினைவு கூரலாம் என யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் கட்டளை பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், அரசாங்க தகவல் திணைக்களம் இவ்வாறானதொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (3)

மகாராஜா பொதிகள் சேவை
Parcel.lk DHL GTV Express SRI LANKA aramex
சிக்கனப் பொதிகள் சேவை
சுவிஸ் 500/-
கனடா 600/- 1Kgக்கான கட்டணம்
லண்டன் 500/-
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்
(C-4506)

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |

# சிறுபான்மை கட்சிகளை முழுமையாக இணைத்துக்கொள்ள தீர்மானம்

## எஸ்.பி.திசாநாயக்க கருத்து



(கொழும்பு)

சிறுபான்மை கட்சிகளை முழுமையாக தங்களுடன் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திசா நாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தினை தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், கடந்த தினங்களில் 117 இற்கும் அதிகமானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் புடன் இணைந்துகொள்ள தயாராக இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து. சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகளை பகுதியள வில் இணைத்துக்கொள் ளாமல் சிறுபான்மை கட்சி களை முழுமையாக எங் களுடன் இணைத்துக்கொள் வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அவர்கள் மீளவும் அதே கட்சி களில் செயற்படுவதற்கு வாய்ப் பளிக்கப்பட்டது. தற்போது அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுகின்றன.

எனவே, எதிர்வரும்சில நாட் களில் அவர்கள் அனைவரை யும் இணைத்துக் கொண்டு 113 என்ற எண் ணிக்கைக்கு அப்பால் பெரும் பான்மையை நிரூபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவித்துள்ளார். (3)


சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடாத்தும்

**கருத்தரங்கு அமர்வு**

காலம் : இன்று (25.11.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
இடம் : தலைமைச் செயலகம், குருகுலம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

கருத்துரை வழங்குபவர் : கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைவாஸநாதசர்மா - சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

- விடயம் -

"அந்தணர்களுக்கான குருகுலக் கல்வி மரபின் சமகால செல்நெறியும் சவால்களும்"

நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அந்தண குருமார்கள், அந்தண மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : சமஸ்கிருத புதிய வகுப்புகள் ஆரம்பமாக உள்ளதால் அந்தண மாணவர்கள் தங்கள் பதிவுகளை பதியும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைமைச் செயலகம்.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

செயலாளர் –
பிரம்மஸ்ரீ.சோ.கேதீஸ்வரசர்மா
(சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)

(6553)


# பாராளுமன்றத்தில் இடம்பெற்ற செயற்பாடு சட்டவிரோதமானது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவமானது சட்ட விரோதமானதாகும் என, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந் துள்ள உள்நாட்டு அலுவல் கள் அமைச்சின் சுற்றுலா விடுதியில் நேற்று சனிக் கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

அங்கு தொடர்ந்து தெரி வித்த அவர், நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் இடம் பெற்ற விடயம் சட்டவிரோத மானதாகும். நான் ஆளும் கட்சியில் இருக்கின்றேனா அல்லது எதிர்க்கட்சியில் இருக்கின்றேனா என்பது கட்சி சார்ந்த விடயம். அதனை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது என்பதை எனது உரையில் தெரிவித்திருந் தேன்.

நேற்று முன்தினம் நடை பெற்றது அரசாங்கத் தரப் பினருக்கு பெரும்பான்மை இருக்கின்றதா இல்லையா என்பதற்கான வாக்கெடுப்பு அல்ல. அது பாராளுமன்றத் தில் உள்ள தெரிவுக்குழுவை தெரிவு செய்வதற்கான ஒரு கூட்டம். அது சட்டவிரோதமாக நடந்துள்ளது.

பாராளுமன்றம் கலைப்பு தொடர்பான ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு இடைக்கால தடையே விதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான நீதிமன்ற தீர்ப்பு ஒன்று வரவுள் ளது. ஆகவே நீதிமன்ற தீர்ப்பிற்கு பின்னரே நாங்கள் எதையும் சொல்லலாம். நீதிமன்றம் ஜனாதிபதி எடுத்த முடிவு தவறானது, தொடர்ந்து பாராளுமன்றம் தொடர வேண்டும் என்றால், அப்போது தற்போதைய ஆளும்கட்சியினர் பெரும் பான்மையை நிரூபிப்பார்கள் அல்லது தேர்தல் நடைபெறும் எனத் தெரிவித்தார். (3)


**வேலைவாய்ப்பு**

நீங்கள் O/L எழுதியவர்களா!
அல்லது பரீட்சையில் சித்தியடையாதவர்களா!

உங்களுக்கான அரியதோர் சந்தர்ப்பம். யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் DNMC நிறுவனத்தில் பயிற்சி நெறியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள் உள்ளன. வெளிமாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு. ஆர்வ முள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 076 459 8925 / 076 459 7725 (6554)



**வேலை ஆட்கள் தேவை**

யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன்தேவை. உங்கள் சுயவிபரக்கோவையுடன் பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக் கும் இடையில் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும். அனுபவம் உள்ளவர்களுக்கும் மும்மொழி தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு :- அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Sanjeys A-Z Mart, No-100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) (C-4509)



**ஆயுஷ்ய ஹோமம்**
**5வது பிறந்தநாள்**
25.11.2018

**கஜேந்திர குருக்கள் சபரிஷ சர்மா**



பைந்தமிழ் சொல்லெடுத்து
நாலடியில் நடையெடுத்து
முத்தமிழால் முத்தமிட்டு
இருகரம் இணைத்து
ஒரு மனதாக
வாழ்த்துகின்றோம்...






கண்ணகி அம்மன் கோவிலடி
வற்றாப்பளை. (C-4503)

வாழ்த்துவோர் : அப்பா, அம்மா, தாத்தா, தங்கை சௌஜன்யா, பாட்டி, அம்மம்மா.


# ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்போம்





## ஐக்கிய தேசிய முன்னணி கண்டியில் நேற்று ஆர்ப்பாட்டம்





(கண்டி)

'நீதிக்கான குரல்' என்ற தொனிப்பொருளில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் பாரிய ஜனநாயகப் போராட்டமொன்று இடம்பெற்றது.

கண்டியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தில் ஐ.தே.க. தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்போம் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு, கோஷமெழுப்பியவாறு இப்போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# மகிந்த பொறுமை காத்திருக்க வேண்டும் அரசியல் ரீதியில் தவறிழைத்து விட்டார்

## குமார வெல்கம சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் பதவியை பொறுப்பேற்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியில் பாரிய தவறு இழைத்துவிட்டார் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

இதேவேளை, சற்றுப் பொறுத்திருந்தால் நாட்டு மக்களே ஜனநாயக ரீதியில் ஆட்சி அதிகாரத்தினை அவருக்கே மீண்டும் கையளித்திருப்பார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டவர்கள் இன்று தம்மைத் தாமே ஆளும் தரப்பினர் என்று குறிப்பிட்டுக்கொள்ள எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

ஜனநாய கத்தை பாதுகாக்க அனை வரும் சற்று விட்டுக் கொடுப் புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மீண்டும் நல்லாட்சிக்கு திரும்புவோம் மைத்திரியிடம் வேண்டுகோள் விடுத்த சு.கவின்பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

மீண்டும் நல்லாட்சிக்கு திரும்புவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி தலையிட வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தை அமைப்பதே தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கான ஒரே வழி என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவிற்குப் பதில் இன்னொருவரை நியமிப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி இதற்குச் சம்மதித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவதில் உள்ள நெருக்கடி குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்த முடியாவிட்டால் பாராளுமன்றத்தில் தனித்து செயற்படவேண்டும் என அவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.(இ-7)

## மீண்டும் ஜனாதிபதியாகும் ஆசையில்

# மொட்டே சரணம் கச்சாமி மகிந்தவிடம் மைத்திரி சரண்

## ஐ.தே.க. ஆர்ப்பாட்டத்தில் சம்பிக்க



(கொழும்பு)

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 26 ஆம் திகதி 45 நிமிடங்களுக்குள் நாட்டின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி விட்டு மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை ஒரு அரசியல் சதித்திட்டமாகும்." என பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான நீதிக் குரல் என்ற போராட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று கண்டி நகரில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட போதே பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மைத்திரிபால சிறிசேன எமது வாக்கைப் பெற்றுக் கொண்டு ஜனாதிபதியாகி எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதியோடு 4 வருடங்கள் பூர்த்தியாகவுள்ளது. பதவி வேண்டாம் என்று கூறிய மைத்திரிக்கு பதவி ஆசை வந்துவிட்டது. மைத் திரிக்கு நன்றாக தெரியும் அடுத்த ஜனாதிபதி தேர்த லில் எமது ஆதரவு கிடைக் காது என்பதை அறிந்தே "மொட்டே சரணம் கச்சாமி" என சரணடைந்து எதிர் வரும் ஜனாதிபதித் தேர் தலிலும் ஜனாதிபதியாக நினைத்தே மகிந்தவோடு இணைந்து இச் சதி நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

ஜனாதிபதிப் பதவிக்கு கோத்தாவும் பசிலும் போட்டி போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் மகிந்த மகன் நாமலுக்கு 25 வயது வரும் வரைக்கும் காத்து கொண்டு இருக்கிறார். அது வரையில் கோத்தாவும் பஷிலும் ஆட்சிக்கு வந்து விடக் கூடாது என்ற காரணத்தினாலேயே மகிந்த ராஜபக்ஷ தற்காலிகமாக ஒருவரை பதவி ஆசனத்தில் அமர்த்தி வைக்க வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது.

அதே போல் காமினி சேனாரத்ன கோத்தபாய மற்றும் நாமலிற்கு எதிரான வழக்கு விசாரணைகளில் மூவரும் சிறைக்கு சென்றுவிட்டால் எதிர்வரும் தேர்தலில் குடும்ப ஆட்சியை நிறுவுவதற்கு போட்டியிட முடியாமல் போய் விடும் என மகிந்த எண்ணினார்.

மகிந்தவிற்கு கட்சியோ கட்சி கொள்கைகளோ அல்லது கட்சியின் பின்னால் வருபவர்கள் பற்றியோ கவலையில்லை. ஆனால் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏதாவது ஒன்றென்றால் மட்டும் இதயம் துடிக்கும்.

இன்று அவர்களது பக்கத்தில் கட்சியோ கூட்டமைப்போ இல்லை. அங்கு முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் இருப்பது ராஜபக்ஷ என்ற பெயரே. அவர்களது அடிநாதம், நாமம் ராஜபக்ஷ ஆனால் எங்களது அடிநாதம் மக்களே ஆவர்.

இன்று அவர்கள் சபாநாயகரை தூற்றுகிறார்கள். ஆனால் சபாநாயகர் கரு ஜெயசூரிய 26ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி மகிந்தவை பிரதமராக ஏற்றார்.

அதற்கு நாங்கள் எங்களது எதிர்ப்பை சபாநாயகருக்குத் தெரிவித்தோம். தெரிவித்து விட்டு வெறுமனே இருந்து விடவில்லை எங்களது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டினோம். அந்தப் பெரும்பான்மை பலத்திற்கு மதிப்பளித்தே சபாநாயகர் செயற்பட்டுள்ளார்." எனத் தெரிவித்தார். (இ-7)

# மிகப்பெரிய காட்டிக்கொடுப்பு நானும் புத்தகம் எழுதுவேன்

## மைத்திரிக்கு ராஜித பதிலடி



(கொழும்பு)

'மிகப்பெரிய காட்டிக் கொடுப்பு' என்ற தலைப்பில் தாமும் புத்தகமொன்றை எழுதவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ரணிலுடனான அரசியல் உறவில் ஏற்பட்ட முறிவு குறித்து புத்தகமொன்றை எழுதவுள்ளதாக ஜனாதிபதி நேற்று முன்தினம் அறிவித்தார். நானும் புத்தகமொன்றை எழுதவுள்ளேன்.

இலங்கை வரலாற்றில் மன்னர் காலத்தில் இடம்பெற்ற காட்டிக்கொடுப்புக்கு பின்னர் அரங்கேறிய மிகப் பெரிய காட்டிக்கொடுப்பு தொடர்பிலேயே அந்தப் புத்தகம் எழுதப்படும்.

பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாத மகிந்த அணி, உடனடியோக வெளியேற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பிரதமர் அலுவலகம் முற்றுகையிடப்படும். யானைப்படை வீதிக்கு இறங்கினால் என்ன நடக்கும் என்பதை மகிந்த அணிக்கு சொல்லிக்கொடுப்போம்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் கதையைக்கேட்டு மைத்திரி இன்று குழம்பிப்போய் உள்ளார். நம்பிக்கையை அவர் இழந்துவிட்டார். பெரும்பான்மையும் இல்லை. வேறு எதுவுமே இல்லை" என ராஜித தெரிவித்துள்ளார். (இ-7)

# தையுல் ஆறு; வங்கம் ஜோரு

## மே.தீவுகள் 3 நாட்களில் சரண்




தையுல் இஸ்லாம் சுழலில் கலக்க, மே.தீவுகள் அணிக்கு எதிராக பங்களா தேஷ் அணி சொந்த மண்ணில் முதன் முறையாக டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று அசத்தியது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் (அதிகாரப்பூர்வமாக விண்டீஸ்) அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங் கேற்கிறது. முதல் போட்டி சிட்டகொங்கில் நடந்தது.

முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 324, மே.தீவுகள் 246 ஓட்டங்கள் எடுத்தன. நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்ட நேர நிறைவில், பங்களா தேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்கள் எடுத்து. 133 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

**பிஷூ ஆறுதல்**

இன்று மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. முஷ்பிகுர் 19, மெகிடி 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். மகமதுல்லா அதிகபட்சமாக 31 ஓட்டங்கள் எடுக்க, பங்களா தேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 125 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பந்துவீச்சில் மே.தீவுகள் அணி சார்பில் தேவேந்திர பிஷூ அதிகபட்சமாக 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**தையுல் அபாரம்**

இரண்டாவது இன்னிங்சில் 204 ஓட்டங் கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய மே. தீவுகள் அணிக்கு அணித் தலைவர் பிராத்வைட் (8), ஹோப் (3) ஹெட்மயர் (27) என பலரும் ஏமா ற்ற 75 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்தது. வோரிகன் (41), அம்ரிஸ் (43) சற்று ஆறுதல் கொடுத் தனர்.

இறுதியில் மே.தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்சில் 139 ஓட்டங்களுக்கு சுருண்டு, 64 ஓட்டங்களால் வீழ்ந்தது. 'சுழலில்' அசத்திய தையுல் இஸ்லாம் 33 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**சகிப் "200"**

இப்போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் பவெல்லை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் டெஸ்ட் போட்டியில் 200 விக்கெட்டுக்கள் என்ற மைல் கல்லை எட்டினார் பங்களாதேஷின் சகிப் அல் ஹசன்.

இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் குறைந்த போட்டிகளில் 3 ஆயிரம் ஓட்டங்கள் மற்றும் 200 விக்கெட்டுக்கள் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். இதுவரை சகிப் 54 டெஸ்டில் 3727 ஓட்டங்கள் எடுத்து, 201 விக்கெட்டுக்களை கைப்பற்றி உள்ளார். இதற்கு முன், இங்கிலாந்து முன்னாள் வீரர் இயன் பொத்தம் 55 டெஸ்டில் இந்த இலக்கை எட்டியதே சா னையாக இருந்தது.

◈ டெஸ்ட் அரங்கில் 200 விக்கெட்டுக்களை கைப்பற்றிய முதல் பங்களாதேஷ் வீரர் பெருமையையும் சகிப் பெற்றார்.

# நியூசி. அசத்தல் பந்துவீச்சு


போல்ட் பந்துவீசும்போது...

டுபாய் டெஸ்டில் நியூசிலாந்து பந்துவீச்சாளர்கள் அசத்த, பாகிஸ்தான் அணி ஓட்டங்கள் சேர்க்க முடியாமல் திணறியது. பொறுப்பாக ஆடிய அசார் அலி, ஹரிஸ் சொகைல் அரைச்சதம் கடந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ..) சென்றுள்ள பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன.

அபுதாபியில் நடந்த முதல் டெஸ்டில் நியூசிலாந்து வென்றிருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் டுபாயில் நடக்கிறது.

**கிராண்ட்ஹோம் அசத்தல்**

பாகிஸ்தான் அணிக்கு கொலின் டி கிராண்ட் ஹோம் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' ஹபீஸ் (9), இமாம் (9) வெளியேறினர். பின் இணைந்த அசார் அலி, ஹரிஸ் சொகைல் ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்பாக ஆடிய அசார் அலி அரைச்சதம் கடந்தார். 3ஆவது விக்கெட்டுக்காக இவ் இணை 126 ஓட்டங்களைச் சேர்த்த போது அசார் அலி (81) 'ரன்-அவுட்' ஆனார். மறு முனையில் கைகொடுத்த ஹரிஸ் சொகைல், தன்பங்கிற்கு அரைச் சதமடித்தார். படேல் 'சுழலில்' ஷபிக் (12) சிக்கினார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களை எடுத்திருந்தது.

# இங்கிலாந்து முன்னிலை


அரைச்சதமடித்த இலங்கையின் கருணாரத்ன

அடில் ரஷிட்டின் அசத்தலான பந்துவீச்சு கைகொடுக்க எஸ்.எஸ்.சி டெஸ்டில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றது.

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற இங்கிலாந்து ஏற்கெனவே தொடரை கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் கொழும்பில் நடக்கிறது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 312 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. மொயீன் 33 ஓட்டங்களில் திரும்பினார். இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 336 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பின் முதல் இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணிக்கு குணதிலக (18) நிலைக்கவில்லை. கருணாரத்ன (83), தனஞ்செய டி சில்வா (73) அரைச்சதம் கடந்தனர். ரஷித் 'சுழலில்' குசல் மெண்டிஸ் (27) சரணடைந்தார். புஷ்பகுமாராவை அவுட்டாக்கிய ரஷித் டெஸ்ட் அரங்கில் 2ஆவது முறையாக 5 விக்கெட் பெறுதியைக் கைப்பற்றினார்.

இலங்கை அணி முதல் இன்னிங்சில் 240 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

96 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 3 ஓட்டங்களை எடுத்து, 99 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. பேர்ன்ஸ் (2), ஜென்னிங்ஸ் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு குணரத்தினம்

(ஓய்வுநிலை ஊழியர் - இலங்கை மின்சார சபை)

மலர்வு:1951.03.24 உதிர்வு:2018.11.23

கணையந்தோட்டம், புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நீண்டியம்பற்றை புலோலி வட கிழக்கு, பருத்தித்துறையை வாழ்விடமாகவும் கொண்ட கார்த்திகேசு குணரத்தினம் அவர்கள் கடந்த 2018.11.23 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதியரின், அன்பு மகனும் நடராஜசிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் பாசமிகு கணவனும் மணிமாறன், மயூரன், மயூரிக்கா (மாணவி ATI Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரசிங்கம் (அகில இலங்கை சமாதான நீதவான்), காலஞ்சென்ற தளையசிங்கம் மற்றும் இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - இலங்கை மின்சார சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஈஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பார்த்திபன் மற்றும் தேன்மொழி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 8.30 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4513)

நீண்டியம்பற்றை,
புலோலி வட கிழக்கு,
பருத்தித்துறை.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்பு:- மகன்
077 711 2868

## தேவை

Air ticketing அலுவலகத்திற்கு Air ticketing இல் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை (25 வயதுக்கு உட்பட்டவர்கள்)
No 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No 160, கோவில் வீதி, நல்லூர்.
(Send CV to sbtravelsjaffna@gmail.com)
தொடர்புகளுக்கு:- 077 108 3481.021 222 9555

## தேவை

JCB ஓட்டுநர் தேவை
தொடர்பு:-
076 133 6610
(6543)


# வாள்வெட்டு குற்றச்சாட்டு நால்வருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

வாள் வெட்டில் ஈடுபட்ட நால்வரையும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை நீதவான் திருமதி. நளினி சுபாகரன் உத்தரவிட்டார். கொடிகாமம் பகுதியில் வேலை முடித்துவிட்டு வட மராட்சியில் உள்ள குஞ்சர் கடையடி நோக்கிப் பயணி த்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்குழுவின் தாக்குதலுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகி ச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் விசார ணையை மேற்கொண்டு வந்த நெல்லியடி பொலி ஸார் கடந்த வியா ழக்கிழமை இரவு நெல்லியடி பேருந்து நிலையப்பகுதியில் வைத்து வரணி பகுதியைச் சேர்ந்த நால்வரை கைது செய்து பருத்தித்துறை நீதவான் திருமதி.நளினி சுபாகரன் முன்னிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்படுத்திய போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)


# Study, Work & Live in CANADA

Admission Interviews
By Founder Donatus Doss of Canadian College
CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

Available Courses
- IT Programmes
- Business Programes
- Supply Chain & Logistics Management

Date : 12th December 2018
Time : 10.00am to 2.00pm
Venue : 4, IBC Road, Colombo 6.
Call : 0777 761 346

Study in EUROPE
Switzerland Spain
Without IELTS Intake: Feb. 2019

Study in SINGAPORE
- Lowest Tuition Fee
- No IELTS
- No Bank Balance
- Min. Qualification O/L

Learn & Earn
Rs. 90,000 per month
During the internship

Visa in 14 Days
விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

Study in AUSTRALIA
Intake: January 2019

வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான
ONLINE VISA APPLICATION
USA, CANADA, UK, DENMARK, NORWAY, SWISS, FRANCE, GERMANY, AUSTRALIA.
* Rejected Visa * Special Occasions * Family & Friends Visit * Business * Tourist * Student

flex Institute
Step Towards a Bright Future
Hotline: 0777-761346
4, IBC Road, Colombo 6. Tel: 011 2364157
E-mail: flexinstitute04@gmail.com
Web: www.flexinstitute.lk Facebook: Flex Institute


## மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைபிரதேச சபைக்குட்பட்ட 12 வட்டாரங்களுக்குமானவீதிமின்விளக்குகள் பொருத்தும் நட வடிக்கை ஆரம் பிக்கப்பட்டு ள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர்அ.சா. அரியகுமார்தெரிவித்தார்.

ச பைக்குட்பட்ட முதல்மூன்று வட்டாரங்களுக்குமான வீதி மின்விளக்குகள்பொருத்தப்பட்ட நிலையில் ஏனைய வட்டாரங்களுக்குமானவீதிமின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையின் உதவியும் பெற்றப்பட விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-19)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி சுமதி சண்முகராஜா



தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்
மேற்தரக்கிளையில்
கடமையாற்றும்
**திரு.சின்னத்துரை சண்முகராஜா**
அவர்களின் அன்புத்
துணைவி
**திருமதி சுமதி சண்முகராஜா**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அவர்கள்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களையும்
ஆறுதல்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்
(6544)

**முகாமையாளரும், ஊழியர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை.**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வில் | உதிர்வில் |
|---|---|
| 1968 | 2017 |
| 12 | 11 |
| 25 | 25 |



## அமரர்.கணேஸ் பாஸ்கரன்

ஆண்டொன்று கழிந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
தந்தையாய் வாழ்ந்தீர்கள்
தலை வணங்கித் துதிக்கின்றோம்
சிந்தையில் மேன்மை கொண்டு சிறப்புடனே வளர்த்தீர்கள்
சொந்தங்களை அணைத்தீர்கள்
சகோதரங்களை நேசித்தீர்கள்–யாவருமே
வெந்து வாடுகின்றோம் உங்களைப் பிரிந்து...
வேண்டுகின்றோம் நீவிர் மீண்டும் வேண்டுமென்று
(6525)

அட்டகிரி வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி-ஆனந்தகுமாரி
பிள்ளைகள்- கரிகாலன்,
கோகிலா, கேமலதா.

# இராசி பலன்

**மீனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பால் அனுகூலமுண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம்.

**மேடம்:** சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைசெய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உடல்நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** சுற்றத்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வியாபாரத்தினை விருத்தி செய்ய முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| செவ் | | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு, சூரி | சுக், புத | |

சந்திராஷ்டமம்
அனுசம்,கேட்டை

**25.11.2018**

கார்த்திகை 09, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 06.11 மணிக்கு
துதியை முற்பகல் 9.09 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 4.27 மணிவரை
சுபநேரம் 9.12- 10.42 மணிவரை
இராகுகாலம் 4.42-6.12 மணிவரை

வளவன்

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**தனுசு:** பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியத்தில் சில இடையூறுகள் எற்படலாம்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியமான நாள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

# வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது



(சாவகச்சேரி)

வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் சாவகச்சேரி கச்சாய் வீதி ஊடாக பயணிப்பதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கச்சாய் வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மதுபானப் போத்தல்களுடன் பயணித்த யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியைச் சேர்ந்த 28 வயதான நபரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து பெறுமதியான 14 வெளிநாட்டுச் மதுபானப் போத்தல்கள் மற்றும் அவர் பயணித்த பல்சர் மோட்டார் சைக்கிள் ஆகியன சாவகச்சேரி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இக்கைதுநடவடிக்கையை பொறுப்பதிகாரி கோணார தலைமையிலான புவனச்சந்திரன் இரத்னாயக்கா, ராங்க, ரோசன், மகேந்திரன் ஆகியோர் உள்ளிட்ட பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். மேலும் வெள்ளிக்கிழமை இரவு மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதுடன், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 58 சாரதிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-30)

# காசோலை மோசடி குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் விடுவிப்பு

(கரணவாய்)

காசோலை மோசடி செய்த நபரை ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் விடுவித்தார்.

நெல்லியடி பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரிடம் நான்கு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பணத்திற்கு வங்கியில் பணமில்லாத நிலையில் காசோலையை வழங்கி மோசடி செய்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபரை கைது செய்த நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை பிணையில் விடுவித்தார். (இ-60)

# மாதாந்த கருத்தரங்கு அமர்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு அமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆனைப்பந்தி குருகுல தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

இதில் அந்தண குருமார்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ


CANADA
WORK PERMIT VISA
கனடாவின் புதிய குடிவரவு கொள்கைக்கு இனங்க
1 மில்லியன் வெளிநாட்டவர்களுக்கு
வேலை வாய்ப்பு!
- CARE GIVERS PROGRAMS
- CARPENTER
- WELDERS
- PLUMBERS
- ELECTRICIANS
- NURSES
- LABORATORY TECHNICIANS
- HEAVY VEHICLE DRIVERS
- TOURIST HOTEL JOBS
- WAITERS
- CHIEFS
- COOKS
- HOTEL HOUSE KEEPING

Qualifications: GCE O/L
Age: 18-55
மேற்குறிப்பிட்ட தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொள்ள ஆலோசனை வழங்குகின்றோம்.
* condition apply
தொடர்புகளுக்கு:
INTERNATIONAL VISA CONSULTANT SERVICE (USA-CANADA)
579/2, Galle Road, Wellawatte, Colombo 6.
Call: 076-769-9191




Pearson University of East London University of Wolverhampton
SCHOLARSHIP
50% FOR 150 MERITORIOUS STUDENTS
பின்வரும் கற்கைநெறிகளுக்கு BCAS Campus இன் 50% புலமைப்பரிசில் திட்டம்.
150 மாணவர்கள் கட்டமைக்கப்பட்ட பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

BUSINESS MANAGEMENT MARKETING | HRM — HND — Leading to BA (Hons) from the UK Universities
QUANTITY SURVEYING — HND — Leading to BSc (Hons) from the UK Universities
COMPUTING — HND — Leading to BSc (Hons) from the UK Universities
BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — HND — Leading to BSc (Hons) from the UK Universities
CIVIL ENGINEERING — HND — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LAW — LLB — Leading to LLB (Hons) from the UK Universities
UGC Recognized TVEC Approved

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
For Registration SMS Your Name & NIC No. 076 395 9910 077 960 3753

| காலம் | இடம் |
| --- | --- |
| 26 NOVEMBER 2018 10.30 AM - 12.00 PM | AUDITORIUM BCAS Jaffna Campus |

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.
20 YEARS ISO 9001:2008 CERTIFIED
021 221 9910 info@bcas.lk www.bcas.lk BCAS Ranked "Platinum Partner" No.1 once again

# பெரும்பான்மையுள்ளவரை என்னை வெளியேற்ற முடியாது

## சனல் 4 ஊடகத்திற்கு ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

எனக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுள்ளது, பெரும்பான்மையுள்ளவரை என்னை வெளியேற்ற முடியாது. நான் பெரும்பான்மையை இழந்தால் மாத்திரமே என்னை வெளியேற்ற முடியும் என ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சனல்-4 சர்வதேச ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவினால் பெரும்பான்மையை நிரூபிக்க முடிந்தால் அவரால் மீண்டும் அலரிமாளிகையைப் பெற முடியும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்திற்கு வருவதால் எவ்வாறான தாக்கங்கள் ஏற்படலாம் என்ற கேள்விக்குப் பதிலளித்துள்ள மங்கள சமரவீர ஒரு சொல்லில் அச்சம் எனக் குறிப்பிடலாம் எனத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவும் அவரது நிர்வாகத்தவர்களும் இந்த நாட்டை ஆட்சி செய்த பத்து வருடங்களில் அச்சத்தின் குறியீடுகளாக விளங்கினார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் கடந்த மூன்று வாரங்களில் மீண்டும் அச்ச உணர்வை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளனர் எனவும் மங்கள தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் மூர்க்கத்தனமாக செயற்பட்டுள்ள விதமும் அதற்கு அவர் மறைமுகமாக ஆதரவளித்துள்ளமையும் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் நிரந்தரமாக பிரதமரானால் எவ்வாறான நிலை காணப்படும் என்பதை மக்களுக்கு உணர்த்தியுள்ளது எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ-4-7)

# கொள்ளைச் சம்பவங்கள் குறித்து கைதானவர் விளக்கமறியலில்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

பல கொள்ளைச் சம்பவங் களுடன் தொடர்புபட்ட துன்னாலை பகுதியைச் சேர்ந்த நபரை கைது செய்த நெல்லியடி பொலிஸார் அவரிடமிருந்து ஆறு பவுண் தங்க நகைகளையும் மீட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

CERTIFICATE COURSE
ஒரே மாதத்தில் நீங்களும் ஒரு
Graphic Designer
New Year Special Offer!
Rs. 7000
Rs. 4000
Till Dec 10th only
■ CorelDraw / Photoshop / Illustrator
flex INSTITUTE
4, IBC Road, Wellawatte. 0777-555026

Canada
பத்திரிகைகளில் உங்களது
மணமகன்/மணமகள் திருமண விளம்பரங்கள்,
தொடர்மாடிமனை, அழகுக் கலை நிலையம்
மற்றும் ஏனைய விளம்பரங்களும்...
சிறந்த முறையில் நியாயமான கட்டணத்தில்
பிரசுரித்திட உடன் அழையுங்கள்
உதயன்
Friday
Free Issue
CANADA 437-488-4100
SRI LANKA 0777-555-026
No. 4-IBC Road, Wellawatte. E-flexvijay@sltnet.lk

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 49 உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:M.B.B.S., வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உள்நாடு<br>தொ.இ: B/9007 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 51 உயரம்: 160 CM<br>தகைமை/தொழில்: B.sc,Computing, தனியார்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும், லண்டன், கனடா, அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/9025 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 30 சூரிசெவ் 1 இல்<br>தொழில்: முகாமையாளர், தனியார்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/9008 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 38 செவ் 8 இல்<br>உயரம்: 4' 11"<br>தகைமை/தொழில்:B.sc,M.sc,Pgdm, N.G.O<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/9027 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்:M.B.B.S, வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், கணக்காளர், வைத்தியர்<br>தொ.இ: B/9009 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/9028 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 30 செவ் 8 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்:O/L,சாரதி, தனியார்<br>தொ.இ: B/9010 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2 கி.பா: 58<br>உயரம்: 165 CM<br>தகைமை/தொழில்:B.A,பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில், வெளிநாடு, (ஐரோப்பா)<br>தொ.இ: G/9029 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கனகரத்தினம் நவநீதன்
திரு. கந்தசாமி தேவகுமாரன்

நல்லூர் பிரதேச செயலகமும், பிரதேச கலாச்சார பேரவையும் இணைந்து நடாத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானசுடர்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட **திரு.கனகரத்தினம் நவநீதன்** அவர்களையும் **திரு.கந்தசாமி தேவகுமாரன்** அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அம்பாளின் அருளாசியினால் மேலும் பல விருதுகள் பெற வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும் (ரூபி ஜூவல்லறி)
227,229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# மாவீரர் தின நிகழ்வுகளை தடை செய்யக் கோரிக்கை

## பூஜிதவின் உதவியை நாடிய பௌத்த தகவல் நிலையம்

(கொழும்பு)

வடக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாவீரர் தின நிகழ்வுகளை தடை செய்வதற்குரிய நீதிமன்ற உத்தரவைப் பெற்றுத் தருமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெய சுந்தரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பௌத்த தகவல் கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அங்குளுகல்லே சிரிஜினாநந்த தேரர் பொலிஸ்மா அதிபரை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அங்குளுகல்லேசிரி ஜினாநந்த தேரர், "நாட்டில் தீவிரவாத அமைப்பொன்றை நினைவுகூருவதற்கு சட்டத்தில் அனுமதி யில்லை. எனவே, மாவீரர் தினம் என்பது அரசமைப்புக்கு முரணான ஒன்றாகும். கடந்த அரசில் சிலர் இதற்கு அங்கீகாரம் அளித்தனர். எனினும், தற்போது, மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதியளிக்க முடியாதென பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளோம்" எனத் தெரிவித்தார். (இ-4-7)



## பாராளுமன்றத் தேர்தலொன்றுக்குச் செல்லும் பிரேரணையைக் கொண்டுவருவோம்-அநுர



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிராகரிக்க ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஜனாதிபதியின் சட்டவிரோத செயலை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர் பாராளுமன்றத் தேர்தலொன்றுக்குச் செல்லும் பிரேரணை ஒன்றை நாங்கள் கொண்டுவருவோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் வழக்கு நடவடிக்கைகளில் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ளவே மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார் எனவும் தெரிவித்தார். நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார். (இ-4-7)

## மைத்திரியை கொல்லச்சதி; கைதான இந்தியர் மனநிலை பாதிக்கப்பட்டவர்

### மருத்துவ அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினரை படுகொலை செய்யும் சதித்திட்டத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தோமஸ் என்ற இந்தியர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று மருத்துவ சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையக உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.





தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த இந்தியரை. அங்கொட தேசிய மனநல மருத்துவ நிறுவாகத்தின் சிரேஷ்ட வைத்திய நிபுணர்கள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த மருத்துவ அறிக்கையிலேயே குறித்த இந்தியர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4-7)




❖1120-இங்கிலாந்து மன்னன் முதலாம் என்றியின் மகனும், முடிக்குரிய இளவரசருமான வில்லியம் அடெலின் பயணஞ்செய்த கப்பல் ஆங்கிலக் கால்வாயில் மூழ்கியதில் வில்லியம் கொல்லப்பட்டான்.

❖ 1783-1783 பாரிசு உடன்படிக்கை: கடைசி பிரித்தானியப் படைகள் நியூயோர்க் நகரை விட்டுப் புறப்பட்டன.

❖1833-சுமாத்திராவில் 8.7 நிலநடுக்கம் ஏற்பட்டது.

❖1839-இந்தியாவில் பலத்த சூறாவளி ஏற்பட்டது. ஆந்திராவின் கொரிங்கா நகரம் முற்றாக சேதமடைந்தது. 30,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

❖ 1867 - அல்பிரட் நோபல் டைனமைட்டுக்குக் காப்புரிமம் பெற்றார்.

❖1987-பிலிப்பைன்சில் நீனா என்ற சூறாவளி தாக்கியதில் 1,036 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

❖1880-லெனார்ட் வூல்ஃப், ஆங்கிலேய அரசியல் கோட்பாட்டாளர், எழுத்தாளர், பதிப்பாளர் (இ. 1969)

❖1915-அகஸ்தோ பினோசெட், சிலியின் 30 ஆவது அரசுத்தலைவர் (இ. 2006)

❖1926-ராங்கநாத் மிஸ்ரா, இந்தியாவின் 21 ஆவது தலைமை நீதிபதி (இ. 2012)

❖1952-இம்ரான் கான், பாகிஸ்தான் துடுப்பாளர், அரசியல்வாதி

❖1956-திருவாரூர் பக்தவத்சலம், தென்னிந்திய மிருதங்க இசைக் கலைஞர்

❖1978-ராக்கி சாவந்த், இந்தியத் திரைப்பட நடிகை

இறப்புகள்

❖1943-இராசா சாண்டோ, தமிழ்த் திரைப்பட நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் (பி. 1894)

❖1950-யொகன்னஸ் வி. யென்சென், நோபல் பரிசு பெற்ற டென்மார்க் எழுத்தாளர் (பி. 1873)

❖1973-வி.ஏ.அழகக்கோன், இலங்கை அரசியல்வாதி (பி. 1903)

❖1984-வை.பி.சவாண், இந்தியாவின் 5 ஆவது துண்ணைப் பிரதமர் (பி. 1913)

❖ 2014-சிதாராதேவி, இந்திய நடிகை, நடனக் கலைஞர் (பி. 1920)

❖ 2016-நஷனல் செல்லையா, தென்னிந்தியத் திரைப்பட ஒளிப்படக் கலைஞர் (பி. 1936)

சிறப்பு நாள்

❖ விடுதலை நாள், (சுரிநாம், நெதர்லாந்திடம் இருந்து 1975)

❖பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 300 | 180 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 350 | 320 | 400 |
| தக்காளி | 400 | 450 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 160 | 140 | 150 | 150 | 200 |
| கரட் | 150 | 200 | 200 | 250 | 400 |
| பூசணி | 80 | 50 | 40 | 40 | 80 |
| புடோல் | 140 | 150 | 100 | 150 | 120 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 200 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 110 | 95 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 320 | 240 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 120 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 300 | 450 | 300 | 330 | 300 |
| லீக்ஸ் | 200 | 230 | 160 | 200 | 280 |
| பீற்றூட் | 200 | 180 | — | 60 | 240 |
| கறிமிளகாய் | 300 | 350 | 300 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 500 | 800 | — | 300 | 400 |
| போஞ்சி | 200 | 240 | 160 | 270 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | — | 170 | 160 |
| கீரை-1பிடி | 70 | 60 | 70 | 30 | 80 |
| தேசிக்காய் | 500 | 450 | 450 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 35-40 | 35 | 25-40 |
| இராசவள்ளி | 280 | 260 | — | 220 | 240 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 45 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 70 | 130 | 80 |

# ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்கும் கனவில் சபாநாயகர் கரு

## நாடாளுமன்றை குழப்ப அதுவே காரணம்-யாப்பா

(கொழும்பு)



**ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கும் கனவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய பாராளுமன்றத்தையும் நாட்டையும் குழப்பியடித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் சபாநாயகர், ஐ.தே.கவின் நிகழ்ச்சி நிரலை பின்பற்றி வருவதன் மூலம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க பொது வேட்பாளராக களமிறங்குவதே அவரது கனவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகரின்மருமகனான நவீன் திசாநாயக்க எம்.பி ஊடகங்களில்அதனை உறுதி செய்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் அறிவிப்பை முதல் இரண்டு நாட்களும் ஏற்றுக்கொண்ட சபாநாயகர் பின்னர் வெளிநாட்டு தூதுவர்களின் அறிவுரைகளைக் கேட்டே அதனை மறுக்க ஆரம்பித்ததாகவும் யாப்பா தெரிவித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஐ.தே.க.தயாரென்றால் இடைக்கால அரசாங்கத்தின் கீழ் பாராளுமன்றத் தேர்தலை நடத்த நாம் தயாராகவுள்ளோம். ஜனாதிபதியின் தீர்மானத்தின் சரி, பிழையை தீர்மானிக்கும் அதிகாரம் மக்களுக்கே உள்ளது.

ஆனால் ஐ.தே.க. மக்களிடம் சென்று வாக்கு கோருவதற்கு அஞ்சி தேர்தலுக்கு பின் வாங்குகின்றது. தெரிவுக்குழுவை நியமிக்கும் பொருட்டே பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது.

தெரிவுக்குழுவில் ஆளும் கட்சிக்கே பெரும்பான்மையளிக்கப்படுவது வழமை. அதற்கமைய 12 உறுப்பினர்களில் 07 பேர் ஆளும் கட்சியை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். மிகுதி 05 பேரும் எதிர்க்கட்சியிலிருந்து தெரிவாக வேண்டும்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி பிரதமரை தெரிவு செய்யும்போது ஐ.தே.கவுக்கு 41 உறுப்பினர்களே இருந்தனர். அப்படியிருந்தும் சபாநாயகர் ஐ.தே.கவுக்கே 07 பெரும்பான்மையை வழங்கினார். ஆனால் இன்று அவர் அரசாங்கம் சார்பில் 07 பேரையும் எதிர்க்கட்சி சார்பில் 05 பேரையும் நியமித்துள்ளார்.

தேவையில்லாத பிரச்சினைகளை தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே நாம் பாராளுமன்றத்திலிருந்து எழும்பிச் சென்றோம். தெரிவுக்குழுவுக்கு வாக்கெடுக்கும்பொழுது சபாநாயகர் என்றுமில்லாதவாறு அதிக நேரத்தை எடுக்கப்பார்த்தார்.

இது தெரிவுக்குழுவுக்கான வாக்கெடுப்பு மட்டுமேயாகும். இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 16 பேரும் ஜே.வி.பியின்06 பேரும்உள்ளனர் அந்த வாக்குகளை குறைத்து மதிப்பிட்டால் உண்மையான நிலையை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் யாப்பா தெரிவித்தார். (இ-7)

# சபாநாயகரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## செல்வம் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிராக சபையில் அரங்கேறிய செயற்பாடுகளுக்கு கட்சிபேதம் பார்க்காது விசாரணைகளை முன்னெடுத்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் வலியுறுத்தியுள்ளது. அத்துடன், சபாநாயகரின் பாதுகாப்பு இனிவரும் காலங்களில் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி சபை கூடியபோது இடம்பெற்ற சம்பவங்களும், சபாநாயகருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்தமையும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மீது தாக்குதல்களை நடத்தியதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடாளுமன்ற குடும்பத்துக்குத் தலைவரான சபாநாயகருக்குப் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருந்தமை குறித்து நாம் கவலைப்பட வேண்டும்.


சிலர் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தனர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு மாவட்டத்தின் சார்பில் தான் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுகின்றார். அவரின் நடவடிக்கை சரியில்லை என்றால் மாவட்ட மக்களின் நடவடிக்கையும் சரியில்லை என்பதே பொருள்படும்.

இந்தச் செயல்கள் எம்மை தலை குனிய வைத்துள்ளன. அதேபோல் கடந்த 16ஆம் திகதி சபாநாயகரின் கதிரைகள், சட்ட புத்தகங்கள் வீசியெறிப்பட்டமை மிக மோசமான செயல்.

மிளகாய்த் தூள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றில் அதனை வாங்க முடியுமா? என்று வெளியில் கேட்கின்றனர். அந்த நிலைக்கு நாடாளுமன்றம் தள்ளப்பட்டுள்ளமை குறித்து கவலையடைகின்றோம்.

சபாநாயகருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனவே, வன்முறையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். (இ-7)

# மைத்திரியை ஆபாச வார்த்தைகளால் திட்டிய மகிந்த அணியின் உறுப்பினர்கள்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம்நேற்று முன்தினம்மாலை இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை கடுமையாக சாடியதாக தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி. திஸாநாயக்க மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியாது அவமதிப்புக்கு உள்ளானமையே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பெரும்பான்மை பலம் இருப்பதாக கூறி, எஸ்.பி.திஸாநாயக்க, மகிந்த ராஜபக்ஷவை சிக்கலில் மாட்டி விட்டதாக கூறியுள்ள ரஞ்சித் சொய்சா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், எஸ்.பி. திஸாநாயக்கவையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஆபாச வார்த்தைகளால் திட்டியுள்ளனர்.

தூரநோக்கமற்று எடுத்த தீர்மானம் காரணமாக மகிந்த ராஜபக்ஷவுக்கு திருட்டு பிரதமர் என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தான் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் சூழ்ச்சி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் என முத்திரை குத்தப்படுவதாகவும் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வளர்க்கப்பட்ட கட்சியும் அதிகார பேராசையின் முகாம் என சமூகத்தில் விமர்சிக்கப்படுவதாகவும் இதன் காரணமாக மக்கள் மத்தியில் கட்சி பெற்றிருந்த ஆதரவு குறைந்து விட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் அவதூறு, அவமதிப்பை சந்திப்பதா? இல்லையா? என்பது குறித்து உடனடியாக தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி போராட்ட பைத்தியங்கள் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான உறவை விரைவாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# திட்டமிட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்



(லண்டன்)

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரை சந்தித்து இலங்கை தொடர்பில் கலந்துரையாடிய தமிழ் தகவல் நடுவத்தின் உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.

பாராளுமன்ற உறுப்பினர் வீரேந்திர சர்மாவின் அலுவலகத்தில் தமிழ் தகவல் நடுவத்தின் உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி சந்திப்பில் பிரித்தானிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கைக்கான ஆயுத விற்பனையை நிறுத்தக்கோரியும், இலங்கை சிங்கள அரசாங்கத்தினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதனையும், தொடர்ந்து ஈழத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற சித்திரவதைகளும் துன்புறுத்தல்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் இச்சந்திப்பில் ஈழத்து கவிஞர் புதுவை இரட்ணதுரை இராணுவத்தினால் காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பில் அவரின் சகோதரர் விமலேந்திரம் சாட்சியும், கடந்த மாதம் மன்னாரில் வசந்தராஜன் பீரிஸின் மனைவி பிள்ளைகளுக்கு இராணுவப் புலனாய்வாளர்களினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயங்கள் தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு கொண்டு வருவதற்காக பாராளுமன்ற உறுப்பினரின் ஆதரவும் வேண்டப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் தனது பூரண ஆதரவினைத் தருவதாகவும் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.


இச்சந்திப்பில் தமிழ் தகவல் மையத்தின் செயற்பாட்டாளர்களும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுமான பிரான்சிஸ் வசந்தராஜன், சிதம்பரநாதன் சைலேசன், கந்தசாமி விமலேந்திரம், சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியல் நிலைமையால் இலங்கைக்கு அவப்பெயர்

## ஆதிவாசிகளின் தலைவர் கவலை

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை காரணமாக உலக அரங்கில் இலங்கை கேலிக்குரிய ஒன்றாக மாறியுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர்உருவரிகேவன்னில



அத்தன் தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்கள் நாட்டை நிர்வகிக்கும் போது முன்னெடுக்கும் நடவடிக்கைகளே இந்நிலைக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

புத்திஜீவிகள் அமைப்பொன்றுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சகல சமயத் தலைவர்களும் ஒன்றிணைந்து நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அரசியல் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்க முன்வர வேண்டும் எனவும் ஆதிவாசிகளின் தலைவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இடி விழுந்தாலும் பரவாயில்லை அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்றே ஜனாதிபதி நினைக்கிறார்

## ஐ.தே.க.எம்.பி.சுஜீவ விசனம்

(கொழும்பு)

அதிகார மோகத்தில் மக்களை, நாட்டினை மறந்து செயற்பட்டு வருகின்றனர். நாட்டில் இடி விழுந்தாலும் பரவாயில்லை நான் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்றே ஜனாதிபதி நினைக்கின்றார் என சுஜீவ சேனசிங்க எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சுஜீவ சேனசிங்க எம்.பி, மேலும் தெரிவிக்கையில்,



இன்று ரூபாவின் விலை பாரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. கடன் சுமை அதிகரித்து வருகின்றது.

இதனைப் பொதுமக்களே சுமக்க வேண்டியுள்ளது. ஆகவே சட்டவிரோத பிரதமர் ஒருவரை வைத்துக்கொண்டு ஜனாதிபதி ஆட்சி செய்து வருகின்றார். நாம் மீண்டும் எமது பெரும்பான்மையை நிரூபித்துவிட்டோம்.

எனவே ஜனாதிபதி இப்போதே அரசியல் அமைப்பினை மீறி நாட்டினை நாசமாக்கிவிட்டார்.

ஆனால் இப்போதும் காலம் உள்ளது. ஜனாதிபதி விட்ட தவறை சரி செய்ய ஒரு வாய்ப்பு உள்ளது. காலம் கடந்துவிட்டது. ஆனால் காலம் கடந்தேனும் அவர் மக்களுக்காக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-7)

# பாராளுமன்றம் 7 ஆம் திகதி கலைக்கப்படும் அதுவரையே சபாநாயகர் கருவின் ஆட்டம்

## மகிந்த அணி நம்பிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற்கட்டளை, நீதிமன்றம் ஆகியவற்றை மீறி ஸ்ரீகொத்தவின் விருப்பத்திற்கிணங்கவே சபாநாயகர் கரு ஜெயசூரிய செயற்படுவதாக அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த நிலை தொடருமானால் அதற்குப் பதில் கொடுக்க நாம் தயாராகவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆளும் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

சபாநாயகர் அரசியலமைப்பிற்கிணங்க செயற்பட வேண்டியது அவசியம். அதே வேளை அவர்நிலையியற் கட்டளைக்கிணங்க செயற்பட வேண்டும். மூன்றாவதாக அவர் பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவாக செயற்படுவது முக்கியமாகும்.

இந்த மூன்று முறைமைகளையும் அலட்சியப்படுத்தி செயற்பட்டதாலேயே நாம் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தோம். பாராளுமன்றம் 7ஆம் திகதி கலைக்கப்பட்டுவிடும். அதுவரையே அவர் இவ்வாறு செயற்படுவார். 7ஆம் திகதி நீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கும்.

பாராளுமன்றத்தின் வரலாற்றில் தெரிவுக்குழுக்களை நியமிப்பதற்கு ஒரே முறையிலான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. தற்போது சபையில் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரது விருப்பத்திற்கிணங்கவே சபாநாயகர் சபையில் செயற்பட்டுள்ளார். இதன் மூலம் ஸ்ரீகொத்தவுக்கு விருப்பமான விதத்திலேயே சபாநாயகர் செயற்பட்டு வருகிறார்.



இது தொடருமானால் அதற்குப் பதில் கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

**கெஹலிய ரம்புக்வெல எம்.பி**

கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய பிரதமரையும் அமைச்சரவையையும் நியமித்தார். அரசியலமைப்பிற்கிணங்கவே



அவர் செயற்பட்டார் என்பதை சட்ட மா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. அதன்பின்னர் அரசியலமைப்பிற்கிணங்க பாராளுமன்றத்தைக் கலைத்தார். இந்த அரசியலமைப்பினூடான செயற்பாடுகளே சவாலுக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இந்த சவாலுக்கு இணங்க இடைக்காலத் தடையொன்று பிறப்பிக்கப்பட்டது. இது தேர்தல் ஆணையாளரின் தீர்மானம் வெளியிடப்படும் வரையே இந்த தடை பிறப்பிக்கப்பட்டது. இது இறுதித் தீர்மானமல்ல.

அரசியலமைப்பை கௌரவிப்பவர்கள் பாராளுமன்ற சம்பிரதாயங்களை மதிப்பவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்? என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி. சட்டவாக்கத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையில் ஏதாவது பிரச்சினைகள் உள்ளதாக சபாநாயகர் கருதினால் இரண்டையும் சமமாகப் பார்த்து அவர் செயற்படுவது முக்கியம்.

அதைவிடுத்து நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மட்டும் வைத்துக்கொண்டு செயற்படுவது தவறானது.

நாட்டை மிக மோசமானதாக சர்வதேசத்திற்கு காட்டும் செயற்பாட்டின் முக்கிய பொறுப்பு சபாநாயகரையே சாரும். இந்த வகையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து அதற்காகக் காத்திருக்கும் எமக்கு ஒழுக்கமாக செயற்படவேண்டியதையும் எதிர்பார்க்கிறோம்.

அதனை தெளிவுபடுத்த இன்று நாம் சபையில் முயற்சித்த போதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படும் சபாநாயகருக்கு அது புரியாது. அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படும் ஒருவர் சபாநாயகராக செயற்பட முடியுமா? என்பதே எமது கேள்வி. அழுத்தங்களுக்கு உட்பட்டு நடுநிலையாக செயற்படுவார் என நாம் ஏற்கமுடியாது.

**அமைச்சர் விமல் வீரவன்ச**

பிரதமரை பிரதமர் என கூறமுடியாத சபாநாயகர் ஆளும்கட்சி பிரதம கொறடாவை அந்தப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டு அழைக்க முடியாத சபாநாயகர் சபை



யில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் என குறிப்பிட்டதை காண முடிந்தது.

பிரதமர் மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா இல்லாதபோது எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் எப்படி வந்தார்? என நாம் கேள்வி எழுப்புகின்றோம். இதன் மூலம் சபாநாயகரின் நடிப்பு சிறப்பாக வெளிப்படுகிறது. அவரது கொள்கையும் அதுதான். இத்தகைய சபாநாயகரோடு பாராளுமன்றத்தை முன்னெடுக்க முடியாது. இவர் மூலம் பிரச்சினைகளை நீதியாக தீர்க்க முடியாது என்பது உறுதியாகிறது.

அதனால்தான் நாம் அவர்களது நாடகங்களுக்கு இடமளித்து விட்டு சபையிலிருந்து வெளியேறினோம். நீதிமன்றம் அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைய மீறி செயற்படும் சபாநாயகருக்கு எதிராக நாட்டின் இறையாண்மை



யுள்ள நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும்.

**டளஸ் அழகப்பெரும எம்.பி**

சபாநாயகரிடமிருந்து நிறைவேற்று அதிகாரத்தைப் பாதுகாக்கும் மோதல் இது. ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்கு வாக்களிக்கத் தயாராக எத்தனை உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர்?

ஜே. வி.பி. 6 பேர், த. தே. கூட்டமைப்பு 14 என 20 பேரை விலக்கிப் பார்த்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 101 ஆசனங்களே உள்ளன.

பாராளுமன்ற வரலாற்றை நோக்குகையில் பெரும்பான்மையற்ற ஆளும்கட்சி இருக்கும் போதும் சபாநாயகர் தெரிவுக்குழுவை நியமித்துள்ளனர். இந்த வகையில் அதனைப் பின்பற்றி தற்போதைய சபாநாயகர் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

# சமலின் அமைச்சுக்கு மைத்திரி திடீர் விஜயம்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக முன்னெடுக்கப்பட்டுவரும் பிரசாரங்களின் உண்மைத் தன்மை தொடர்பாக கண்டறிவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் முற்பகல் சுகாதார அமைச்சுக்கு திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

அங்கு சுகாதார அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடலொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி, இலவச சுகாதார சேவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பலவீனமடைவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் நாட்டின் பொதுமக்களுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை பலமாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஒரு துறையில் ஏதேனும் ஒரு குறைபாடு இருக்குமானால் அவற்றைச் சரிசெய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அடுத்துவரும் சில மாதங்களுக்குப் போதுமான அளவில் மருந்துப் பொருட்களைப் பேணி வருவதற்கு தேவையான தீர்மானங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மக்களைக் குழப்பும் வகையில் சில தரப்பினரால் முன்னெடுக்கப்படும் இத்தகைய போலிப்பிரசாரங்களை முறியடித்து, மக்களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அதனைத் தவிர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்ற நிலைமைகள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்தார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டு சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக குறித்த பிரிவினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், சிறுநீரக நோயை ஒழிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள விரிவான நிகழ்ச்சித் திட்டங்களே அதற்குக் காரணம் என்றும் குறிப்பாக சிறுநீரக நோய் பரவிவரும் பிரதேசங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு சிறுநீரக நோய் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் பலப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சிறுநீரக நோயாளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்காக கண்டி மற்றும் அநுராதபுர வைத்தியசாலைகளுக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தங்குமிட விடுதிகளின் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி நுவரேலியா மற்றும் அம்பாந்தோட்டை வைத்தியசாலைகளை மக்களிடம் கையளிப்பதற்கு ஏற்படும் தாமதம் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும் போதைப் பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு சுகாதாரத் துறையின் நடவடிக்கைகள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

பாடசாலை பிள்ளைகளின் சுகாதார மற்றும் போசணை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கண்காணிக்கப்பட்டதுடன், அடுத்த வருடம் முதல் பாடசாலை பிள்ளைகளுக்கு பால் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

சுதேச வைத்திய துறையின் முன்னேற்றம் மற்றும் அதன் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (இ-4-7)

# சர்வதேசத்தின் ஊடாகவே தீர்வு

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நம்பிக்கை

(கொழும்பு)

தற்போதைய இலங்கை அரசியல் சூழ்நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் தீர்வை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டுமென காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளன.

கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 625 ஆம் நாளினை எட்டியுள்ளதென காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எமது பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வை பெற்றுத்தருமென நம்பி தொடர்ந்து ஏமாற்றம் மாத்திரமே அடைந்துள்ளோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தங்களது பிள்ளைகளை எப்படியாவது கண்டுபிடிக்க முடியுமென்ற நம்பிக்கை மற்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்காகவே நாம் இப்போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோமென காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால் இவ்விடயத்தில் அரசாங்கம் நம்பிக்கையான நடவடிக்கைகளை எதனையும் மேற்கொள்ளவில்லை.

ஆகையால் சர்வதேசம் இவ்விடயத்தில் விரைவாக தலையிட்டு எமது பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டுமென காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளன. (இ-7-281)

# ரணிலுடன் வெற்றியளிக்காத அரசியல் பயணம் ஜனாதிபதியின் நூல் வெளியீடு ஜனவரியில்

(கொழும்பு)

'ரணிலுடன் வெற்றியளிக்காத அரசியல் பயணம்' எனும் நூலை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பிலும் தம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மைதானத்தில் தனியே இருந்து விளையாடியதைப் போல நாடாளுமன்றத்தில் முழுநாளும் இருந்தனர்.

நாடாளுமன்றத்தில் இருக்காத என்னை அவர்களின் உரைகளின் ஊடாக விளையாட்டுப் பொருளாக்கியதை நான் பார்த்தேன். எனது மகள் எழுதிய 'ஜனாதிபதி தாத்தா' எனும் நூல் நாடாளுமன்றத்தில் பேசு பொருளாக்கி குழப்பமடைய வேண்டாம் என அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'ரணிலுடன் வெற்றியளிக்காத அரசியல் பயணம்' எனும் நூலை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடவுள்ளேன். ஜனவரி மாதம் அதனையும் வாசிக்குமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த நாட்களில் எவ்வாறெல்லாம் என்மீது விமர்சனங்கள் முன்வைக்கின்றார்கள் என நான் பார்த்தேன்" எனத் தெரிவித்தார். (இ-4-7)

# தொழிலாளர்களின் சம்பள விவகாரம் நாளை மீண்டும் பேச்சுவார்த்தை



(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாளை திங்கட்கிழமை பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளதாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நிதியமைச்சில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையிலும் 600 ரூபாய் என்ற அடிப்படை நிலைப்பாட்டில் தான் முதலாளிமார் சம்மேளனம் இருந்தது.

ஆனால் எம்மைப் பொறுத்த வரை தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாய் என்பதேயாகும்.

மேலும் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாளை திங்கட்கிழமை திறைசேரியில் பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது.

குறித்த பேச்சுவார்த்தைக்கு முதலாளிமார் சம்மேளனத்தையும் தொழிற்சங்கங்களையும் நிதியமைச்சு அழைத்துள்ளது.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும்" என ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். (இ-4-7)

# சபாநாயகரின் மேசையை தீவிரமாக சோதனையிட்ட நாய்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனங்கள் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் மோப்ப நாய்களினால் சபாநாயகரின் மேசை மற்றும் கதிரை சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களின் மேசைக்குள் புகுந்து நாய்கள் சோதனையிட்டுள்ளன.

சபாநாயகரின் மேசை மீது மற்றும் மேசைக்கு கீழ் கடுமையான சோதனைகளை மேற்கொள்வதற்கு விசேட அதிரடிப்படையினரின் நாய் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அனைத்து உறுப்பினர்களின் மேசை, கதிரை மற்றும் ஆவணங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் நுழையும் பகுதியில், உத்தியோக பூர்வ இலக்க தகடுகள் கொண்ட பொலிஸ் அதிகாரிகள் உறுப்பினர்களை முழுமையாக சோதனையிட்டுள்ளனர்.

அத்துடன் நாடாளுமன்ற வளாகத்தில் ஏனைய நாட்களை விடவும் அதிக பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ-4-7)

# மகிந்தவை விட மிகவும் ஆபத்தானவர் மைத்திரி

(கொழும்பு)



மகிந்த ராஜபக்ஷவை விட மிகவும் ஆபத்தானவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளதாக பிரபல நடிகையான சமனலி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் கலைஞர்களாக ஒன்றையும் எதிர்பார்க்காமல் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக வேலை செய்தோம். இந்த அனைத்தையும் ஜனாதிபதி காட்டிக் கொடுத்திருப்பது வருத்தமாகவுள்ளதாகவும் நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

சுத்தமான அரசியல் ஒன்றை மேற்கொள்வார் என்ற எண்ணத்தில் நாங்கள் மைத்திரியை அதிகாரத்திற்கு கொண்டு வரவில்லை. எனினும் சில மாற்றங்களை பொதுமக்களின் அழுத்தங்களுக்கமைய செய்வார் என எதிர்பார்த்தோம்.

மகிந்த ராஜபக்ஷவின் கலாசாரத்தை இல்லாமல் செய்ய முடியும் என்ற உணர்வு எங்களுக்கு இருந்தது. எனினும் இந்த நேரத்தில் மைத்திரிபால சிறிசேன என்பவர் மகிந்த ராஜபக்ஷவை விட ஆபத்தானவராகியுள்ளார்.

அண்மையில் பாதுகாப்பு பிரிவு பிரதானி ஒருவருக்கு தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தச் சம்பவம் மிகவும் ஆபத்தான ஒன்றாகும்.

அனைத்திலும் உள்ள ஆபத்து மக்களுக்கு புரிகின்றதா? எனத் தெரியவில்லை. இந்த அரசியலில் ஆபத்து வேறு தளத்தில் உள்ளது.

எப்படியிருப்பினும் ஐக்கிய தேசிய கட்சியினரும் கடந்த காலங்களில் தங்களுக்கு கிடைத்த மக்கள் பலத்தை வீணடித்து விட்டார்கள் என்பதனைக் கூறவேண்டும்.

ஜனாதிபதியை தனிமைப் படுத்தவும் அவர்கள் செயற்பட்டிருப்பர். ஜனாதிபதியின் காட்டிக்கொடுப்பை நியாயப்படுத்த நான் இதனைக் கூறவில்லை. அடுத்த தரப்பும் சுத்தம் இல்லை என்பதனை நினைவுபடுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4-7)

# பொது மலசலகூடத்தில் மின்குமிழ்கள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொது மலசலகூடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களை விஷமிகள் கழற்றிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டு வருடமாக மூடப்பட்டிருந்த குறித்த பொது மலசலகூடம் பொதுமக்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து அண்மையில் நகரசபையினரால் திறந்து விடப்பட்டிருந்தது. இந்நிலையில் அங்கு புதிதாகப் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களை விஷமிகள் திருடிச் சென்றுள்ளனர். இதனால் இரவு வேளைகளில் பொது மலசலகூடத்தைப் பாவிப்போர் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திப்பதாகத் தெரிவித்துள்ளனர். (இ-30)

# ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைப்பத்திரங்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லையென இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

விடைப்பத்திரங்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அச்சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜெயசிங்க மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் சுமார் 3 மாதங்கள் தாமதமடைந்துள்ள கொடுப்பனவை விரைவில் வழங்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தெரிவிக்கையில், "ஆசிரியர்களுக்கு கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் கொடுப்பனவு வழங்கப்படும்" என சனத் பி பூஜித ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த அணியின் பட்ஜெட் தோற்கடிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டிலுள்ள சீதாவாக்கபுர நகர சபையின் வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

சீதாவாக்கபுர நகர சபையில், பொதுஜன பெரமுனவுக்கு 11 ஆசனங்களும், ஐ.தே.கவுக்கு 11 ஆசனங்களும் ஜே.வி.பிக்கு ஒரு ஆசனமும் உள்ளது.

இங்கு ஆட்சியமைத்துள்ள பொதுஜன பெரமுனவின் சார்பில் நியமிக்கப்பட்ட நகரசபைத் தவிசாளர் ரணவீர நேற்று முன்தினம் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்தார்.

வரவு-செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 11 உறுப்பினர்கள் ஆதரவாகவும் ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் 12 பேர் எதிராகவும் வாக்களித்து வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடித்தனர்.

கொழும்பு அரசியல் குழப்பங்கள், உள்ளூராட்சி சபைகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது குறிப்பிடத்தக்கது. (இ-4-7)

# கிளிநொச்சி மாவட்டத்தில் தத்திகளின் தாக்கம் அதிகம்

## வேகமாக பரவி வருவதால் அவதானம் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் வெண் முதுகுத் தத்தி மற்றும் கபில நிறத் தண்டுத் தத்தியின் தாக்கம் வேகமாக பரவி வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இத் தாக்கமானது திருவையாறு, பன்னாங்கண்டி, பெரிய பரந்தன், பூநகரி ஆகிய பிரதேசங்களிலுள்ள நெற்பயிர்ச் செய்கையில் காணப்படுவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


இதைக் கட்டுப்படுத்துவதற்கு ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு செயற்பாடுகள் அந்தந்த பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

### கபிலநிற தத்தியின் தாக்கம்

கபிலநிற மற்றும் வெண் முதுகுத் தண்டுத் தத்திகளின் தாக்கத்தின்போது முதலில் நெற்பயிர்கள் ஆங்காங்கே மஞ்சள் நிறமாகும்.

பின்னர் கபிலநிறமாக மாறி தொடர்ந்து வைக்கோல் நிறமாகி தொட்டம் தொட்டமாக எரிந்தது போன்று தோற்றமளிக்கும். இந்நிலையினையே தத்தி எரிவு என அழைப்பர்.



வெண்முதுகுத் தத்தி கபில நிறத் தண்டு தத்தி

இந்நிலைமஏற்படும்வரை காத்திருக்காமல் உங்கள் நெற்பயிர்களை அவதானித்து தத்திகள் காணப்படுமாயின் விரைந்து நடவடிக்கை எடுக்கவும். இல்லாவிடில் நெற்பயிர் முற்றாகச் சேதமடையலாம்.

அணங்குகள் நிறையுடலிகள் நெற்பயிரின் அடிப்பகுதியில் நீர் மட்டத்திற்கு அண்மையில் இருந்து சாற்றை உறிஞ்சி குடிக்கும்.

பூப்பதற்கு முன்னர் சிறிய செட்டைகள்ள கொண்ட கபில நிற தத்திகள் அதிகளவில் காணப்படும் நெற்பயிர் முதிரும் போது நீண்ட செட்டைகள் கொண்ட கபிலநிற தத்திகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இவ் அறிகுறிகள் தோன்ற முன்னர் நெற்பயிரை நன்கு அவதானித்து அடிப்பகுதியில் காணப்படும் தத்திகளை அடையாளம் கண்டு உடனடியாக கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவும்.

### எவ்வாறு கட்டுப்படுத்தலாம்...

ஒவ்வொரு நாளும் நன்கு வயலை அவதானித்து ஆரம்பத்திலேயே தத்தியின் தாக்கத்தை அடையாளம் கண்டு உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.

கண்டத்திலுள்ள விவசாயிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவும்.

வரம்பிலுள்ள களைகளை கட்டுப்படுத்தவும்.

தாக்கத்தை ஏற்படுத்தும் பூச்சிகள் பயிரின் அடிப்பகுதியல் காணப்படுவதால் சால்களாக பிரித்து பயிரின் அடிப் பகுதியில் மருந்துபடும்படி பூச்சிநாசினிகளை விசிறவும்.

இயலுமானவரை நீரை வடிய விட்டபின்னர் பூச்சி நாசினிகளை விசிறவும்.

இலைகளில் நிறச்சுட்டிக்கு அமைய யூரியா பசளைகளை தேவையான அளவில் மட்டும் இடவும்.

| பூச்சிநாசினிகள் | கலவை அளவு 16 லீற்றர் நீர். தாங்கிக்கானது | ஏக்கருக்கு விசிற வேண்டிய அளவு |
|---|---|---|
| தயமெதொக்சாம் | 4g | 40 g-50g |
| குளோரன்தனியுபுரோல்+தயமெதக்சாம் | 5g | 40g-50g |
| தையோசைக்கிளம் | 40g | 320g-400g |
| இமிடாகுளோபிறிட் | 15ml | 65ml-80ml |
| லாமட்டசைகுளோத்திரின் | 25ml | 120ml-140ml |

பின்வரும் சிபார்சு செய்யப்பட்ட பூச்சிநாசினிகளில் ஏதாவதொன்றை விசிறவும்.

பல பூச்சிநாசினிகளை ஒன்றாகக் கலந்து விசிற வேண்டாம். மண்ணெண்ணெய் மற்றும் கழிவுஎண்ணெய் விசிறுவதை முற்றாக நிறுத்தவும்.

மேலதிக தகவல்களை அருகிலுள்ள விவசாயப் போதனாசியரிடம் அணுகிப் பெற்றுக்கொள்ளவும்.

அத்துடன் 077 789 8271, 021 228 5726 எனும்தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் பெற்றுக்கொள்ள முடியும். (2)

# கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கு விரைவில் நிரந்தர தீர்வு கிடைக்கும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டு ஆரம்பக் கட்டப்பணிகளோடு கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பேருந்து தரிப்பிடத்தை மக்களின் வேண்டுகோளிற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்றையதினம் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்டத்தின் பல பொது அமைப்புகளையும் பொது மக்களையும் சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிந்து கொண்டார்.

இதன்போது கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் ஆரம்பக்கட்டப்பணிகளோடு கைவிடப்பட்டதையும் சேறும் சகதியுமாக அவ்விடம் காணப்படுவதால் நடத்துநர்களும் பயணிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் கிளிநொச்சி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மக்களது கோரிக்கைக்கு இணங்க குறித்த பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் துறைசார் அதிகாரிகளிடம் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் காலக்கிரமத்தில் அதன் பணிகளைப் பூர்த்தி செய்து மக்களது பாவனைக்கு ஏற்ற வகையில் குறித்த பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (2)

# கத்தி, பைப், கோடரிகளுடன் பயணித்த ஆட்டோ மடக்கிப்பிடிப்பு

## ஆவா குழுவா என சந்தேகம்

(பனிக்கன்குளம்)

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் ஆட்டோவில் பல ஆயுதங்களுடன் சென்ற நபரை நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் துரத்திப்பிடித்து கைது செய்துள்ளனர்.

குருமன்காட்டுப்பகுதியில் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த சமயத்தில் ஆட்டோ ஒன்று அதிவேகமாக பயணித்தது. போக்குவரத்து பொலிஸார் ஆட்டோவை மறித்த போதிலும் நிற்காமல் சென்றுள்ளது.




குறித்த ஆட்டோவைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்ற பொலிஸார் வவுனியா நகரப் பகுதியில் வைத்து மடக்கிபிடித்து அதனைச் சோதனைக்குட்படுத்தினார்கள்.

இதன் போது கூரிய கத்தி, கோடரி, பைப் போன்றவற்றை பொலிஸார் கைப்பற்றியதுடன் வாகனத்தினை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

அத்துடன் சாரதியையும் பொலிஸார் கைது செய்து பொலிஸ் தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.

ஆட்டோவில் எதற்காக இவ்வாறான பொருட்கள் மற்றும் குறித்த நபருக்கும் ஆவா குழுவிற்கும் தொடர்புகள் உள்ளதா? இரவு நேரத்தில் இவ்வாறான பொருட்களுடன் பொலிஸார் நிறுத்துமாறு தெரிவித்த போதிலும் எதற்காக அதிவேகமாக பயணித்தார் என்ற பல்வேறு கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் வவுனியா தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

# கரைச்சி பிரதேச சபையினால்

## 2 ஆயிரம் பயன்தரும் மரக்கன்றுகள் நடுகை செய்யும் வேலைத்திட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் தேசிய மர நடுகை மாதத்தை முன்னிட்டும் புனித நாட்களை அனுஷ்டிக்கும் வகையிலும் இரண்டாயிரம் பயன்தரு மரக் கன்றுகளை நடுகை செய்யும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கார்த்திகை மர நடுகை மாதத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால்பயன்தருமரங்கள்நடுகை செய்வதற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.

சுமார்மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஆயிரத்து 500 மா மரக் கன்றுகள் உள்ளடங்கலாக இரண்டாயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலி கிதன் தெரிவித்துள்ளார். (2-315)

# நீர் இணைப்புக்கள், குடிநீர் கிணறுகள் அமைக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் 243 குடும்பங்களுக்கான நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன். 28 குடும்பங்களுக்கு குடிநீர் கிணறுகளையும்அமைக்கும்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 243 குடும்பங்களுக்கு தேசிய நீர்வழங்கல்வடிகாலமைப்புச்சபையின் மூலம் விநியோகிக்கப்படும் குழாய் நீர் விநியோகத்திட்டத்தின் கீழ் நீர்இணைப்புக்களை வழங்குவதற்கும் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 28 குடும்பங்களுக்கு திறந்த குடிநீர் கிணறுகளை அமைத்துக் கொடுக்கும் வகையிலும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி வேலைத்திட்டங்கள் மீள்குடியேற்ற அமைச்சின் உடைய நிதியொதுக்கீட்டின் கீழ் 11.5 மில்லியன் ரூபா செலவில் மேற்படி முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச்செயலகத்தகவலில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# திருக்கேதீஸ்வரம் புதைகுழி வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த விசாரணைக்கான கட்டளை எதிர் வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நீதவான் ரி.சரவணராஜா அன்றைய தினம் விடுமுறையில் இருந்த நிலையில்தீர்ப்பு வழங்கப்படவில்லை.

இன்றைய தினம் பதில் நீதவானினால் குறித்த வழக்கிற்கான கட்டளை ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வழங்கப்படும் என தவணையிடப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்காக மன்றில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி நவாவி பிரசன்னமாகி இருந்ததோடு, குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளும் மன்றில் பிரசன்னமாகி இருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (2-285)

அவசரப்பட்டு வார்த்தைகளை வெளியிடுவனைப் போன்று முட்டாள் வேறு யாரும் இல்லை.

- பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பாராளுமன்றப் புயலோடு அள்ளுண்டுபோன எங்கள் விவகாரம்

அரசியல்வாதி அஞ்சாத சிங்கம் என்றொரு பாத்திரத்தில் நடிகர் கவுண்டமணி நடிப்பார்.

அரசியல்வாதிகளின் போக்கைக் காட்டுவதே அந்த நடிப்பின் உள்ளார்ந்தம். நான் ரொம்ப பிசி என்பதை அவர் அடிக்கடி கூறிக் கொள்வார்.

இதைப் பார்க்கும்போது நம் நாட்டு அரசியல்வாதிகளின் நினைப்பும் வந்து போகும்.

இப்போது நம் நாட்டு அரசியல்வாதிகளும் ரொம்ப பிசியாகிவிட்டனர்.

எதிர்வரும் டிசம்பர் ஏழாம் திகதி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும்வரையில் நம் அரசியல்வாதிகளின் பிசி ஒரு வகையாக இருக்க, டிசம்பர் ஏழாம் திகதி நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனாதிபதியின் அறிவிப்புக்குச் சாதகமாக அமைந்தால், அரசியல்வாதிகளின் பிசி பொதுத் தேர்தலை மையப்படுத்தியதாக அமையும்.

என்னதான் பிசியாக இருந்தாலும் இந்த நாட்டின் பெளத்த சிங்கள அரசியல் கட்சிகள் தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கக்கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருக்கின்றனர்.

அதாவது பாராளுமன்றம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற நினைப்பதென்பது பேரினம் சார்ந்த அரசியல் கட்சிகளின் போட்டியே.

இங்கு எந்தத் தரப்பு ஆட்சியைக் கைப்பற்றினாலும் அது பௌத்த சிங்கள ஆட்சியாக இருக்குமேயன்றி வேறு எதுவுமல்ல.

இவ்வாறாக தமது அரசியல் போட்டி என்பது தமக்குள்ளானதேயன்றி அந்தப் போட்டி தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் சாதகமாக அமையாதென்பது அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

ஆகையால்தான் அவர்கள் தங்களுக்கிடையிலான போட்டியை எந்தக் கலக்கமுமின்றி மிகச் சிறப்பாகச் செய்கின்றனர்.

தங்களுக்குள் நிலவும் அரசியல் போட்டி தமிழ் இனத்துக்குச் சாதகமாக அமையும் என்றால் அந்தக் கணமே அவர்கள் ஒன்றுபட்டு விடுவர்.

இந்த ஒற்றுமை எங்ஙனமாக இருக்கும் என்று நீங்கள் கேட்டால் மைத்திரி - மகிந்த ஒற்றுமை போல மகிந்த - மைத்திரி - ரணில் என்ற ஒற்றுமை விரிவடையும்.

எனினும் இதுபற்றியெல்லாம் நம் தமிழ் அரசியல் தரப்புகள் சிந்திக்கப் போவதில்லை. அவர்கள் கோயில் திருவிழாவில் கூத்துப் பார்க்கின்றவர்களின் மனநிலையில் எல்லாவற்றையும் மறந்து விழித்திருந்து விடிய விடிய கூத்துப் பார்த்துவிட்டுப் போகின்றவர்களாகவே இருப்பர்.

இப்போதுகூட தென்பகுதி அரசியல் குழப்பத்துக்குள் நம்மவர்கள் தங்களை முழுமையாகப் புதைத்து விட்டு அனைத்தும் தங்களால் ஆவது போன்ற ஒரு பிரமையில் இருக்கின்றனர்.

ஆனால் உண்மை அதுவன்று. மாறாக தமிழ் மக்களின் உரிமை, இனப்பிரச்சினைக்கான தீர்ப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் என்ற விடயங்கள் அடிபட்டுப் போயுள்ளன என்பதே உண்மை.

சுருங்கக்கூறின் பாராளுமன்றச் சூறாவளியில் தமிழர்களின் உரிமை விவகாரம் அடிபட்டுப் போயுள்ளது என்பதுதான் நிதர்சனம்.

### புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வரவு–செலவுத்திட்டம்

## வருமானத்தில் 30 மில்லியன் ரூபாய் மூலதன வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடு

(பனிக்கன்குளம்)

2019 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு 89.7 மில்லியன் ரூபாய் ஆண்டு வருமானமாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. செலவீனங்கள் போக 30 மில்லியன் ரூபாயை மூலதன வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளோம் எனப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்ட முதலாம் வாசிப்பு தொடர்பான அமர்வில் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிர தேச சபையின் ஒட்டுமொத்த வருமானத்தில் 30 மில்லியன் ரூபாயை மூலதன வேலைத்திட்டத்திற்காகப் பயன்படுத்தியுள்ளோம்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் மூலதனங்களைப் பழுதுபார்பதற்காக அல்லது திருத்துவதற்காக வீதிகள் மற்றும் சந்தைகளை, மயானங்களை புனரமைப்பதற்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரதேச சபையின் மூலதனத்தின் சொத்துக்களைப் பழுது பார்ப்பதற்காக 8.6 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளோம். ஏனைய வேலைகளுக்காக 2.5 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளோம்.

இதேவேளை வரவு-செலவுத்திட்டத்தின் மானியங்கள் மற்றும் உதவு தொகைகளுக்குள் இடர்முகாமைத்துவத்தின் தேவைக்காக 5 இலட்சம் ரூபாயும் வெகுமதிகளும் நன்கொடைகளுக்குமாக 5 இலட்சம் ரூபாயும் மாற்றுத் திறனாளிகளுக்கான நன்கொடைகளுக்காக 15 இலட்சம் ரூபாயும் ஏனைய உதவிப்பணங்களுக்காக 5 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் மின்விளக்குகளைப் பொருத்துவதற்காக 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடும்,

30 ஆண்டுகளின் பின்னர் புதுக்குடியிருப்புச் சபையை மக்களின் ஆதரவுடன் பெற்றுள்ளதால் அதன் நினைவாக இரண்டு பயனாளிகளுக்கு இரண்டு வீட்டு வசதிகளை வழங்குவதற்காக 1.6 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

திண்மக்கழிவு முகாமைத்திட்டத்திற்கு 2 மில்லியன் ரூபாயும் சபைக்குட்பட்ட வட்டாரங்களின் வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பெரிய இத்திமடு, ஆலடிபிள்ளையார் ஆலய வீதி, விளாத்திகுளம் வீதி, உடையார்கட்டு வெள்ளப்பள்ளம் வீதி, விக்கி குடியிருப்பு வீதி, பாரதிபுரம் கரிகாலன் குடியிருப்பு வீதி, கோம்பாவில் கொண்டலடி பிள்ளையார் வீதி, விசுவமடு பத்தாம் கட்டை அம்மன் கோவில்வீதி, புதுக்குடியிருப்பு குட்டி பிள்ளையார் வீதி, 10ஆம் வட்டாரம் லூத்மாதாவீதி, மல்லிகைத்தீவு யோசப்வாஸ் வீதி, தச்சடம்பன் சிற்றூர் வீதி, முத்துவினாயகர்புரம் வீதி, பனிக்கீன்குளம் பாடசாலை வீதி உள்ளிட்ட 12 வட்டாரங்களுக்குமான வீதிகளும் புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மயானங்களுக்காக 6.6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வெள்ளப்பள்ளம் பொதுமயானம், சம்மளங்குளம், மானுரிவு, தேவிபுரம் கொலனிமயானம், கர்ணன் குடியிருப்பு பொதுமயானம், கரிப்பட்டமுறிப்பு பொதுமயானம், விசுவமடு 12ஆம் கட்டை பொதுமயானம், கைவேலி பொதுமயானம், மாங்குளம் பொதுமயானம், முத்துஐயன் கட்டு பொதுமயானம், ஆனந்தபுரம பொதுமயானம், இளங்கோபுரம் பொதுமயானம் என்பன 2019ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (2-281)

## வருடாந்த கலைவிழா

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த கலை விழா இன்று பி.ப 1.30 மணிக்கு சனசமூகத் தலைவர் ச.க.முருகையா தலைமையில் முன்பள்ளி முன்றலில் இடம்பெறும். இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராகவடமாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி வனேஜா செல்வரட்ணம் கலந்து கொள்வார். (7-136)

## திணைக்கள இறுதிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான திணைக்கள இறுதிப் பரீட்சைகள் நாளை 26.11.2018 திங்கட்கிழமை ஆரம்பமாகி 09.12.2018 வரை இடம்பெறும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் கல்லூரியுடன் தொடர்புகொண்டு பரீட்சைக்கான அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் பெற்றுப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதேவேளை புதிய2019 கல்வியாண்டு சான்றிதழ் தரகற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் கல்லூரியில் விண்ணப்பங்களை பெற்று 03.12.2018 இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு தொழில் வழிகாட்டல் நிலையத்தின் 021 2212403 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

## எங்களையும் மகிழ்வுடன் பணியாற்ற விடுங்கள்

உலகளாவிய ரீதியில் பால்நிலை வன்முறைக்கெதிரான பிரசார செயற்பாடுகள் இன்று 25ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை ஜெசாக நிறுவனமும் காலத்தின் தேவை கருதி "எங்களையும் மகிழ்வுடன் பணியாற்ற வழி விடுங்கள்" எனும் தொனிப் பொருளில் பிரசார செயற்பாடுகளை முன்னெடுக்கவுளளது. இப்பிரசாரமானது பதினாறு நாட்களும் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இடம்பெறும்.

இதன் ஆரம்பநாள் நிகழ்வானது இன்று காலை 8.30 மணியளவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையில் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெறும். (இ-5)

### பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16 2018

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

பெண்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் இல்லாதொழித்து, அனைவரும் மகிழவாய் வாழ்ந்து இன்புற இன்றையநாளில் சபதம் கொள்வோம்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

" இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில் கள், காடுகள் என் தேவாலயங்கள்"

*-மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத் யூனியனின் முன்னாள் ஜனாதிபதி)*

### பயணம் போகும்போது...

- வெளியூர் செல்லும்போது தங்களின் பொருட்களை கவனமாக எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். அங்கு சென்றால் யாரை பார்க்க வேண்டும். என்ன செய்ய வேண்டும். நேரம் எவ்வளவு ஆகும் என்பதைத் திட்டமிட்டுச் செயற்படுங்கள்.
- பயணத்தின் போது முன்பின் தெரியாத நபர்களிடம் எதையும் வாங்கி சாப்பிடக் கூடாது.
- பயணத்தின் போது எதிரிலோ அல்லது அருகிலோ உள்ளவாகளிடம் அன்பாக பேசுங்கள். பிரச்சினைக்குரிய எதையும் பேசாதீர்கள்.
- பயணம் போகும் போதும் பொருட்களை எண்ணி பார்த்து இறங்கும் போதும் சரியாக உள்ளதா? எனவும் கவனம் கொள்ளுங்கள்.
- தங்களை பற்றிய "சிறுகுறிப்பு" (Address) இரத்த வகை (Blood Group) தொலைபேசி எண் (Telephone) போன்றவற்றைக் குறித்து வைத்திருக்க மறக்காதீர்கள்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்




- சரீர முயற்சியின் பலன் சிறிதளவே. ஆனால் தெய்வீகத் தன்மையோ எல்லாவற்றிலும் அதிகமான பலன் தருவதாகும். இப்போதைய வாழ்விற்கும் இனி வரப்போகும் வாழ்விற்கும் உறுதி தருவதாகும்.
- தானியத்தைப் பதுக்கி வைப்பவனைப் பொது ஜனம் சபிக்கும். ஆனால், அதை விற்பவன் தலையையோ வாழ்த்தும்.
- முட்டாளுக்கு அவனது புத்தியீனத்திற்கு ஏற்ப பதில் சொல். பதில் சொல்லாவிட்டால் அவன் தன்னை அறிவாளி என்று நம்பிக் கொண்டிருப்பான்.
- மிருதுவான பதில் சினத்தை மாற்றிவிடும். புண்படுத்தும் வார்த்தைகளோ ஆத்திரத்தைத் தான் கிளப்பிவிடும்.
- பணம் படைத்தவன் கடவுளின் ராஜ்ஜியத்திற்குள் நுழைவதை விட ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைவது அதிகச் சுலபம்.
- கடவுளின் கருணையை பணத்தால் விலைக்கு வாங்கிவிடலாம் என்று நீ நினைத்தபடியால் உன்னுடைய பணம் உன்னுடனே அழிந்து போகட்டும்.
- அறிவாளிகளைத் திகைக்கச் செய்ய உலகின் பைத்தியக்காரப் பொருள்களை கடவுள் தேர்ந்தெடுத்தார்: பலமுள்ளவற்றைத் திகைக்கச் செய்யப் பலவீனமானவற்றைத் தேர்ந்தெடுத்தார்.

# தாமதமாக பந்து வீசியதற்காய் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு அபராதம்

பிரிஸ்பேனில் நடந்த இந்தியாவுக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில், பந்துவீச அதிகமான நேரம் எடுத்துக் கொண்டதற்காக அவுஸ்திரேலிய அணிக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதிய முதல் இருபது-20 போட்டி பிரிஸ்பேன் நகரில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு ஆரோன் பிஞ்ச் தலைவனாக செயற்பட்டார்.

முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி, 17 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டதால், ஆட்டம் அணிக்கு 17 ஓவர்களாக மாற்றியமைக்கப்பட்டது.




இதனால் டக்வொர்த் லீவிஸ் முறைப்படி இந்திய அணிக்கு 174 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் ஆடிய இந்திய அணி 17 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்கள் எடுத்ததால் தோல்வியை தழுவியது.

முன்னதாக, அவுஸ்திரேலிய அணி பந்துவீசிய போது குறிப்பிட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து, அந்த அணிக்கு ஐ.சி.சி அபராதம் விதித்துள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'ஐ.சி.சி கிரிக்கெட் வீரர்கள் விதிமுறை 2.5.1-யின் படி, குறிப்பிட்ட நேரத்திற்குள் அவுஸ்திரேலிய வீரர்கள் பந்துவீசாமல், அதிகமான நேரம் எடுத்துக் கொண்டது குற்றமாகும்.

எனவே, போட்டி ஊதியத்தில் இருந்து அவுஸ்திரேலிய வீரர்கள் 10 சதவிதத்தை அபராதமாக செலுத்த வேண்டும். அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஆரோன் பிஞ்ச் 2 மடங்கு அபராதம் செலுத்த வேண்டும் என எச்சரிக்கிறோம்.

அடுத்து வரும் போட்டிகளில் தொடர்ந்து இதே தவறை அவுஸ்திரேலிய தலைவர் ஆரோன் பிஞ்ச் செய்தால், அவர் ஒரு போட்டியில் இந்தக் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டதால் விசாரணை ஏதும் தேவையில்லை' என தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

# இரண்டு ஓவர்கள் ஐந்து விக்கெட்டுக்கள் விஸ்வரூபமெடுத்த வீரர்




சன்ரைசஸ் ஹைதராபாத் ஐ.பி.எல் அணியின் பிரவின் தாம்பே இரண்டு ஓவர்களில் 5 விக்கெட்டுகளை அள்ளி சாதனை படைத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற பலமுறை முயன்ற மும்பை வீரர் பரவின் தாம்பே, இறுதியில் தமது 41 ஆவது வயதில் 2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல் ராஜஸ்தான் அணியில் இடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

தமது 47ஆவது வயதில் மீண்டும் வியக்கவைக்கும் ஆட்டத்தை வெளிப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

ஐக்கிய அமீரகத்தில் நடைபெற்றுவரும் 20 ஓவர்கள் லீக்கில் கேரள அணிக்காக 5 விக்கெட்டுகளை அள்ளியுள்ளார்.

இரண்டு ஓவர்கள் மட்டும் வீசிய தாம்பே 15 ஓட்டங்கள் மட்டுமே அளித்து 5 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார். (க)

# இறந்தாலும் பரவாயில்லை-இவர் இறந்து விடாதீர்கள்- அவர்

## இணையத்தைக் கலக்கும் வீரர்கள்

ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் தனக்கு மிகவும் பிடித்த பெண் கிரிக்கெட் வீரர் இங்கிலாந்தை சேர்ந்த முன்னாள் விக்கெட் கீப்பர் சாரா டெய்லர் என கூறியுள்ளார். கிரிக்கெட் ரசிகர்கள் பலரிடையே மிகவும் பிரபலமான சுழற்பந்து வீச்சாளர் ரசித்கான். ஆப்கானிஸ்தானை சேர்ந்த வீரராக இருந்தாலும் ரசிகர்கள் பலருக்கு பிடித்தமான வீரராக இருந்து வருகிறார்.

இவர் தன்னுடைய சமூக வலைத்தள பக்கத்தில் எந்த பதிவை வெளியிட்டாலும்,



ரசிகர்கள் அதனை வைரலாக்கி விடுகின்றனர்.

இந்த நிலையில் ரசிகர் ஒருவர், உங்களுக்கு பிடித்த பெண் கிரிக்கெட் வீரர் யார் என ரசித்கானிடம் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்திருந்த ரசித், இங் கிலாந்தின் முன்னாள் விக் கெட் கீப்பர் சாரா டெய்லர் என பதிலளித்திருந்தார்.

இதனை பார்த்த சாரா, "நான் இப்பொழுது சந்தோசமாக இறப்பேன்" என தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக் கத்தில் பதிவிட்டிருந்தார்.

உடனே அதற்கு மீண்டும் பதிலளித்த ரசித், இறந்துவிடா தீர்கள் என கூறியுள்ளார். இந்த பதிவானது தற்போது இணையம் முழுவதும் வைரலாக பரவி வருகிறது. (க)

# நான் ஹர்பஜனை சீண்டியது தவறு அறை வாங்கியது தொடர்பில் ஸ்ரீசாந்


இந்திய முன்னாள் கிரிக் கெட் வீரர் ஸ்ரீசாந்த், ஐ.பி. எல். போட்டியில் ஹர்பஜன் சிங்கிடம் அறை வாங்கிய சம்பவம் குறித்து பிக்போஸ் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் ப்ந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த். இவரை ஐ.பி.எல் போட்டியின் போது, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் கன்னத்தில் அறைந்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஹிந்தி பிக்போஸ் சீசன் 12இல் ஸ்ரீசாந்த் கலந்துகொண்டுள்ளார். இந்நிகழ்ச்சியின் தொகுப்பாளராக நடிகர் சல்மான் கான் உள்ளார்.

இந் நிகழ்ச்சியில் ஹர்பஜன் தன்னை அறைந்த சம்பவ த்தை ஸ்ரீசாந்த் பகிர்ந்து கொண்டார்.

அவர் கூறு கையில்,



'மும்பைக்கு எதி ரான போட்டியில் வெற்றி பெற்ற பிறகு, நான் ஹர்ப ஜனை சீண்டும் சொற்களை கூறி இருக்கக்கூடாது. அது தான் அவரை கோபமடைய செய்தது. இருப்பினும் நான் ஹர்பஜன் மீது மரியாதை வைத்திருக்கிறேன்.

அந்தச் சம்பவத்திற்கு பிறகு இருவரும் சந்தித்துக் கொண்டு, எங்களுக்கு இடையே இருந்த பிரச்சினையை தீர்த்துக் கொண்டோம்' என தெரிவித்தார். வியாழக்கிழமை இப்பகுதி ஒளிபரப்பானதைத் தொடர்ந்து, ஸ்ரீசாந்திற்கு பார்வையாளர்களிடம் இருந்து ஆதரவு பெருகி வருகிறது.(க)

# இந்தியா- அவுஸ்திரேலிய இறுதிப் போட்டி இன்று

இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் இடையேயான மூன்று 20 ஓவர் போட்டித் தொடரில் பிரிஸ்பேனில் நடந்த முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 4 ஓட்டத்தில் வெற்றி பெற்றது. மெல்பேர்னில் நேற்று முன்தினம் நடந்த 2 ஆவது ஆட்டம் மழையால் பாதியில் கைவிடப்பட்டது.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் ஆட்டம் சிட்னியில் இன்று நடக்கிறது.

இரண்டாவது போட்டி மழையால் இரத்துச் செய்யப்படாமல் முழுமையாக நடைபெற்று இருந்தால் இந்தியா வெற்றி பெற்று இருக்கலாம். ஏனென்றால் அவுஸ்திரேலியா 19 ஓவரில் 7 விக்கெட்



இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்து இருந்தபோது ஆட்டம் பாதிக்கப்பட்டது. புவனேஸ்வர்குமாரும், பும்ராவும் நேர்த்தியுடன் பந்துவீசி கட்டுப்படுத்தி இருந்தனர்.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதுவதால் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இரு அணிகளும் இன்று மோதுவது 18 ஆவது மோதலாகும். இதுவரை நடந்த 17 போட்டியில் இந்தியா 10 இல், அவுஸ்திரேலியா 6 இல் வெற்றி பெற்றன. ஒரு ஆட்டம் முடிவு இல்லை.

இன்றைய ஆட்டம் இந்திய நேரப்படி பிற்பகல் 1.20 மணிக்கு தொடங்குகிறது. (க)

# மகளிருக்கான உலகக் கிண்ணம் இங்கிலாந்து-அவுஸ். பலப்பரீட்சை

6 ஆவது மகளிர் 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவில் நடைபெற்று வருகிறது.

இதன் இறுதிப் போட்டி இன்று நடக்கிறது. இதில் அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. அவுஸ்திரேலிய அணி அரை இறுதியில் நடப்பு சம்பியன் மேற்கிந்திய தீவையும் இங்கிலாந்து அணி இந்தியாவையும் வீழ்த்தி இருந்தன.

உலகக் கோப்பையை அவுஸ்திரேலிய அணி 4




ஆவது முறையாகவும், இங்கிலாந்து 2 ஆவது தடவையாகவும் கைப்பற்றும் ஆர்வத்தில் இருக்கிறது. (க)

## ஐக்கிய தேசி...

வர்த்தன இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் அது பொது தேர்தலுக்கு தயாரில்லை.

இந்த நிலையில் அந்த கட்சியை கூட்டாட்சி ஒன்றை அமைக்க வருமாறு அழைப்பு விடுக்கிறோம்.

ஏனைய கட்சிகளும் இந்த காபந்து அரசாங்கத்தில் பங்கேற்க முடியும். இந்த காபந்து அரசாங்கத்தின் கீழ் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல முடியும்.

குறித்த காபந்து அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஏனைய கட்சிகளோ பிரதமர் ஒருவரை நியமிக்க முடியும்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்க ஜனாதிபதி விருப்பம் கொண்டிருக்காமையால் வேறு ஒருவரை ஐ.தே.க பரிந்துரை செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# அரசியல் நெருக்கடிக்கு ஜனாதிபதி தீர்வு காண வேண்டும்

## சு.க.உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

மீண்டும் நல்லாட்சிக்கு திரும்புவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக ஜனாதிபதி தலையிடவேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஒக்டோபர் 26ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தை அமைப்பதே தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான ஒரே வழி என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு பதில் இன்னொருவரை நியமிப்பது தொடர்பில் ஐக்கியதேசிய கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது தொடர்பிலும் இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி இதற்கு சம்மதித்துள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவதில் உள்ள நெருக்கடி குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

மீண்டும் நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்த முடியாவிட்டால் பாராளுமன்றத்தில் தனித்து செயற்படவேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (3)

## ரணிலின் ஆசீர்வாதத்துட...

தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஓரம் கட்டிவிட்டு தலைமைப் பதவியை கைப்பற்ற சஜித் தரப்பினர் மீண்டும் சதி செய்து வருவதாக மகிந்த - மைத்திரி தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டு வரும் பரப்புரைகளையும் சஜித் பிரேமதாஸ நிராகரித்தார்.

ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான மக்களின் நீதிக்குரல் என்ற போராட்டம் ஐக்கிய தேசிய கட்சியின் ஏற்பாட்டில் நேற்று கண்டி நகரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியில் நான் தற்போது வகிக்கும் பதவிகளுக்கு மேலதிகமான மற்றுமொரு படியை முன்னோக்கி வைப்பதற்கு நான் தயார். கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், நிறைவேற்றுக் குழுவும் முழுமையான அனுமதியும் ஆசீர்வாதமும் வழங்கினால் மாத்திரமே அதனை நான் செய்வேன்.

சபாநாயகரை ஏற்றுக்கொள்ள மாட்டார்களாம், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்களாம். அப்படியென்றால் முடிந்தால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை பாராளுமன்றத்திற்கு கொண்டுவாருங்கள். அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்துக் காட்டுகின்றோம்.

ஏன் சபாநாயகரை மகிந்த - மைத்திரி கூட்டணி எதிர்க்கின்றது என்று தெரியுமா? 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 62 இலட்சம் மக்கள் வாக்களித்து வழங்கிய மக்கள் ஆணையை சபாநாயகர் காட்டிக்கொடுக்கவிடாது தொடர்ச்சியாக பாதுகாத்து வருகின்றார். அதேவேளை ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக தொடர்ச்சியாக அவர் குரல்கொடுத்து வருவதுடன், நாடாளுமன்றத்தை முடக்க எடுத்த நடவடிக்கைகளையும் தோற்கடித்து பாராளுமன்றத்தை கூட்டினார்.

இதனால் உலக ஜனநாயக வரலாற்றில் எமது சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். சர்வதேச அரங்கிலும் அவர் பெரிதும் மதிக்கப்படும் ஜனநாயக பாதுகாவலராக மாறியிருக்கின்றார். இதனாலேயே ஜனநாயகத்தையும், நாட்டின் அதி உயர் பீடமான பாராளுமன்றத்தையும் பாதுகாப்பதற்காக தைரியமாக முன்னிற்கும் சபாநாயகரை இழிவுபடுத்தி, அவரது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளில் மகிந்த - மைத்திரி தரப்பு ஈடுபட்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ குற்றம்சாட்டினார். (3)

## அரசுடன் மீண்டும் இணையப்போவதில்லை

### மனோகணேசன்



(கொழும்பு)

காபந்து அரசாங்கம் அமைப்பதற்கான அழைப்பை ஏற்று மீண்டும் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், காபந்து அரசாங்கம் அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.

இதிலிருந்து அவர்கள் பயந்து விட்டார்கள் என்பது புலப்படுகிறது. ஆனால், நாங்கள் அவர்களுடன்இணையப்போவதில்லை.

நாம் தேர்தலுக்கு செல்வதற்கு தயாராகவுள்ளோம். 2019ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதிக்கு ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல முடியும்.

நாடாளுமன்றத்தில் 225 பேர் மத்தியிலான வாக்கெடுப்பை குழப்பியவர்கள், பொதுத் தேர்தலில் குழப்பத்தை ஏற்படுத்த என்னென்ன செய்வார்கள் என்பதை எம்மால் ஊகித்துக் கொள்ள முடியும்.

பொலிஸ், இராணுவம், அரச ஊடகங்களை பயன்படுத்தி எமது வாக்குகளை சூறையாட இந்த அரசாங்கம் முயலுமாயின் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

யார் என்ன சதித்திட்டங்களை தீட்டினாலும் அதனை முறியடித்து ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சியை நிலைநிறுத்துவோம் எனத் தெரிவித்தார். (3)

## தேர்தலை நட...

மைத்திரிபால சிறிசேன பொதுத் தேர்தல் ஊடாக தீர்வு காணும் நோக்கில்பல்வேறு நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றார்.

நம்பிக்கைக்கு உரிய சட்ட ஆலோசகர்கள் மற்றும் வல்லுநர்களுடன் ஜனாதிபதி சிறிசேன முக்கிய பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றார்.

பொது தேர்தலை நடத்தாது ஜனாதிபதி தேர்தலுக்கு செல்வது சாத்தியமற்ற விடயமாகும். அதே போன்று வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட 6 மாகாண சபைகள் முற்றாக செயலிழந்துள்ளன. இவற்றின் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். மறுபுறம் அனைத்து அரச நிறுவனங்களும் நிர்வாக ரீதியில் பாரிய சவால்களை எதிர்க் கொண்டுள்ளது.

அரசியல் ஸ்திரமற்ற நிலையில் நாடு மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி தனது அரசாங்கத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் காணப்படும் சவால்கள், உயர் நீதிமன்ற இடைக்கால தடை மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படும் அழுத்தங்கள் உள்ளிட்ட சவால்களை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்தும் ஜனாதிபதி முக்கிய பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றார்.

ஆனால் அவ்வாறானதொரு தீர்மானத்திற்கு தற்போது செல்ல வேண்டியது இல்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார். (3)

## சர்வாதிகாரத்தை தோற்கடித்து...

த்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அந்த கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அரசியல் நெருக்கடிகளை நாடாளுமன்றத்தில் முற்றாக தீர்த்துக் கொள்ள ஐக்கிய தேசிய முன்னணியினர் தயார்.

அதற்கு மறுப்பு தெரிவித்தால் வீதி போராட்டங்களினால் தீர்வு காண வேண்டுமென்றால் அதனையும் எதிர்கொள்ளத் தயார். சர்வாதிகாரத்தை போராட்டத்தின் ஊடாக தோற்கடித்து ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவோம்.

நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க இனமத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சகல மக்களின் ஒத்துழைப்பின் மூலமே நாட்டின் தற்போதைய சர்வாதிகார நிலைமையை மாற்றியமைக்க முடியும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் 26 ஆம் திகதி புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை தெரிவு செய்தது தொடக்கம் இன்று வரை அரசியலமைப்பிற்கு முரணாகவே செயற்பட்டு வருகின்றார் என தெரிவித்துள்ளார். -(3)

## ஜனாதிபதி மைத்...

கண்டியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த வாரத்தில், உலகில் எந்தவொரு சபாநாயகரும் முகம் கொடுக்காத பிரச்சினைகளுக்கு கரு ஜயசூரிய முகம் கொடுத்தார்.

எனினும் சபாநாயகர் வளைந்து கொடுக்காமல் நேர்மையாக செயற்பட்டார். இதற்காக நாம் அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம். தற்போது அவர்கள் சபாநாயகருக்கு ஏசுகின்றனர். அவர் செய்த தவறு என்ன? நிலையியற் கட்டளையை நடைமுறைப்படுத்தியதா?

நாட்டின் பெரும்பான்மையானவர்கள் மகிந்தவை ஓரம் கட்ட வேண்டும் என, ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வாக்களித்தனர். ஆனால் இங்கு என்ன நடந்துள்ளது?

மக்கள் வேண்டாம் என நிராகரித்தவர்களை ஜனாதிபதி மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வந்துள்ளார். இதுதான் ஜனநாயகமா?

இது இப்படியே நீடித்தால் என்ன நடக்கும்? வாக்குபலம் இல்லாமல் போகும், நாடாளுமன்ற பலம் குறையும், மக்களின் எதிர்காலம் இல்லாமல் போகும். அந்த உரிமைகளை பாதுகாக்கவே நாம் செயற்படுகின்றோம்.

நாம் தேர்தலுக்கு செல்ல அஞ்சவில்லை. ஆனாலும் நீதியான ஒரு அரசாங்கத்தின் கீழ் நாம் தேர்தலுக்கு செல்ல வேண்டும். இல்லையேல் அரசியலமைப்பிற்கு அமைய அது சட்டரீதியான தேர்தலாக அமையாது எனத் தெரிவித்தார். (3)


**கொவிசெத**

திகதி 2018.11.24
சீட்டிழுப்பு இலக்கம் 1953
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 23 58 78
தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 24-11-2018
சீட்டிழுப்பு இலக்கம் 894
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 4 2 1 8 3 1
தேசிய லொத்தர் சபை

**செவன**

திகதி 2018/11/24
சீட்டிழுப்பு இலக்கம் 138
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 27 52 63 64
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**

திகதி 2018/11/24
சீட்டிழுப்பு இலக்கம் 1380
எழுத்து 17
வெற்றி இலக்கம் 8 56 57 66
16 50
தேசிய லொத்தர் சபை

## குற்றப்புலனாய்வி...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2008ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என்பவருக்கு அடைக்கலம் வழங்கியதாக ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் வாக்குமூலம் ஒன்றினை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் பணி நிமித்தம் வெளிநாடு சென்றிருந்ததால் அவர் அங்கு முன்னிலையாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## 4 கிலோ ரி.என்.ரி...

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் கடற்கரைப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இருந்தே நேற்று இரவு விசேட அதிரடிப் படையினர் வெடி மருந்தினை மீட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், கொய்யாத்தோட்டம் பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கொண்டு செல்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த போதே விசேட அதிரடிப் படையினர் அதனை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 4 கிலோ நிறையுடைய ரி.என்.ரி வெடிமருந்தினை விசேட அதிரடிப் படையினர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மீட்கப்பட்ட வெடிமருந்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், வெடிமருந்தை யாழ்.நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றதாகவும் மேலும் தெரிவித்தனர்.(3-9-101)

## மகனி...

வெண்டவராவர் இவரின் மகன் ஒருவர் கடந்த வருடம் வெளிநாட்டிற்கு முகவர் ஊடாக சென்றிருந்த நிலையில் ஆபிரிக்காவில் மரணமடைந்துள்ளார்.

இதனால் மனமுடைந்த அவர் மகனின் நினைவில் வாழ்ந்து வந்த தாகவும் நேற்று சனிக்கிழமை காலை வீட்டில் கழுத்தில் சுருக்கிட்டு அறுந்து விழுந்த நிலையில் சடலமாக காணப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(3-60)

## ஜனா...

கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவுக்கு நேற்று முன்தினம் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கலாநிதி சுரேன் ராகவனை, ஊடகப் பிரிவு பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி சுரேன் ராகவன், பத்தி எழுத்தாளரும் அரசியல் விமர்சகராகவும் செயற்படுபவர்.

அதேவேளை, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக இருந்த, சமிந்த சிறிமல்வத்த, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவு தலைவராக மாற்றப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன அமைச்சராக இருந்த காலப்பகுதிகளில் இருந்தே, அவரது தனிப்பட்ட அதிகாரியாக சமிந்த சிறிமல்வத்த பணியாற்றியிருந்தார்.(3)


### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 1988, சுவாதி நட்சத்திரம், செவ்வாய் தோஷம் அற்ற, கிரக பாவம் 06, CIMA, B.Sc முடித்த கொழும்பில் தனியார் கம்பனியில் பிரதம கணக்காளராக (Chief Accountant) தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 075 028 4640

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 */=Kg
கனடா - 900 */=Kg
ஜேர்மனி - 700 */=Kg
நெதர்லாந்து - 700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-4462)

### வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

### கணிதபாட வகுப்புக்கள்

தரம் 8 முதல் O/L வரையான கணித பாட வகுப்புக்கள் பல வருட அனுபவமுள்ள கொழும்பில் கல்வி கற்பித்த ஆசிரியரினால் வீடு வந்து குழுவாகவோ தனியாகவோ மாத இரு பயிற்சிப் பரீட்சைகளுடன் Paper Class, கொழும்பு, யாழ் Model Paper உடன் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 577 6999

### கணக்காளர் தேவை

(Accountant)

மூன்று வருட கால அனுபவம். அத்துடன் கணனி அறிவு. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0777701695

### வேலையாட்கள் தேவை

வி.எம்.றோட், பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல விடுதி (Lodge) க்கு வேலையாட்கள் தேவை. 30 – 50 வயதுக்குள் இருப்பதுடன் வாகன அனுமதிப்பத்திரம் இருப்பதும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:

0771632330

(C-4502)

### ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்

ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில், திருமணத்தடை, புத்திரபாக்கியம்/புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக்குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு – யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய், – வவுனியா)

(C-4491)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்

UK - 550/=, France - 700/=, Germany - 650/=, Swiss - 750/=, Canada - 950/=

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528

திருமுருகன் கொம்நெற் (பிறைவெட்) லிமிடெட்

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார்.

DHL Aramex SkyNet — 3 - 5 Working Days

(C-4484)

### நிரந்தர வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் முன்னணி வகிக்கும் எமது EDM நிறுவனமானது இதுவரை வட பகுதியில் 06 கிளைகளை நிறுவியுள்ள போதும் மேலும் 7ஆவது கிளைக்கான பல வெற்றிடங்கள் காணப்படுவதால் குறிப்பாக 40 விண்ணப்பதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்பதனையும் பயிற்சிகள் வழங்கப்பட்டு படிப்படியான பதவி உயர்வுகளும் காணப்படுவதால் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(6552)

தொடர்புகளுக்கு 077-985 8580, 076-745 1138

### வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி A9 Road, யாழ்வீதி கரடிப்போக்கு சந்தியில் உணவகம் ஒன்றும் நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்த விஸ்தீரமான கட்டிடமும் வாடகைக்கு விடப்படும்.

(C-4493)

தொடர்புகளுக்கு 077 802 5879

### NEW SCIENCE HALL

PHYSICS ENGLISH MEDIUM
NEW CONTENTS STARTS
25.11.2018 SUNDAY

2020 BATCH - WAVES AND OSCILLATIONS
SATURDAY & SUNDAY : 7.30 - 9.30

2019 BATCH - CURRENT ELECTRICITY
SATURDAY & SUNDAY : 9.30 - 11.30

By: M.KUGANESWARAN B.Sc (Hons) DIP (Edu)

(C-4507)

### திறன் வகுப்பறையில் (Smart Class Room)

தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்புக்கள்

- குழு ரீதியான வகுப்புக்களும்
- பொதுவான வகுப்புக்களும் நடைபெறவுள்ளன

ஆசிரியர்: N.சுந்தா (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)
ஆரம்பம்: 01.12.2018 (சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு
இடம்: SCIENCE GUIDE CENTER இராசாவின்தோட்ட வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பரீட்சைகள் நடைபெறும். வெளி மாணவர்களும் பரீட்சையில் தோற்ற முடியும்.
- பரீட்சைகளுக்கு தோற்ற முடியாத மாணவர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வினாத்தாள்களை பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு: 077 899 9940

(6540)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 . 12 . 1950



விண்ணில் 28 . 11 . 2015

### அமரர் கணபதிப்பிள்ளை சபாநாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் – யாழ். இந்துக் கல்லூரி)

கனவில் நீங்கள் வரும் போது
களிப்படைகின்றோம்
கண் விழித்ததும் இது கனவா என
கலங்கி கண்ணீர் சிந்துகின்றோம்
எத்தனையோ சோகங்கள் எங்கள் மனதில்
எடுத்துரைக்க வார்த்தைகள் இல்லை
சுகமான எண்ணங்கள் சுக்குநூறாய்ப் போக
சோதனை மேல் சோதனை
வேதனை மேல் வேதனையென
ஏதோ ஒரு புள்ளியுள்
இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
காலங்கள் பல போகலாம். என்றும்
காவியமாய் எங்கள் எண்ணங்களில் நீங்கள்
உறுதியாக உறைந்திருக்கிறீர்கள்
ஈர விழிகளுடன் மூன்றாண்டுகள் சென்றுவிட்டது
மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவுதான் எங்கள் நினைவு

"நாகேஸ்வரி இல்லம்"
உரும்பிராய் கிழக்கு, கரந்தன், நீர்வேலி. - குடும்பத்தினர்

(C-4504)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 193


Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2049 25.11.2018 தொலைபேசி : 021 222 3378

# இது தமிழர்களுக்காக அல்ல







# தடுப்பது யார்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**ப**ண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இவ்வாறு அவர்கள் அமரவும் அந்தப் பகுதி இளைஞர்கள் மண்வெட்டி, குப்பைவாரி சகிதம் அந்த இடத்திற்கு வரவும் சரியாக இருந்தது.

இளைஞர்களின் வரவை உணர்ந்த வாத்தியார் வைத்திலிங்கம் மாவீரர் தினத்தை முன்னிட்டு ஆலடிப் பகுதியை சுத்தம் செய்யப் போகினம். நாங்களும் அவர்களோட சேர்ந்து சிரமதானப் பணியில ஈடுபடுவம் என்றார்.

இவ்வாறு வாத்தியார் கூற அனைவரும் சடுதியாக எழுந்தனராயினும் விதானையார் விசுவலிங்கம் மட்டும் ஆழ்ந்த யோசனையில் ஆலடியில் இருந்தார்.

ஓ! விதானையாரின் மூத்த மகன் மாவீரர் அல்லோ. முன்பெல்லாம் இந்த ஆலடியில தான் மாவீரர் நினைவேந்தல் நடக்கும். பந்தல் அமைத்து சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டு, மாவீரர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டு, தீபம் ஏற்றி மக்கள் அஞ்சலி செலுத்துவர். அந்த நினைவு விதானையாரிட்ட நிழலாடியது போல. அதுதான் விதானையார் ஆழ்ந்த யோசனையில இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் விதானையாரையும் சாந்தப்படுத்தி சிரமதானப் பணிக்கு அழைத்துச் சென்றனர்.

சிரமதானப் பணி மிக வேகமாக நடந்தது. எங்களுக்காகப் போராடி தங்கள் உயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களின் தியாகத்தை மறக்க முடியுமா என்ன? நாங்கள் வாழ அவர்கள் தங்களைத் தியாகம் செய்தவர்கள். எனவே அவர்களின்ர தியாகம் இந்த மண் இருக்கும் வரைக்கும் நிலைக்கும். பண்டிதர் பரமலிங்கம் தன்பாட்டில் உரக்கக் கூறினார். பண்டிதரின் அந்த வார்த்தை அங்கு நின்ற அனைவரையும் உணர்வு மயப்படுத்தியது.

அந்த உணர்வு நிலையோடு சிரமதானப் பணி உச்சமாக நடக்கின்ற போதும் ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் தங்கள் உரையாடல்களை நடத்திக் கொண்டேயிருந்தனர். வழமையில் ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் மத்தியில் நடக்கின்ற உரையாடலை இன்று ஆலடியில் சிரமதானம் செய்கின்ற இளைஞர்களும் அறியக்கூடியதாக இருந்தது.

**பண்டிதர்:** மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கவிடக்கூடாது என்று பொலிஸார் நீதிமன்றில வழக்குத் தாக்கல் செய்திருக்கினம் எண்டால் பாருங்களன்.

**வாத்தியார்:** இலங்கையில உள்ள பொலிஸார் தாங்கள் சிங்கள இனத்திற்கான பொலிஸார் என்ற மனநிலையுடன் செயற்பட்டால் மட்டும் தான் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கவிடக்கூடாது



## வீதி விபத்தைத் தடுக்க யாருமிங்கு இல்லையோ!

எண்டு வழக்குத் தாக்கல் செய்வினம்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். பொலிஸ் சேவை என்பது இனம், மதம், மொழி என்ற பாகுபாட்டைக் கடந்ததாக இருக்க வேணும். ஆனால் இலங்கையில் தமிழினத்திற்கு எதிராக இயங்குகின்ற ஓர் அரச திணைக்களமாகத்தான் பொலிஸ் சேவையைப் பார்க்க வேண்டியுள்ளது.

**கங்காணி:** அவையள் வழக்குத் தாக்கல் செய்தாலும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தடை இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

**சாத்திரியார்:** நான் இருந்த கனடா நாட்டிலயெல்லாம் இறந்தவர்களை நினைவுகூருவது ஒரு உச்சமான மனித உரிமை. ஆனால் இந்த நாட்டிலதான் மாவீரர்களை நினைவுகூரக்கூடாது என்று பொலிஸார் நீதிமன்றை நாடுகினம்.

**பண்டிதர்:** மாவீர்கள் என்று பார்ப்பதற்கு முன்னதாக அவர்களும் பிள்ளைகள். அவர்களின்ர இழப்பால அவர்களின் பெற்றோர்களும் உறவுகளும் கண்ணீர் விட்டபடிதான் இருக்கினம் எண்ட உண்மையை உணர்ந்து கொண்டால் நினைவுகூரத் தடை என்ற அநாகரிகத்தனம் மனித சிந்தனையில இருக்காது.

இப்படியே கதைத்தபடி சிரமதானப் பணியும் ஓதுங்கிக் கொள்ள, ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் ஆலடிக் கேணியில் கைகால் கழுவிவிட்டு ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

**சாத்திரியார்:** அது சரி இப்ப எங்கட வடபுலத்தில ஒவ்வொருநாளும் விபத்து மரணம் நடந்தவண்ணமுள்ளன. இதென்ன அங்கீகரிக்கப்பட்ட மரணங்களோ. இதுபற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை.

**கங்காணி:** சாத்திரியார் சொன்னமாதிரி ஒவ்வொரு நாளும் இரண்டு, மூன்று விபத்து மரணம் நடந்து கொண்டேயிருக்கிறது. இதைத் தடுக்கிறது பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை.

**விதானையார்:** எந்தவிதச் சமூக அக்கறையும் இல்லாதவர்கள் உயர்பதவியில் இருந்தால் இப்படியான அழிவுகள் தான் நடக்கும். வீதி முழுக்க கட்டாக்காலி நாய்கள், எந்தநேரமும் மோட்டார்சைக்கிளுக்குள்ள வந்து பூரும் என்று தெரியாது. இதால எத்தனையோ பேர் விபத்துக்குள்ளாகி கைகால் முறிந்து வாழ்வையும் இழந்து கஷ்டத்தில வாடுகினம். எனினும் இதைத் தடுக்கிறதுக்கு இங்க யார் இருக்கினம்.

**மூப்பர்:** போதாக்குறைக்கு புகையிரதவண்டியுமல்லோ நாலு, ஐந்து பேர் எண்டு காவு கொள்ளுது.

**வாத்தியார்:** புகையிரதப் பாதையில பாதுகாப்பான கடவை, பாதுகாப்பற்ற கடவை, சட்டவிரோதக் கடவைகள் எண்டு இருக்குதாம். சட்ட விரோதக் கடவைகளிலதான் விபத்து அதிகம் எண்டு புகையிரதத் திணைக்களம் சொல்லிப் போட்டு பேசாமல். இருந்தால்...

**பண்டிதர்:** அப்ப நாங்கள் ஆலடியில ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம்.

**சாத்திரியார்:** என்ன தீர்மானம் பண்டிதர்.

**பண்டிதர்:** வடபகுதியில இருக்கிற அத்தனை புகையிரதக்கடவைகள் தொடர்பிலும் இலங்கை புகையிரதத் திணைக்களம் ஒரு சரியான மீளாய்வு செய்ய வேணும். மக்களின்ர தேவை கருதி சட்டவிரோதக் கடவைகளையும் அங்கீகரித்து அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்யவேணும். எந்த வகையிலும் செயற்பட முடியாது எனக் கருதப்படும் சட்டவிரோதக் கடவைகள் தொடர்பில ஊடகங்களில அறிவித்தல் விடுத்து அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேணும்.

**விதானையார்:** அது மட்டுமல்ல பண்டிதர் ஐயா சில புகையிரதக் கடவைகளில உள்ள சமிக்ஞை விளக்குகள் எரிவது கூடத் தெரியாது. அந்தளவிற்கு அவை பொருத்தப்பட்ட முறை பிழையாக இருக்கிறதோட, புகையிரதப் பாதையின்ர இருமருங்கையும் பார்க்க முடியாத அளவில வீதி பள்ளத்திலும் புகையிரதப் பாதை மலையிலும் இருக்கிறதான ஏற்ற இறக்கங்கள் உண்டு. இப்படி யான ஒரு பாதைதான் கந்தர் மடம் ஆத்திசூடிப் பகுதியில இருக்கிற புகையிரதக் கடவை.

அந்தக் கடவையில பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகள் ஆத்திசூடி வீதியைப் பார்க்குது. ஆனால் இந்து மகளிர் ஒழுங்கையால வாற பயணிகளுக்கு அந்த சமிக்ஞை விளக்குகள் தெரியாது. இதால தான் அண்டைக்கு கார் விபத்து நடந்தது.

**வாத்தியார்:** ஆலடியில கதைக்கப்பட்ட விடயங்களை இலங்கைப் புகையிரதத் திணைக்களம் கவனத்தில் எடுத்து உரிய பரிகாரம் செய்யவேண்டுமென ஆலடி மாநாட்டில தீர்மானம் எடுப்பம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மூப்பர்:** இந்தத் தீர்மானத்தோட யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியும் அரசடி வீதியும் சந்திக்கின்ற சந்தியில ஒரு குளம் மாதிரி மழைத்தண்ணி தேங்கி நிற்குது. யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில இருந்த குளத்தை எப்படி இல்லாமல் செய்தனரோ அதுபோல கஸ்தூரியார் வீதி அரசடிச் சந்தியில மழை காலத்தில சேருகின்ற பெரு வெள்ளத்தை இல்லா மல் செய்வதற்கு யாழ்ப்பாண மாநகர சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எண்டொரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இப்படி மூப்பர் கூற, அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொள்ள இவை யாவற்றையும் அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

# தமிழ் இனத்திற்காக கூட்டமைப்பு செய்யவில்லை

நாட்டின் ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கறிவேப்பிலைகளாகப் பன்படுத்துகின்றனர் என ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளமை மிகவும் யதார்த்தமான கருத்தாகும்.

மேற்போந்த கருத்தை இதுவரை காலமும் சில தமிழ்த் தரப்புக்கள் கூறிவந்த போதிலும் அதனை ஏற்றுக்கொள்ளவும் அங்கீகரிக்கவும் கூட்டமைப்பினர் மறுத்திருந்தனர்.

ஆனால் இப்போது முதன் முறையாக ஒரு சிங்களக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாட்டை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளது. அந்த உண்மைதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலங்கை ஆட்சியாளர்கள் கறிவேப்பிலையாகப் பயன்படுத்துகின்றனர் என்பதாகும்.



ஜே.வி.பி. கூறிய இந்த உண்மையை யார் உணராவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்து செயற்பட்டால் அது போதும் எனலாம்.

தவிர, ஒரு சிங்களக் கட்சி கூறித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அவல நிலையை உணர வேண்டிய சூழ்நிலையுள்ளதென்பதும் இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டிய விடயமாகும்.

இவை ஒருபுறம் இருக்க, நித்தம் நித்தம் மாறுகின்ற எத்தனையோ விடயங்களில் மாறவேண்டிய விடயங்கள் மாறாமல் இருப்பது பற்றியும் நாம் சிந்தித்தாக வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கைப் பாராளுமன்றத்தைக் கலைத்தது அரசியலைமைப்புக்கு முரணானது என நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கில் வாதாடியவர்களில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் ஒருவர்.

மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம் பாராளுமன்றக் கலைப்புக்கு இடைக்காலத் தடை விதித்ததுடன் தனது தீர்ப்பை டிசெம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

இதுபற்றிச் சிலாகித்தவர்கள்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதிப்பாட்டினால் அரசியலமைப்புக் காப்பாற்றப்பட்டது என்றும் அதன்மூலம் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது என்றும் கூறியுள்ளனர்.

நல்லது, ஒரு நாட்டின் அரசியலமைப்பும் ஜனநாயகமும் காப்பாற்றப்படுவது கட்டாயமானது என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

ஆனால் நாம் கேட்பதெல்லாம் தமிழ் இனத்தைக் கொன்றொழிப்பதற்கும் தமிழ் மக்களை அடிமைப்படுத்துவதற்கும் உதவுகின்ற அரசியலமைப்புகளைக் காப்பாற்றுவதனூடு தமிழினத்திற்குக் கிடைக்கக்கூடிய நன்மை என்ன? அல்லது சாதகம் என்ன? என்பது தான்.

அரசியலமைப்பை மாற்றுவதன்மூலம் அல்லது திருத்தம் செய்வதன்மூலமே தமிழ் மக்கள் இந்த நாட்டில் உரிமையோடும் சுய நிர்ணயத்துடனும் வாழமுடியும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறுகிறார்.

இந்த அடிப்படையில் அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகள் நடைபெற்றாலும் இன்றுவரை அது முழுமைப்படுத்தப்படவும் இல்லை, அரங்கேற்றப்படவும் இல்லை.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் சமஷ்டி எழுதப்படாத பொருளாக இருக்கிறது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் கூற, ஜனாதிபதி மைத்திரியோ மிகத் திட்டவட்டமாக தமிழ் மக்களுக்கு சமஷ்டி வழங்கப்படமாட்டாது எனக் கூறியுள்ளார். இதிலிருந்து அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெறும் பேசுபடுபொருளேயன்றி அது அமுலாகப் போவதில்லை என்பது தெளிவாகிறது.

இப்போது நாம் கேட்பதெல்லாம் தமிழ்மக்களுக்குப் பொருந்தாத; தமிழினத்தை நசுக்குகின்ற அரசியலமைப்புச் சரத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாதுகாத்ததென்று கூறுவதற்குள் தமிழ்மக்களுக்கு ஏதேனும் நன்மை உண்டா? என்பதுதான்.

ஆக, தமிழினத்திற்கு நன்மை தரக்கூடிய எந்தச் செய்லையும் செய்யாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றம் ஏறி பாராளுமன்றக் கலைப்பை தடுக்க முற்படுகிறது என்றால், அதற்குப் பின்னால் எதிர்க் கட்சித் தலைமைப் பதவி பறிபோய்விடும் என்ற ஏக்கமும் பாராளுமன்றம் கலைபட்டால் அடுத்த பொதுத்தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றி கடுமையாக வீழ்ச்சியடையும் என்ற பயமுமேயன்றி வேறில்லை என்பது புரிதற்குரியது.

இதை உள்ளார்ந்தமாகப் புரிந்துகொள்ளாமல், இலங்கையில் ஜனநாயகத்தைத் தூக்கி நிறுத்தியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்று கூறுவது பொய்மையாளர்களைப் புகழ்ந்து பாடுகின்ற செயலுக்கு ஒப்பானதாகவே அமையும்.

இல்லை நீங்கள் கூறுவது தவறு. கூட்டமைப்பின் செயலால் இலங்கையில் அரசியலமைப்பும் ஜனநாயகமும் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று யாரேனும் அடம்பிடித்தால் அதையும் நாம் மறுதலிப்பதில் இருந்து விலகி, சரி பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்த போது அவசர அவசரமாக உயர் நீதிமன்றத்தின் வாசல் படி ஏறிய கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் விடயங்களில் நீதிமன்றத்தை நாடாதது ஏன்? என்ற கேள்வி யெழுவது நியாயமானதல்லவா?

தவிர, இலங்கைப் பாராளுமன்ற விவகாரம் சூடு பிடிக்கின்ற போது உலக நாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து நிலைமையை எடுத்துரைக்கும் கூட்டமைப்பினர் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ்மக்கள் கொல்லப்பட்டபோது வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து நிலைமையை எடுத்துரைக்காதது ஏன்?.

இவைமட்டுமன்றி- இன்றுவரை தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருக்கிறதே. அதற்காக உங்கள் சட்ட வல்லமை நீதிமன்றத்தை நாடாததும் எதற்காக? என்ற ஐயவினா எழுவது தர்மம் அல்லவா.

ஆக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கவேண்டும், அவர் பிரதமராக இருந்தால்தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி நீடிக்கும். அதனூடு தங்கள் சொந்த நலனைப் பாதுகாக்க முடியும் என்பதேயன்றி தமிழர் நலன் என்பது இங்கு இம்மியும் கிடையாதென்பதே உண்மை.

**திருநீலகண்டன்**




# சோதிடனைக் கொன்ற கதை



ஒரு சமயம் பீஜப்பூர் சுல்தான் கிருஷ்ண தேவ ராயரின் படை வலிமையைப் பற்றிக் கேள்விப்பட்டான். ராயர் சுல்தானுடன் போர் தொடுக்க எண்ணியுள்ளதையும் அறிந்து கொண்டான். இதை எப்படியேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்டான். அதனால் ஒரு சூழ்ச்சி செய்தான். அரசர் ஜோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர் என்பதை அறிந்து கொண்டான். ரகசியமாக அரண்மனை ஜோதிடரை சந்தித்தான் சுல்தான். நிறையப் பொன்னைக் கொடுத்து ராயரின் படையெடுப்பை எப்படியாவது தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொண்டான். பொன்னுக்கு ஆசைப்பட்ட அந்த வஞ்சக ஜோதிடன் நேராக விஜயநகர அரண்மனைக்கு வந்தான்.

கிருஷ்ணதேவராயர் படையெடுக்கத் தயாராக உள்ளதை அறிந்துகொண்டான். அவன் உள்ளம் வேகமாக வேலை செய்தது. மன்னர் முன் சென்று நின்றான். மிகவும் தயங்குவது போல் பாசாங்கு செய்தவன் "அரசே! தற்போது தாங்கள் படையெடுப்பது சரியல்ல. ஏனெனில் தாங்களின் கிரகநிலை தற்போது சரியில்லை. எனவே படையெடுப்பில் தற்போது இறங்க வேண்டாம்" என்று கூறினான். மந்திரி பிரதானிகளும் அதையே கூறினர். அவர்களும் மன்னரின் உயிரைப் பெரிதென மதித்தனர். அரசியரும் மன்னரை யுத்தத்திற்குப் போகவேண்டாம் எனத் தடுத்தனர். அரசரும் யோசித்தார். தெனாலிராமன் இவற்றையெல்லாம் கவனித்தவண்ணம் இருந்தான். அவனுக்கு ஜோதிடன் மேல் சந்தேகம் ஏற்பட்டது. எனவே மன்னனிடம் "அரசே! நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? சோதிடன் சொன்ன பலன்கள் எல்லாம் நடந்து விடுகின்றனவா என்ன?" என்று தைரியம் சொன்னான்.

ராயரும் அதை ஆமோதித்தார்" ராமா! நீ சொல்வதும் சரிதான். ஆனால் இதை எப்படி மற்றவர்களுக்கு நிரூபிப்பது? சோதிடம் பொய் என்று நிரூபிப்பவருக்கு பத்தாயிரம் பொன் பரிசு என்று அறிவியுங்கள்" என்றும் ஆணையிட்டார். தெனாலிராமனுக்கு மிக்க மகிழ்ச்சி.

"அரசே! நானே இதை நிரூபிக்கிறேன். ஆனால் அந்த சோதிடனுக்குத் தண்டனை தருகின்ற உரிமையையும் எனக்குத் தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். மன்னரும் இதை ஒப்புக்கொண்டார். மறுநாள் சபா மண்டபத்தில் சோதிடனும் தெனாலிராமனும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர். ராமன் சோதிடரைக் கூர்ந்து கவனித்தான். அவர் மேல் அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவன், "சோதிடரே! நீர் கூறும் சோதிடம் தவறாமல் பலிக்குமல்லவா?" என்றான் மெதுவாக.

"அதிலென்ன சந்தேகம்? நான் சொன்னால் அது கண்டிப்பாக நடந்தேறும்" தன் கரங்களைக் குவித்த படியே "நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து பலன்களைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்" என்றான் ராமன் பணிவாக. சோதிடனும் கர்வத்துடன் தலையை அசைத்துக் கொண்டான். "அப்படியானால் தங்களின் ஆயுள் காலத்தையும் தாங்கள் அறிவீர்கள் அல்லவா?"

"ஓ! நான் இன்னும் நாற்பது ஆண்டுகள் உயிர் வாழ்வேன். இது சத்தியம்" சோதிடன் பெருமையுடன் கூறினான்"உமது வாக்கு இப்போதே பொய்த்து விட்டதே! "என்றவாறே அருகே நின்ற சேனாதிபதியின் வாளை உருவி அந்த வஞ்சக சோதிடனின் தலையை வெட்டினான் ராமன். அனைவரின் திகைப்பையும் நீக்கிய ராமன் அந்த சோதிடனின் சுவடிக்கட்டை பிரித்துக் காட்டினான். அதனுள் பிஜாபூர் சுல்தான் சோதிடனுக்கு அனுப்பிய கடிதங்கள் இருக்கக் கண்டான். அந்த சோதிடன் பீஜப்பூர் சுல்தானின் கைக்கூலி என்று அறிந்து அவனுக்குத் தண்டனை அளித்ததற்காக ராமனைப் பாராட்டினார்.


தன் வாக்குப் படியே பத்தாயிரம் பொற்காசுகளையும் அளித்து மகிழ்ந்தார். அதன்பின் தன் எண்ணப்படியே பீஜபூரையும் குர்ப்பாகானையும் வெற்றி கொண்டார் கிருஷ்ண தேவராயர்.



சி.ஜிந்துஜன், தரம் 2 பி, யா/நல்லூர் சென்.பெனடிக்ற் வி.



எண்களின் உதவியுடன் உருவத்தைப் பூரணப்படுத்தி நிறந்தீட்டுக...








பாராளுமன்றம் கூடுவது ஒத்தி வைப்பதற்காகவா?

60 வயதிற்கு மேல் தேர்தலில் நிற்க முடியாது என சட்டம் போட்டால் எப்படி இருக்கும்?

பாராளுமன்றில் தூள் வியாபாரம் செய்யப் போகிறேன். நீங்களும் வருவீர்களா?

**லயன் — யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை?**

அண்மையில் பண்ணைப்பக்கம் போயிருந்தேன். ஒரு குடைமட்டும் தெரிந்தது. குடை அங்கும் இங்கும் ஆடிக்கொண்டிருந்தது. பண்ணைக்கடற்கரையில் இருந்து குடை நடனம் ஆடுகிறது என்று கொஞ்சம் எட்டிப் பார்த்தேன்.

வா செல்லம் இங்க கிரவுட்டா இருக்கு அங்கால போவம் என்று எழும் போது தான் தெரிந்தது அது ஒருவர் அல்ல இருவர் என்று.

**தேவா — இணுவில்**

**தமிழரின் தலைவிதி மாறுமா?**

மாற்ற வேண்டியவர்கள் மாறியதால் மாற்றப்படவேண்டியது மாறாமல் இருக்கிறது. மாற்ற வேண்டியதை மாற்றாமல் மாறாக மாறாததை மாறாது என்று தெரிந்தும் மாறும் என்று சொல்லிக்கொள்ளும் தலைமையின் கீழ் இருக்கும் வரை எதுவுமே மாறாது.

**ராஜா — இணுவில்**

**எங்கட ஆக்கள் ரணிலுக்காக இந்தப்பாடு படுவது ஏன் வியாசரே?**

செஞ்சோற்றுக்கடன் தீர்க்க சேரத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கண்ணா கதிரைக்கு பணிந்தாயடா எதிர் கதிரைக்கு அடி பணிந்தாயடா.

**திவ்யா — வல்வை**

**வியாசரே நீங்கள் அறிவாளி என்று யார் சொன்னது?**

யார் சொன்னால் என்ன அதுதான் ஊரே சொல்லுதே. அது சரி உங்கட கேள்விகளுக்கு பதில் எழுதினால் யார் தான் அறிவாளி என்று சொல்லப்போகிறார்கள்.

**பகீரதன் — நவாலி**

**60 வயதிற்கு மேல் தேர்தலில் நிற்க முடியாது என சட்டம் போட்டால் எப்படி இருக்கும்?**

59ற்குள் நிற்பவர்கள் நெஞ்சில் கை வைப்பார்கள் 60 வயதிற்கு மேல் சென்றவர்கள் தலையில் கை வைப்பார்கள் அவ்வளவுதான்.

**சுதன் — குப்பிளான்**

**விக்னேஸ்வரன் ஐயா தமிழர்களை ஒன்று சேர்த்தால் கூட்டமைப்பு அதனுடன் ஒன்று சேருமா?**

ஒன்றிரண்டு குறுக்கால இழுக்காட்டி கூட்டமைப்பு இணையும் சாத்தியம் இருக்கிறது. அவர்களுக்கு இப்போது இதுக்கெல்லாம் நேரம் இல்லை. ஐ.தே.கவின் விசுவாசிகளாக இருந்து புதிய அரசை கவிழ்க்கப் பாடுபடுகிறார்கள்.

**நேதாஜி — வதிரி**

**பாராளுமன்றம் கூடுவது ஒத்திவைப்பதற்காகவா?**

என்ன நடக்கிறது என எனக்கோ உமக்கோ மட்டுமல்ல யாருக்குமே புரியவில்லை. உலகின் எந்தப் பாராளுமன்றிலும் நடவாத அத்தனையும் எங்கள் பாராளுமன்றில் நடந்தேறிவிட்டது.

எம் அடுத்த சந்ததியின் பாடப்புத்தகத்தில் மிளகாய்த் தூளில் இருந்து கத்தி எடுத்தது வரை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**மயூரதன் — இணுவில்**

**எல்லாம் நேரம்வரும்போது தெரியும் என்பதன் அர்த்தம் என்ன?**

என்னை விட்டால் யாரும் இல்லை என்று ஆடியவர்களின் நிலையை இப்போது பாராளுமன்றில் பார்த்தீர்கள் தானே.

எனக்கு எதிராக போட்டியிடும் வீரர் யார் என்று இறுமாப்பாய் கேட்ட அந்த வெற்றி வீரன் இன்று பின் கதவால் ஓடும் நிலை இருக்கிறது. இதுதான் அது தம்பி.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532,**
**076 636 3378 என்ற**
**Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

# எது சிறந்த ஒளி?

ஆசிரியர் மாணவன் ஒருவனிடம், ஏன்டா, ஒளியிலே சிறந்த ஒளி எது? என்று கேட்டார். சூரிய ஒளிதான் ஐயா! பரவாயில்லையே சரியாகச் சொல்லி விட்டாயே என்றார் ஆசிரியர். சற்று பொறுங்கள் ஐயா. சூரிய ஒளிதான் சிறந்த ஒளி என்று சொல்லுவார்கள்.

ஆனால் அது தவறு. ஒளியிலே சிறந்தது அறிவு ஒளிதான். சூரிய ஒளி பார்வையாகிய ஒளி உள்ளவனுக்கே உதவும். பார்வை இல்லா விட்டாலும் அறிவு ஒளி இருந்தால் உணர்வான்.

எனவே சூரிய ஒளியிலும் அறிவு ஒளிதான் மிகுந்த ஒளி உடையது என்றான். மாணவனின் மதிநுட்பத்தைக் கண்டு வகுப்பறையே பலத்த கரவொலி எழுப்பி பாராட்டியது.

**ஜெயச்சந்திரன் — யாழ்ப்பாணம்**

**பாராளுமன்றப் போரால் தமிழருக்கு என்ன பயன்?**

தமிழருக்கு எந்தப் பயனும் இல்லை. காலாதி காலமாக தமிழருக்கு உரிமை தருகிறோம் என்று எம் தலையில் மிளகாய் தடவிய இரு பெரும் பேரினவாதக் கட்சிகள் அடிபடும்போது நடுவில் நமக்கென்ன வேலை.

நாம் பட்ட வேதனை எப்படி இருக்கும் என்று அவர்களுக்கு புரிய வைத்து அவர்கள் படும் பாட்டைப் பார்த்துக்கொண்டு நிற்காமல், பாராளுமன்றத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்களாம்.

எங்கள் கேள்வி எல்லாம் நீங்கள் பாராளுமன்றத்தைக் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதனால் உங்களுக்கு ஏதும் பயன் இருக்குமே தவிர தமிழர்களுக்கு ஏதும் இல்லை என்பதை இவ்விடத்தில் பதிவிடுகிறோம்.

**மதுசன் — சுன்னாகம்**

**மைத்திரிபால சிறிசேன இப்போது யார் பக்கம்?**

இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைதான் இப்போது அவரின் நிலையும். எந்தப்பக்கம் நிற்பது என்று அவருக்கே புரியவில்லை போல. சுதந்திரக் கட்சியிலிருந்து பெரமுனவுக்குத் தாவுபவர்களைத் தடுக்க அவர் எடுக்கும் முடிபுகள் எந்தப்பக்கம் நிற்கும்.

**ஜக்சன் — அரசடி**

**பாராளுமன்றில் தூள் வியாபாரம் செய்யப் போகிறேன். நீங்களும் வருவீர்களா?**

கண்டிப்பாக வருவேன். தென் பகுதி என்பதனால் கலப்பட கம்பனிகள் ஆக்கிரமிக்கும். அதற்குள் வடக்கு மிளகாய்த்தூள் தனித்துவமாய்த் தெரியும்.

கரைச்சு ஊத்தினா சும்மா சிவ்வென்று இருக்கும். கீரைக்கடைக்கும் எதிர்க்கடை இருக்க வேண்டும் தானே தம்பி.


**அன்பன் — யாழ்ப்பாணம்**

**ஒரு காதலன் காதலியிடம் எதிர்பார்ப்பது என்ன?**

எதையும் எதிர்பார்க்காவிட்டால் அவன் காதலன் இல்லை. அதிகமா எதிர்பார்த்தால் அது கல்யாணத்திற்கில்லை.



**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**



# தாகம் தணிவதில்லை

நீர் கசிந்திடும்
கண்களுடன்
நீங்கள் நடந்த திசை
நோக்கி கதறுகின்றோம்
காற்றினில் கலந்தவரே
எங்கள் கண்ணீரோசை
உங்கள் காதுகளுக்கு
கேட்டிடுமா ?

ஊர் கதற நாளை
உங்கள் கல்லறையினை
அலங்கரித்திடும்
காந்தள் பூவிடம் உம்
தாகத்தினை கூறிடுவீரா?
வீட்டிற்குள் நாங்கள்
வெட்டி வீரம் பேசி
வருடம் ஒரு முறை உமக்காய்
ஒரு கவிதை வடித்திடும்
முட்டாள் மனிதராய்
இனி நாமல்ல...
புதைந்து போன
கல்லறைகள்
எச்சங்களாய் மீள்வதை போல்
உங்கள் எச்சமதிலிருந்து
எமது நாளைய வரலாறுகள்
எழுதப்படும்

தலை குனிந்த எம்
இனம் தலை நிமிர்கைகள்
உங்கள் விதை குழிகள்
மட்டுமல்ல எங்கள் மண்ணும்
விடுதலை பெறும்
அது வரை தாகத்துடன்
விதையாய் உறங்குங்கள்

திக்கம் மதி, பருத்தித்துறை

## முதல் பூ

செவ்வானத்தின் முதல்
நட்சத்திரமும் நீயே!
செவ்வாழைத் தோப்பில்
முதல் கனியும் நீயே!
செவ்வாயில் முதல்
கோளும் நீயே!
கார்த்திகை மாதத்து
முதல் பூவும் நீயே!
மார்கழி மாதத்து முதல்
பனித்துளியும் நீயே!
ஆழ்கடல் சிப்பியில்
முதல் முத்தும் நீயே!

ஏ.சிவஞானம், மயிலங்காடு

## ஏன் கலக்கம்!

மிருசுவில் தமிழ்தாசன், மீசாலை

நடு நிசியில் எங்கோ
நாய் குரைக்கும் சத்தம்!
கிடுகிடென்று நடுங்கி
பயந்தொடுங்கும் சித்தம்!
கண்ணுறங்கிப் போனாலும்
நடப்பதுதான் நடக்கும்!
கண்விழித்துவிட்டாலோ
இன்னும் பல நடக்கும்
யார் வீட்டுக் கூரையோ!
இன்று முழு வீடும் சூறையோ!
யார் தலைகள் போயினதோ!
யாருக்கென்ன ஆயினதோ!
விடிந்தால் தெரிந்துவிடும்
'வலம்புரியும்' வந்துவிடும்
முடிந்தது என்னவென்று
முழு விபரம் புரிந்து விடும்
யுத்தகாலம் காணாத
கலக்கம் ஐயோ கலக்கம்!
நித்தமும் ஏன் இக்கலக்கம்!
யார் தருவார் விளக்கம்!

## கவிதைக்கலசம்

### அறத்தினை அணியாய்க் கொள்வீர்

அறத்தினை அணியாயக் கொண்டு
அகிலத்தை அணைத்தல் வேண்டும்!
மறத்தினை மதித்து வாழ்வில்
மாண்பினைப் பேணவேண்டும்!

சந்ததம் அன்பு வேண்டும்!
சரித்திரம் சமைக்க வேண்டும்!
குந்தகம் இல்லா வாழ்வை(க்)
குவலயம் காண வேண்டும்!

சிந்தனை சிறக்க வேண்டும்
சீர்த்தியே ஓங்க வேண்டும்!
நிந்தனை செய்வோர் வாழ்வினில்
நிமிர்ந்திட உறுதி வேண்டும்!

அகத்தினி லறிவு வேண்டும்!
ஆளுமை ஒளிரவேண்டும்!
சகத்தினில் உயர்வு வேண்டும்!
சங்கட மழிய வேண்டும்!

அன்பதை அணிய வேண்டும்!
அமைதியைப் பேண வேண்டும்!
துன்பத்தை துடைக்க வேண்டும்!
தூய்மையைத் துலக்க வேண்டும்!

கூத்தாடி
வி.சி.குஞ்சிதபாதம்

## துயில் கொள்வோரே கேட்டீரோ?

மண் துயிலும் துயிலாமல்
விண்ணில் வாழும் வீரர்களே
மண்ணுலகு உள்ளவரை
மறவாது உம் நினைவு

கண் துயிலும் வேளையிலும்
கனவாக நீர் வருவீர்
கணை தொடுத்து
வினையறுத்த வீரரல்லோ நீர்

இனி இந்தப் பூமியிலே
உரிமைக்காய் உயிர் துறக்க
யாருளரோ?
யாமறியோம்...

சலுகைக்கு விலைபோய்
எம் சரித்திரங்களை
அடகு வைக்கும்
தலைமைகளைக் கண்டீரோ நாயகரே!

இழுத்துலுப்பி கேள்விகேட்க
ஆளில்லை என்று
அச்சமின்றி- எம்
அழிவுகளுக்கு த்ணை நிற்கும்
இழிவு நிலை கண்டீரோ?

இனியென்ன
தட்டிக்கேட்க ஆளில்லை
தாங்கிக்கொள்ள தோளில்லை
மிச்சம் மீதி இருந்ததனையும்
விற்றுவிடத் துடிக்கும்
ஈனப் பிறவிகளுக்கே வாழ்வு

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 423



## மழலை மொழி

உலகில் எத்தனை கோடி
மொழிகள் இருந்தாலும்
பிஞ்சு மழலையின் அழுகை
ஆயிரம் அர்த்தங்கள் தரும்
அன்பு மொழி
சோறூட்டி அரவணைக்க
இன்னொரு
அன்னை தெரேசா
வரமாட்டாளா என
ஏங்கித் துடிக்கும்
பார்வைகளுக்கு
பதில் கிடைக்குமா?

ப.கார்த்திகா,
நெல்லியடி

## குழந்தையின் ஏக்கம்

வயிற்றுக்குள் பல நாள் பசி
மனதுக்குள் முடிவில்லா ஏக்கம்
உண்ண உணவும் இல்லை
தாயன்பும் உடன் இல்லை
எனக்காய் அண்ணனும்
அண்ணனுக்காய் நானும்
எமக்காய் ஏதுமில்லாமல்
எம் பசியை மட்டுமாவது
போக்கிவிடுவீர்களா?
நாளைய தலைவராகி
நாம் காப்போம் உம்மை
நிச்சயமாய்...

செல்வி. சு.ஆர்த்திகா
தொல்புரம் கிழக்கு

## எதிர்பார்ப்பின் உச்சம்

கண்ணில் நீர் ததும்ப பசியால்
கதறி அழுவது தெரியலையோ!
எடுப்பது பிச்சை என்பதை அறியாமல்
இச்சையுடன் கை நீட்டுவது தெரியலையோ!
சுடுவெயில் சுட்டெறிக்க அதிலே!
காய்கின்ற அந்த இளம்
பிஞ்சுகளை தெரியலையோ!
நகரத்து நடைபாதையிலே பாவம் நாதியற்று
நிற்கின்றார்களே, இதற்கும்
வேறு வழியில்லையோ!

ப.பாதுசன், யாழ்ப்பாணம்

## யார் அடித்தார்?

யார் அடித்தார் நீ அழ
அடித்தவர்கள் எங்கேயோ?
பாலினை விரும்பினையோ?
பணிகாரம் வேண்டினையோ?
பாவியொருத்தி பக்கத்திலை
தாய் தகப்பன் இல்லாப் பிள்ளைகளோ?
இறைவனும் அறிவானோ?
ஈவிரக்கமும் இல்லையெனில்
கையும் ஏந்தாது கண்ணும் கலங்காது
கவலையைவிட்டுவிட்டு
எம்முடன் வாழ வருவையோ?

ரி.ரி.ஜெகநாதன்
கெருடாவில்

# இவ்வார மௌனத்தின் தேடல் -424



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## இளம் நெஞ்சின் ஏக்கம்

பிஞ்சுக் குழந்தையின்
நெஞ்சு கதறுகிறது
தாயின்
அரவணைப்பிற்கு
தந்தையின்
அன்பிற்கு
பெற்றவள்
எங்கு சென்றாள்
பெற்றவளின் காவலன்
எங்கு சென்றான்
ஈன்றெடுத்த
இரு முத்துக்களை
தனியாக
தவிக்க விட்டுவிட்டு

யோ.பொமினா
யா/ சிதம்பராக் கல்லூரி
வல்வெட்டித்துறை

## புதிதான பாதை

பசி தீர்ந்து வாழ்வு
பசுமையாய் மாறும்
புசி என்றே பண்டம்
பகிர்ந்துண்ண தருவர்

அக்காவும் தங்கையும்
அழுவதால் பயன் என்
எக்காலமும் வாழ்வு
இடரோடா போராடும்

எதிர்காலத்தில் எதிரில்
எடு உறுதிதனை தீர்
புதிதான பாதை
புலரவே செய்யும்

வைகதன்
கொக்குவில்

## என் அம்மா வேணும்

அம்மா என் கண்முன்னே
உன்னைக் கொன்றனரே
என்னை உன்னிடமிருந்து
பிரித்தனரே
அம்மா எனக்கு பசிக்கிறதே
என் அம்மா எனக்கு வேணும்

ஆ.அன்ரனி, இறுதகள்

## அநாதைகள்

சிறிய வயதில்
சிங்கார நடைபோட
வேண்டிய நேரத்தில்
பரட்டைத் தலையும்
அழுத முகமும் கதறும் குரலும்
கை நீட்டி எதையோ கேட்பது
போல் தோன்றுகின்றது

பா.சுஜாதேவி, சண்டிலிப்பாய்

## கைவிலங்கிடுங்கள்

நாங்கள்
வேட்டையாடப்பட முன்
கைவிலங்கிட்டாவது- எமை
காப்பாற்றுங்கள் என
கதறியழும் சிட்டுக்களின்
கனத்த முகம் பாராயோ

மட்.ஜெனிஷார் கனிர்

# பின்னுக்குப் போங்கோ!




பின்னுக்குப் போங்க... பின்னுக்குப்போ..., சரிஞ்சு நில்லணை, தம்பி உன்னைத்தான் நட்ட மரம் மாதிரி நிற்காம பின்னுக்காபோ, பிறகு இறங்கி நின்று கதைக்கலாம்.

டிரைவர் சீற்றுக்கு பக்கத்தில் இருந்த குமாரின் சிந்தனைகளைக் குழப்பியது கொண்டக்ரரின் கத்தல்கள். தனது கிராமத்தில் இருந்து பேருந்தில் ஏறும்போது தாராளமாக இருக்கைகள் இருந்தன. அடுத்தடுத்த கிராமங்கள் தாண்ட பேருந்தினுள் சனக்கூட்டம் நிறைந்து வழியத் தொடங்கியிருந்தது.

டிரைவர் நேரத்தைப் பார்த்து பார்த்து பேருந்தை மெதுவா உருட்டிக் கொண்டிருக்க, குமரனின் மனமோ பேருந்திலிருந்து இறங்கி நடந்தே யாழ்ப்பாணம் போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டது. டிரைவரின் பக்கம் திரும்பிக் கொஞ்சம் வேகமாகத்தான் ஓடுங்கோவன் என்று சொல்ல வாயெடுத்தவன் டிரைவரின் வாயில் இருந்த வெற்றிலையைப் பார்த்ததும் தனது கதையை அடக்கிக் கொண்டான் முன்னெச்சரிக்கையாக.

வெளியில் எங்கேயும் போவதென்றால் போடுவதற்கு என வைத்திருக்கும் ஒரே ஒரு சேர்ட். தான் கதையைக் கொடுக்க டிரைவர் கதைக்க எச்சில் பறந்து வந்து சேர்ட்டை பதம்பார்த்து விடுமோ என்ற பயம் அவனுக்கு. இருந்தாலும் தில்லானா மோகனாம்பாள் சிவாஜியைப் போல் கண்ணால் கெஞ்சினான் குமார். தான் மெதுவாக பஸ்ஸை உருட்டுவதைப் பார் த்து குமார் ரென்சன் ஆனதையுணர்ந்த டிரைவர் குமாரை பார்த்து புன்முறுவல் பூத்தான்.

வீதியோரத்தில் நகரப் பாடசாலைகளுக்குச்செல்வதற்காக பாடசாலை மாணவர்கள் கும்பலாக நின்று பேருந்தை மறித்தனர். இதைக்கண்ட குமாரின் மனம் தனது மகனும் இவ்வாறு நகரப் பாடசாலைக்கு போக வேணும், பெரியபெரிய படிப்பு படிக்க வேண்டும் என்று ஆசைப்படுவான். ஆனால் பாடசாலையில் மகன் படிப்பதில்லை, புள்ளிகள் குறைவு, என்றும் மெல்லக் கற்கும் சிறுவனாகவே காணப்படுகின்றான் என்றும் ஆசிரியர்கள் கூறுவதைக் கேட்டு மனம் நொந்து போவான்.

குமாரின் வீட்டுச்சூழலோ அயல் சூழலோ மகன் படிப்பதற்கு ஏற்ற மாதிரி இல்லை என்பது குமாருக்கு தெரியும். அண்மையில் கூட நடிகர் ராகவா லாரன்ஸ்சின் பிறந்தநாளை இரவிரவாக ஒலிபெருக்கியில் சினிமாப் பாடல்களைப் போட்டு ஊரையே கதற விட்டார்கள். அடுத்தநாள் பரீட்சையில் மகன் நித்திரை கொண்டு விட்டதாக ஆசிரியர் பேசியது ஞாபகத்துக்கு வந்தது. வீட்டில் சுட்டிப்பையனாகவும், சினிமாப் பாடல்களை ஒரே தடவையில் பாடமாக்கும் இயல்புடைய மகனால் எப்படி நான்கு வரித் தேவாரத்தைப் பாடமாக்க முடியாமல் போகின்றது? விஜயின் படத்தை அச்சுப் பிசகாமல் வரையும் மகனால் எப்படி காலைக் காட்சி வரைய முடியாமல் போகின்றது? தாய் சமைப் பதற்கு வீட்டில் உள்ள வல்லாரையைப் பிடுங்கிக் கொடுக்கும் மகனால் எப்படி பரீட்சைப் பேப்பரில் வரும் வல்லாரையின் கோட்டுப்படத்தை அடையாளங்காண தெரியாமல் போகின்றது? இவற்றில் எதைவைத்து மகனை மெல்லக் கற்கும் சிறுவன் என்கிறார்கள்? விடை தெரியாது குமாரின் மனம் குழம்பிக் கொள்கிறது.

பள்ளிக்கூட பிள்ளைகள் எல்லாம் பின்னுக்குப் போங்கோ பின்னுக்கு போங்கோ... கொண்டக்ரரின் குரல் ஓங்கி ஒலிக்க... "பள்ளிக்கூடம் போற பிள்ளையலை உவன் பாவி ஒவ்வொரு நாளும் காலையில் பின்னுக்கு போங்கோ பின்னுக்குப் போங்கோ என்று கத்தினால் அதுகள் எப்படி முன்னேறுகிறது. பெடியள் பின் தங்கிப் போறதுக்கு காரணமே உவங்கள் கொண்டக்ரர்மார்தான்" என்று பெரியதொரு பகிடி விட்டது போல் டிரைவர் சிரிக்க குமாரும் சிரித்துக் கொண்டான்.

டிரைவர் குமாரைப் பார்த்து, எங்கேபோறீங்கள்? கூலிவேலைக்கு. இவ்வளவு தூரத்திலிருந்தோ?

ஓம்.. ஊருக்குள் வேலைகள் குறைவு, இஞ்சால வந்தால் சின்னச்சின்ன வீட்டு வேலைகள் செய்யலாம், அடுத்த வருடம் மகனை பெரிய பள்ளிக்கூடத் தில் சேர்க்கவேணும். பள்ளிக்கூடம் ஒரு இரண்டு கிலோமீற்றர் வரும். அதனால் சைக்கிள் ஒன்றுவேண்ட வேணும்... இப்படி வந்து அங்கே இங்கே கிடைக்கிற வேலைகளைச் செய்தால்தானே பிள்ளையை பள்ளிக்கூடம் அனுப்ப முடியும்?

ஓ உங்கட ஏரியாவுக்குள் பஸ் ஒன்றும் வாரதில்லைத்தானே.பள்ளிக்கூடம் போய்வருவது கஷ்டந்தான்.இவர்களது சம்பாசணைக்குள் அருகில் இருந்த வெள்ளைச் சேர்ட்டுக்காரர் புகுந்து... அப்ப உங்கட மகன் ஸ்கொலர்சிப் பாஸோ?

இல்லை. மொத்தமாகவே 45 புள்ளிதானாம்?அப்ப பள்ளிக்கூடத்தில சேர்ப்பினமோ? பிறகு பள்ளிக்கூடத்தின் தரம் குறைஞ்சிடும் என்று யோசிப்பினம்? எங்கட பள்ளிக்கூடத்தில சேர்ப்பினம்... நாங்கள் ஊர் ஆட்கள்...அதைவிட வேற பாடசாலைகள் அருகிலும் இல்லைத் தானே?

ஐயா, பள்ளிக்கூடத்தில இருக்கிற பிள்ளைகளின்ர அடைவு மட்டத்தை கூட்டி அதன்மூலம் பாடசாலையின் தரத்தை கூட்டவேணுமொழிய, வசதியான படிக்கக்கூடிய, பாஸ் பண்ணின பிள்ளைகளைச் சேர்த்து தரத்தை கூட்டக் கூடாது. இப்ப உந்தப் பள்ளிக்கூடங்கள் செய்யிறது கர்ப்பம் தரிச்ச பொம்பிளையைக் கலியாணம் கட்டி பிள்ளை பெறுகிற மாதிரி.

டிரைவரின் வார்த்தைகளைக் கேட்ட வெள்ளைச் சேர்ட்டுக்காரர் டிரைவரை விநோதமாகப் பார்த்தார். உண்மையை உணர்ந்தாலும் அதனை உள்வாங்க அவர் மனம் மறுத்ததை அவர் முகம் காட்டியது.

பஸ் நகரத்தை அடைந்ததும் எல்லோரும் அவசர அவசரமாக இறங்கி தம் தம் பாதையில் பயணிக்கத் தொடங்க, குமாரை இயற்கை அழைக்க யாழ்.புதிய சந்தைக் கட்டடத் தொகுதிக்குள் இருக்கும் மலசலகூடத்தை நோக்கிப் போனான்.

மலசலகூடத்தின் வெளியில் சிலர் நிற்க, இவனும் இல்லாத வரிசையில் நின்று கொண்டான். நாற்றம்தாங்க முடியாமல் சிலர் மூக்கைப் பொத்திய படி நிற்க, மலசலகூடத்தினுள் மாறிமாறி மக்கள் உள்ளே சென்று வந்து கொண்டார்களே ஒழிய தண்ணீர் ஊற்றிய சத்தமோ கழுவும் சத்தமோ மட்டும் கேட்கவில்லை.

மலசலகூடத்தினுள் போன குமாருக்கு சத்தியே வந்துவிடும் போலிருந்தது. இந்த நிலையிலா எல்லோரும் உள்ளேவந்து போகின்றார்கள்? மூக்கைப் பொத்தியவாறே வாளி நிறைய தண்ணீர் எடுத்து நாலைந்து முறை ஊற்றிய பின்னர் தன் காலைக்கடனை முடித்தான். மலசலகூடத்தின் மூலைகளில் சாராயப் போத்தல்கள்? இதுக்குள் இருந்து எப்படி? அல்லது இவற்றை குடித்து விட்டு வந்தால்தான் இதுக்குள் போக முடியுமோ?

வெளியில் வந்த குமார், தான் வேலை செய்யப் போகும் ஊருக்குப் போகும் பஸ்ஸில் ஏறியிருந்தவனுக்கு ஊரில் பரந்தவளவில் மறைவாக சலம் கழிக்கும் போதுகூட இவ்வாறான மணம், அரியண்டம் இல்லை. ஆனால் பொதுச் சுகாதார பரிசோதகர் அதை சுகாதார மற்ற முறையென்று சொல்கி றார்கள்! இங்கே? ஒருவேளை போன திருவிழாவுக்கு கோயிலில் பிரசங்கம் செய்த ஐயா சொன்ன யாழ்ப்பான கந்தபுராணக் கலாசாரம் இதுதானோ? எதற்கும் மகனைப் படிப்பிக்க வேண்டும். அப்பதான் அவனுக்காவது இதுகள் விளங்கும் என்று நினைத்துக் கொண்டான்.

அடுத்த நாட்காலை மகனின் பாடசாலை அனுமதிக்காக ஊரில் உள்ள பெரிய பள்ளிக்கூடத்துக்கு சென்றான் குமார். அங்கு பலர் வரிசையில் நிற்க இவனும் அவர்களுடன் சேர்ந்து நின்று கொண்டான்.

எந்தப் பள்ளிக்கூடம்?

குமார் பள்ளிக்கூடத்தின் பெயரைச் சொல்ல...

ஓ அந்தப் பள்ளிக்கூடமோ, பின்னுக்குப் போங்க மற்றவையை சேர்த்த பிறகு இடமிருந்தாப் பார்ப்போம் என்றார் பாடசாலை நிர்வாகி.

குமாருக்கு பயம் வந்தது. நேற்று டிரைவர் சொன்ன வார்த்தை ஞாபகம் வந்தது.பின்னுக்குப் போங்க பின்னுக்குப் போங்க... பயத்துடன் ஓரமாக நின்று கொண்டான். ஓர் அரசியல் வாதி தனது மருமகனை சேர்ப்பதற்காக வந்திருந்தார். அவரைப் பார்த்து குமார் விசயத்தைச்சொல்ல... அவரும்...

ஓம் ஓம் நானும் கேள்விப்பட்டனான்... இவங்கள் இப்படித்தான், அவங்கள் ஆட்கள் தொகை கூட அவங்களுடன் எதிராக கதைக் கேலாது, பிறகு வோட் போடமாட்டாங்க என்றவாறு நகர்ந்தார். இருக்கிற அடையாளங்களையும், வளங்களையும் தொலைத்து விட்டு தேசியம் நோக்கி அவர் பயணம் தொடர்ந்தது.

இறுதியில் வெளியில் வந்த பாடசாலை நிர்வாகி இடமில்லை. உன்னுடைய பிள்ளைக்கு புள்ளிகள் 50 இற்கும் குறைவு. அதனால் அடுத்த கிராமத்தில் உள்ள பாடசாலையில் சேருங்கோ.அங்கே தான் மெல்லக் கற்கும் மாணவர்களைப் படிப்பிக்கின்ற வசதி இருக்கு. அந்தப் பாடசாலை ஆறு கிலோ மீற்றருக்குள்ளே தானே இருக்கின்றது... என்றவாறு சென்று விட்டார். குமார் கால்கள் பின்னிக் கொண்டன... மனம் முன்னுக்குப் போ முன்னுக்குப்போ என்றது. ஆனால் கண்களில் இருந்து கண்ணீர்தான் முன்னுக்கு வந்தது.

முக்கால் காற்சட்டையுடன், காதில் தோடுமாக இருந்தவர், பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் கோட்டை விட்டு வெளிநாடு சென்று அங்குள்ள கல்விக் கொள்கையால் பட்டம் பெற்ற பழைய மாணவர் கூறிக் கொண்டிருந்தார்.

நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் . கட்டடங்கள் எல்லாம் நாங்க கட்டித் தருகின்றோம், தேவையான பணமும் அனுப்புகின்றோம், எங்களுக்கு எங்கள் பள்ளிக்கூடம் நல்லதரமான பாடசாலையாக இருக்க வேணும். எல்லோரையும் சேர்த்து பள்ளிக் கூடத்தின் தரத்தை கெடுத்து விட வேண்டாம்.

**மானிப்பாய் சுதன்**



# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக நலன் பற்றிய கண்ணோட்டம் 10

# மஜா ஆகிப்போன கஜா

"மஜா" என்றொரு தமிழ்த் திரைப்படம்.

அதில் கதாநாயகி வில்லனின் மகள். அவள் தர்பார் செய்யப்போன இடத்தில் கதாநாயகனின் லொறியை (பாரவூர்ந்து) பலவந்தமாக கடத்திச் செல்கிறாள். சும்மாயிருப்பானா கதாநாயன். வில்லனின் வீடுபுகுந்து அத்தனை அடியாட்களையும் தனியொருவனாக அடித்து நொருக்கி தன் லொறியை மீட்கிறான். தான் வில்லன் வீடு போய் துவம்சம் செய்த அடையாளமாக வில்லனின் அடிவருடியான வடிவேலுவையும் தூக்கி வந்து தன் அடிமையாக்குகிறான். கதாநாயகனின் கை, கால்களை அமுக்கி மசாஜ் செய்கிறார் வடிவேலு. அப்புறமென்ன கதாநாயகனுக்கு "மஜா" தான் (மஜா என்றால் சென்னைப் பாஷையில் சுகமான, மிருதுவான அணுகுமுறை அல்லது குளிர்மைப் படுத்துதல் என்று அர்த்தம்).

கடந்த வாரம் அச்சத்தோடு எதிர்பார்க்கப்பட்டு யாழ்.குடாநாட்டைத் தொட்டும், தொடாமலும் சாதாவாக கடந்து போன கஜா புயலும் எமக்கு ஒரு வகையில் மஜா தான்.

கஜா புயல் தென் தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்டாலும் நம்மை விட்டு வைத்தது நம் அதிர்ஷ்டமோ அல்லது ஆண்டவன் கருணையோ என்று யாமறியோம். எது எவ்வாறாயினும் அவனருளாளே அவன் தாழ் பணிவோம்.

### "கஜா" ....... தோற்றமும், தாக்கமும்

கடந்த 4 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுக்கருகில் காற்றுழுத்த தாழ்வுமண்டலமொன்று இனங்காணப்பட்டது. இதுவே "கஜா" புயலாக வளர்ச்சி பெற்ற[illegible]ந்த வருடம் மேற்படி வெப்ப மண்டலப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற 13 ஆவது காற்றமுத்த தாழ்வு மண்டலம் இதுவாகும்.

புவி தன்னைத் தானே சுற்றும் போது நிலைக்குத்து அச்சில் சுற்றுவதில்லை. 23 1/2 பாகைச் சரிவில் சாய்ந்தே சுற்றுகின்றது. இதனால் புவியின் மேற்பரப்பின் வெப்பநிலை[illegible]துவாக ஒரே சீராக இருப்பதில்லை.

ஆயினும் கடலின் மேற்பரப்பில் எப்போதாவது 26.5 பாகை செல்சியஸ் இற்கு மேல் வெப்பநிலை தொடர்ச்சியாக நீண்டகாலம் இருக்குமாயின் அந்த இடத்திலுள்ள வளி அல்லது காற்று வெப்பமடைந்து விரிவடைகின்றது. இதனால் அது இலகுவாகி மேலெழுகின்றது. அந்த இடத்தில் வெற்றிடம் ஏற்பட்டு காற்றமுத்த தாழ்வு நிலை உருவாகிறது. தாழ்வு நிலை ஏற்பட்ட இடத்தை நோக்கி அருகிலுள்ள வளி நகர்கின்றது.

இந்த வளியும் சூடாகி மேலெழுவதால் திரண்ட காற்று கடிகார சுழற்சி மார்க்கத்தில் அல்லது எதிர் கடிகார சுழற்சி மார்க்கத்தில் சுழன்று சூறாவளியாகிறது. கஜா சூறாவளியும் இவ்வாறே உருவாகியது.

இலங்கையில் வீசிய சூறாவளிகளில் 23.11.1978 அன்று கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைத் தாக்கிய 04B என அடையாளப்படுத்தப்பட்ட சூறாவளியே அதிக அனர்த்தத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்படுகின்றது. இதில் சுமார் 1000 மனித உயிர்கள்காவுகொள்ளப்பட்டன. 2 இலட்சம் வீடுகளும் 240 பாடசாலைகளும் சேதமுற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் 11 நெற்களஞ்சியங்களில் 9 களஞ்சியங்கள் முற்றாகத் தகர்ந்து அழிந்தன. சராசரியாக மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய காற்று ஒரு கட்டத்தில் 205 கிலோ மீற்றர் வேகத்தை எட்டியது. காற்றும் காற்றும் உரசி தீப்பொறி பறந்தது.

கடலில் உருவாகும் சூறாவளிகளுக்குப் பெயரிடும் முறையை அவுஸ்திரேலியர்களே அறிமுகம் செய்தனர். 1950 இல் இருந்து இம்முறைமை உலகளாவிய ரீதியில் கைக்கொள்ளப்படுகின்றது.

வங்க மற்றும் அரேபியக் கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு, பர்மா, தாய்லாந்து மற்றும் ஓமான் ஆகிய நாடுகள் இணைந்து இப்பிராந்தியத்திற்கான வானிலைக் கூட்டு மையமொன்றை 2000 ஆம் ஆண்டு உருவாக்கின. ஒவ்வொரு நாடும் தம் கடல் பிராந்தியத்தில் ஏற்படும் சூறாவளிகளுக்கு நாமம் சூட்டதலா 8 பெயர்களை முன்மொழிந்துள்ளன. இது ஒரு ஒழுங்கு முறையில் சூட்டப்படும். 2004 இலிருந்து எம் பிராந்திய சூறாவளிகளுக்கும் பெயர் சூட்டப்படுகிறது. இம்முறை பெயர் சூட்டும் பொறுப்பு இலங்கைக்குரியது. இலங்கை சூட்டிய பெயரே "கஜா". கஜா என்றால் கொம்பன் யானை. சிங்களத்தில் மட்டுமின்றி தமிழ், ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளும் கஜா என்பதற்கு யானை என்ற அர்த்தமுண்டு.

கஜா புயல் அதி உச்சமாக மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்குமென்றும், அதன் மையப்பகுதி 26 கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்டதாகவிருக்குமென்றும் எதிர்வுகூறப்பட்டதால் அது பாரிய தாக்கத்தை விளைவிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

கஜா புயல் வடகிழக்கு மற்றும் தென் மேற்கு திசைகள் நோக்கி நகர்ந்து 15.11.2018 அன்று நள்ளிரவு 12.00 இற்கு கேரளாவின் ராயல்சீமாவை முதலில் தொட்டது. பின் தமிழகத்தின் தென் மாவட்டங்களான நாகபட்டினம், இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகியவற்றைப் புரட்டிப் போட்டு இலங்கையின் வட கிழக்கு கரை வழியாக நகர்ந்து வலுவிழந்தது.

அதிகபட்சமாக அதிராமப்பட்டினத்தில் 111 கிலோ மீற்றர் வேகத்திலும், நாகபட்டினத்தில் 100 கிலோ மீற்றர் வேகத்திலும் காற்று வீசியது. கஜா புயல் அனர்த்தத்தில் தமிழகத்தில் 46 பேர் பலியாகியதாகவும், ஒரு இலட்சம் வீடுகள் சேதமடைந்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. 1500 வரையிலான கால்நடைகளும், 15 ஆயிரம் கோழிகளும் இறந்ததாகவும் புள்ளி விபரங்கள் சுட்டுகின்றன. சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மரங்கள் சரிந்தன.

நிவாரணப்பணிகளுக்கு பலரும் அள்ளிக் கொடுக்கின்றனர். திரையுலகப் பிரபலங்களில் ரஜினிகாந்த் 50 இலட்சம், சிவகுமார்- சூரியா குடும்பம் 50 இலட்சம், விஜய் 40 இலட்சம் என்று வஞ்சகமில்லாமல் இந்திய ரூபாய்களில் உதவி குவிகிறது. "சின்மயி" சூறாவளியில் சிக்கித் தவித்த கவிப்பேரரசு வைரமுத்துவும் "எழுதிப்பிழைக்கும் இந்த ஏழையின் பங்களிப்பு" என்ற குறிப்புடன் 5 இலட்சம் வழங்கியதாக தகவல்.

கஜாவின் தாக்கம் இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்களிலும் அதிகமாகவிருக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும், பெரும் பாதிப்பு இல்லையென்றே கூறவேண்டும். யாழ். மாவட்டத்தில் 770 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 793 பேர்அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதில் பெரும்பாலானோர் மூன்று தினங்கள் மீன் பிடித்தல் தடை செய்யப்பட்டமையால் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியோர் ஆவர். 25 வீடுகள் முழுமையாகவும், 483 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன என புள்ளிவிபரங்கள் சுட்டுகின்றன.





மீன்பிடி நடவடிக்கை தடைசெய்யப்பட்டதால் 3 தினங்களிலும் மொத்தமாக நாடு முழுவதும் 1200 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டுள்ளதாகவும், ஆயினும் தென்னிந்தியாவிற்கு மேலாகப் பறக்கும் விமானங்கள் தமது பயணப்பாதையை மாற்றி இத்தினங்களில் இலங்கை வான் பரப்பினூடாக பறப்பில் ஈடுபட்டதால் வான் பறப்பு அனுமதிமூலம் நாட்டுக்கு 40 மில்லியன் வருமானம் மேலதிகமாகக் கிடைத்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

### அனர்த்த அறிவிப்பும் அசமந்தங்களும்

சுமார் ஒரு வாரகாலத்திற்கு மேலாக கஜா புயலின் நகர்வு குறித்து ஊடகங்கள் விலாவாரியாகச் செய்திகளை வெளியிட்டன. வானியல் அவதான நிலையங்களும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் அறிவிப்புக்களையும், எச்சரிக்கையையும் விடுத்த வண்ணமேயிருந்தன. அண்மைக் காலத்தில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட புயலாக கஜா முன்னிடம் பெற்றது.

ஆயினும் புயல் வீசும் தினங்களில்தான் அது தொடர்பான ஏற்பாடுகளில் அதிகாரிகளின் அசமந்தங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ அலகு உண்டு. மாவட்ட அரச அதிபரே அதன் பணிப்பாளர். மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அவரைச் சார்ந்தது.

முற்கூட்டியே எடுக்கவேண்டிய சில நடவடிக்கைகளும் உண்டு. பொதுவாக அனர்த்தப் பாதிப்புக்கு அதிகம் இலக்காகக் கூடிய இடங்களில் அனர்த்த ஒத்திகை (Mock drill) இடம்பெற்றிருக்க வேண்டும். ஆயினும் அவ்வாறு ஏதும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அவசர சேவையிலக்கங்களும் பொதுவிடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அனர்த்த ஆபத்துக்குள்ளாகக் கூடிய இடங்களில் தங்குமிட வசதி, முதலுதவி அலகு, நவீன தொடர்பாடல்கருவிகள் கொண்ட "தற்காலிக அனர்த்த மத்திய நிலையங்கள்" பாடசாலைகள், பொது மண்டபங்கள், ஆலயங்கள் போன்றனவற்றில் அமைக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் பாதிப்பு அதிகம் ஏற்படக்கூடிய கரையோரப் பிரதேசங்கள், தாழ்வான பகுதிகளில் இத்தகைய முன்னேற்பாடுகளைக் காண முடியவில்லை.

வைத்தியசாலைகள் பாதிப்புக்குள்ளானவர்களை அனுமதிக்கும் பொருட்டு சாதாரண நோயாளர்கள் விடுதிகளிலிருந்து விடுவிக்கப்பட்டு போதுமான வெற்றுப் படுக்கைகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் போதனா வைத்தியசாலை வழமை போல வழமையான நோயாளரால் நிரம்பி வழிந்தே காணப்பட்டது.

தீயணைப்புப் படையணி தயார் நிலையிலிருந்ததா? என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

முப்படைகளுக்கும், தொண்டர் சேவைகளுக்கும் மீட்புப் பணியில் ஈடுபடத் தயார் நிலையில் இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுப் பணிப்பாளரால் கோரிக்கை வழங்கப்பட்டதா? என்பதும் தெளிவாகவில்லை.

அனர்த்தங்களின் போது பொதுமக்கள் கூடும் இடங்





## அக்னி

கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக சந்தைகள் குறித்த தினங்களில் கூடுவது கட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் குடாநாட்டின் எல்லாச் சந்தைகளும் அன்றைய நாட்களில் கூடின. சன நடமாட்டத்திற்குப் பஞ்சமிருக்கவில்லை. ஆக சந்தை விலைகள் மட்டுமே கஜா பேர்ல வேகமாக எகிறின.

இவை எல்லாவற்றையும்விட இலகுவில் ஆபத்திற்குள்ளாகக் கூடிய மாணவர்கள் தொடர்பில்கூடிய கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக புயல் வீசுமென எதிர்பார்க்கப்பட்ட 15, 16 ஆம் திகதிகளில் பாடசாலைகள் மூடப்படுவதற்கான முற்கூட்டிய அறிவிப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 16 ஆம் திகதி புயல் எம் மாவட்டத்தினூடாக பயணித்த வேளையில் கூட இது தொடர்பான தீர்க்கமான முடிவின்மையால் சகல மாணவர்களுமே தம் உயிரைப் பணயம் வைத்து பாடசாலை செல்ல வீதியில் இறங்கி விட்டிருந்தனர்.

பரீட்சைக் காலமென்பதால் பெற்றோரும் மாணவரை பாடசாலைக்கு விடாமல் மறிக்கத் தயங்கினர்.

சரியான அனர்த்த முகாமை நடவடிக்கையின் படி முற்கூட்டிய அறிவிப்புடன் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கப் பட வேண்டும். இதை மாவட்டச் செயலகமே அனர்த்த நிலைமையின் கீழ் அறிவித்திருக்கலாம்.

அல்லது சம்பந்தப்பட்ட திணைக்கள உயர் அதிகாரிகளுடன் கூடி முடிவெடுத்திருக்கலாம். கஜா புயல் தொடர்பில் திணைக்களத் தலைவர்களுடனான உயர் மட்ட கலந்துரையாடல் எதுவும் இடம்பெறாமையும் அசமந்தப் போக்கினையே சுட்டுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ அலகு முற்கூட்டியே பாடசாலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தால் சம்பந்தப்பட்ட திணைக்களமே தன் அமைச்சுடன் ஆலோசித்து விடுமுறை அறிவித்திருக்கலாம். ஆனால் இறுதி நேரம் வரை உரிய தீர்மானமெடுக்க முடியாமல் அதிகாரிகள் திணறியதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.

இறுதியாக பரீட்சை நடத்துவதில்லையென்ற தீர்மானம் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்ற பின்னரே முடிவாகியது. இதனால்பயனேது. பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்கள் வீடுகளிலிருப்பதே பொருத்தமான அனர்த்தப்பாதுகாப்பு. இல்லாவிடின் அவர்கள் பாடசாலையில் பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால் பலமான காற்றும், அடைமழையும் பொழியும் நேரம் அவர்களை வீதியில் விடுவது எவ்வளவு தூரம் பாதுகாப்பானது என்று பொறுப்பானவர்கள் சிந்திக்க வேண்டும்.

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி விட்டு பதைபதைத்த பெற்றோரின் அங்கலாய்ப்பு, காற்றிலும் மழையிலும் நனைந்த பிள்ளைகளின்நடுக்கம்எல்லாவற்றையும் "பாடசாலை மூடப்படுகின்றது" என்று ஆளுநர் விடுத்த அறிவித்தல் இறுதி நேரத்தில் "சுபம்" சொல்லி இனிதே முடித்துவைத்தது.

எது எவ்வாறாயினும் புயல் தொடர்பாக அறிவிப்புக்களும், அறிவுறுத்தல்களும் பரபரப்பாக விடுக்கப்பட்டாலும் அனர்த்தத்தை எதிர்கொள்ளும் தயார் நிலையில் நாம் அசமந்தமாகவே இருந்துள்ளோம் என்பது தெட்டத்தெளிவு.

கஜா குடாநாட்டிற்கு மஜா ஆகியதால் நாம் தப்பித்தோம். அல்லது போனால் சங்காரமாகியிருப்போம்.

| காற்றின் வேகம் | புயலின் வகைப்பாடு |
|---|---|
| 31 குறைவு 17 நாட் | காற்றமுத்த தாழ்வு பகுதி |
| 31 kmph 49 17 - 27 நாட் | காற்றமுத்த தாழ்வு மண்டலம் |
| 50 kmph 61 28 - 33 நாட் | ஆழ்ந்த காற்றமுத்த மண்டலம் |
| 62 kmph 88 34 - 47 நாட் | புயல் |
| 89 kmph 118 48 - 63 நாட் | தீவிர புயல் |
| 119 kmph 221 64 - 119 நாட் | மிக தீவிர புயல் |
| 221 மேல் 120 நாட் மேல் | மாபெரும் புயல் |



## இது நம்ம கதைகள்... 26

# ஹலோ...... ஹலோ......

மனித வளர்ச்சிக்கு மட்டுமின்றி, மானிட இருப்பிற்கும் தகவல் பரிவர்த்தனை பெரும்பங்காற்றி வருகின்றது. இன்று உலகின் ஒரு கோடியில் நிகழ்பவற்றை மறு நொடியிலேயே பிரபஞ்சமே அறியுமளவிற்கு தகவல் பரிவர்த்தனை பரிணமித்துள்ளது.

அறிவியல் முதல் வர்த்தகம் வரை எல்லாமே இன்று தகவல் பரிவர்த்தனையில்தான் தங்கியுள்ளன.



ஆயினும் தகவல் பரிவர்த்தனை வளர்ச்சியென்பது படிமுறை வளர்ச்சியேயாகும். ஆதிகாலத்தில் ஓசைகளையெழுப்பியும், புகைமூட்டியும் செய்தி அனுப்பிய மனிதன் பின்னர் பறவைகளைப் பயன்படுத்தி செய்திகளை பரிமாறிக் கொண்டான். ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்சில் 1790 களில் தகவல் பரிவர்த்தனைக்காக பயன்படுத்தப்பட்ட "செமோபோர்" (Semaphore) என்ற சமிக்ஞைக் குறிகாட்டி மரமே பிற்காலத்தில் தொலைபேசி பாவனைக்கு வழி வகுத்தது.

1830 இல் மின் தொடர்பாடல் கருவி மூலம் தகவல்கள் சமிக்ஞைகளாக அனுப்பும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

உலகின் முதல் தொலைபேசி 1876 இல் அலெக்சாண்டர் கிரஹம்பெல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் சமகாலத்தில் பலர் தொலைபேசியை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். 1965 இல் ரெரி பால் என்ற இசைக் கலைஞர் தந்தியில்லா தொலைபேசியை வடிவமைக்கும் முயற்சியில் கணிசமான முன்னேற்றம் கண்டார். 1973இல் அமெரிக்கரான மாட்டின் கூப்பர் செல்லிடத் தொலைபேசியை உருவாக்கினார்.

இலங்கையில் முதல் இணைப்புத் தொலைபேசி சேவை கொழும்பு - காலி மார்க்கத்தில் நூற்றாண்டுகளுக்கு முன்பே பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. இன்று இலங்கையில் 2496014 நிரந்தர இணைப்புத் தொலைபேசிகளும், 28228635 செல்லிடத் தொலைபேசிகளும் பாவனையில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அந்த வகையில் நிரந்தர இணைப்புத் தொலைபேசியை பயன்படுத்துவோர் விகிதம் 100 பேருக்கு 12 பேர் எனவும், செல்லிடத் தொலைபேசிகள் 100 பேருக்கு 132 என்ற எண்ணிக்கையிலிருப்பதாகவும் ஆய்வுகள் சுட்டுகின்றன.

தொலைபேசிப் பரிவர்த்தனை இவ்வுலகினுள் மட்டுமின்றி அண்டவெளியிலிருந்தும், பிற கோள்களிலிருந்தும் கூட விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.



அமெரிக்கா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய மூன்று நாடுகளின் செல்வந்த கோடீஸ்வரர்கள் மூவர் ஒரே நேரத்தில் இயற்கையெய்தினர். ஆயினும் இவ்வுலகில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் சகலவிதமான ஈனச் செயல்களையும் புரிந்து செல்வம் திரட்டியதால் நரகத்திற்கு தீர்வையிடப்பட்டனர்.

நரகத்திலிருந்து கொண்டு தம் நிலைபற்றி பூலோகத்திலிருக்கும் தம் குடும்பத்தினருக்கு தெரியப்படுத்த வேண்டும், உறவுகளோடு மனம் விட்டு பேச வேண்டுமென்பது அவர்களது ஆசை. நரகத்தின் தலைமைப் பிசாசிடம் இதனைத் தெரிவித்தனர். "தாராளமாகப் பேசலாம் ஆனால் பெருந் தொகையை தொலைபேசிக் கட்டணமாக செலுத்த வேண்டிவரும்" என்றான் நரகத்தின் தலைமைக் காவலன்.

"எவ்வளவு செலவானாலும் பறவாயில்லை. தொலைபேசியைத் தருங்கள்" என்றனர் மூவரும் ஒரே குரலில்.

தொலைபேசி வழங்கப்பட்டது. முதலில் அமெரிக்க செல்வந்தன் 10 நிமிடங்கள் பூலோகத்திலுள்ள தன் குடும்பத்துடன் பேசினான். முடிவில் "கட்டணம் எவ்வளவு?" என்று கேட்டான். "1000 அமெரிக்க டொலர்கள்" என்றான் நரகத்துத் தலைவன். "ஏன் இவ்வளவு தொகை கட்டணம் அறவிடுகிறீர்கள் " என்று கேட்டான் அமெரிக்கன். "உங்கள் நாடு இங்கிருந்து வெகு தொலைவிலிருக்கிறது. வெளிநாட்டு அழைப்புக்கான கட்டணம் (IDD)அதிகம் தான்" என்றான் நரகின் தலைவன்.

அடுத்துஇங்கிலாந்து நாட்டுக்காரன் தன் குடும்பத்துடன் 20 நிமிடங்கள் உரையாடினான். அவனிடம் 1500 ஸ்ரேலிங் பவுன்ஸ் அறவிடப்பட்டது.

இறுதியில் இலங்கையன் தன் குடும்பத்துடன் 2 மணித்தியாலங்கள் உரையாடினான். அவனிடம் கட்டணமாக 43 ரூபாய் 21 சதம் அறவிடப்பட்டது. இதைக் கவனித்த அமெரிக்கனும், இங்கிலாந்துக்காரனும் "இது அநியாயம். குறைந்த நேரம் கதைத்த எங்களிடம் அதிக கட்டணம் அறவிட்டீர்கள். ஆனால் அதிக நேரம் கதைத்த இலங்கையனிடம் சொற்ப தொகை அறவிடுகிறீர்களே, இலங்கையும் எங்கள் நாடுகளைப் போல் தொலை தூரத்தில் தானேயிருக்கிறது. இது அநீதி, மோசடி" என்று தம் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

நரகத்தின் தலைவன் அவர்களை ஒரு முறை உற்றுப் பார்த்துக் கொண்டே சொன்னான். "இலங்கையும் உங்கள் நாடுகளைப் போல் இங்கிருந்து தொலை தூரத்திலிருந்தாலும் அங்குள்ளவர்களுடன் கதைப்பதற்கு வெளிநாட்டுக் கட்டணம் (IDD) அறவிடப்படுவதில்லை. உள்நாட்டு அழைப்புக் கட்டணம் (local call charge) தான் அறவிடப்படுகின்றது. ஏனென்றால் அதன் இப்போதைய நிலை நம் நரகாபுரி போல் தான் இருக்கிறது ". அதைக் கேட்ட நம்மவர் தலைகுனிந்து நின்றார்.

**நல்லதோர் வீணை செய்தே- அதை**
**நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# மௌனத்தில் தொலைத்த மனச்சாட்சி

# -ஆங் சான் சூகி-



ஐம்பதாண்டுக்கால இராணுவ ஆட்சியின் முடிவில் முதல்முறையாக 2015இன் இறுதியில் மியன்மாரில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டபோது மியன்மார் மாபெரும் அடிப்படை மாற்றங்களுக்குத் தயாரானது.

ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக லீக், 80 வீத இடங்களை வென்று ஆட்சியைக் கைப்பற்றிய போது மியன்மார் மக்கள் அதை ஆரவாரத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர். ஒட்டுமொத்த தேசத்தையும் இரும்புப்பிடிக்குள் வைத்திருந்த இராணுவம் இப்போது கால்பங்கு இடத்தைப் பெற்று, தலையைக் குனிந்து, கைகளைக் கட்டிக்கொண்டு நாடாளுமன்றத்தில் ஓர் ஓரத்தில் அமர்ந்திருக்கிறது. இது ஜனநாயகத்தின் வெற்றி. இராணுவத் தலைமையை வீழ்த்தியிருக்கும் மக்களாட்சிக்குக் கிடைத்திருக்கும் வெற்றி. எங்கள் எல்லோருக்கும் இது ஒரு பெருமிதமான தருணம். இந்தப் பெருமிதத்தை எங்களுக்கு அளித்திருப்பவர் சூகி. உலக மக்களே, இனி நீங்கள் புதிய மியன்மாரைச் சந்திப்பீர்கள்!

மலர் சூடிய கூந்தலோடும் மெல்லிய புன்னகையோடும் சூகி கையசைத்த போது பலர் தன்னிச்சையாகக் கண்கலங்கியது நிஜம். விறைப்பான சீருடை அணிந்த ஆண்களை மட்டுமே அதுவரை அதிகார பீடத்தில் கண்டுவந்த கண்களுக்குக் கனிவும் பணிவும்கூடிய ஒரு பெண்ணின் முகம் மிகப் பெரிய ஆறுதலையும் ஆசுவாசத்தையும் அளித்திருக்க வேண்டும். ஆம், சூகியின் குழந்தைகள் அயல்நாட்டுக் குடியுரிமை பெற்றவர்கள் என்பதால் அவரால் ஜனாதிபதியாக முடியாதுதான். ஆனால், சூகியின் கட்சியே வென்றிருக்கிறது என்பதால் அவருடைய நளினமான கரங்களால் தேர்ந்தெடுக்கப்படுபவரே ஆட்சியை நடத்தப்போகிறார். அந்த வகையில் இனி நடக்கப்போவது சூகியின் ஆட்சிதான். தேச விடுதலைக்காக உயிரைக் கொடுத்த ஜெனரல் ஆங் சானின் மகள் அதிகாரத்தை வென்றெடுத்திருப்பது உத்வேகமூட்டும் ஒரு சரித்திர நிகழ்வு, இல்லையா?

இந்த நம்பிக்கையை உலக நாடுகள் பலவும் உற்சாகத்தோடு பகிர்ந்துகொண்டன. அமைதியின் அடையாளமாகவும் நற்பண்புகளின் உருவமாகவும் இருக்கும் சூகியின் தலைமை மியன்மாரை வேறொரு தளத்துக்கு உயர்த்தும் என்றும் நல்வழிப்படுத்தும் என்றும் அவர்கள் நம்பினர். 1991 ஆம் ஆண்டே அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றாலும் இராணுவக் கட்டுப்பாடுகள் காரணமாக இருபது ஆண்டுகள் கழிந்து 2012இல்தான் அந்த விருதை சூகியால் பெற்றுக்கொள்ள முடிந்தது. தனது ஏற்புரையின் போது, 'ஆதரவற்றவர்களுக்காகவும் வீடற்றவர்களுக்காகவும் நம்பிக்கையிழந்தவர்களுக்காகவும் நான் பாடுபடுவேன். அவர்களுக்கான தாயகமாக என் நாட்டை மாற்றிக் காட்டுவேன்' என்று உணர்ச்சி பொங்க முழக்கமிட்டார் சூகி.

அதே 2012இல்தான் மியன்மார் மிகப் பெரிய வகுப்புவாதக் கலவரத்தை எதிர்கொண்டது. ஒரு இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் தங்களுடைய இருப்பிடங்களிலிருந்து பிடுங்கி வீசப்பட்டு உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற மோதல்களில் 200 ரோஹிஞ்யாக்கள் கொல்லப்பட்டனர். இருந்தும் சூகியின் குரல் அவருடைய தொண்டையை விட்டு வெளியில் வரவேயில்லை. அதனலம் தான் அளித்த உறுதி மொழியை அவரே நொறுக்கி வீசினார். இலட்சக் கணக்கான மக்களின் நம்பிக்கையையும் மெல்ல மெல்ல இழக்க ஆரம்பித்தார்.

இன்று மாபெரும் பள்ளத்தாக்கை நோக்கி உருண்டு ஓடிக்கொண்டிருக்கிறார் சூகி. அவருக்கு அளிக்கப்பட்டிருந்த கௌரவக் குடியுரிமையைக் கனடா அண்மையில் இரத்துச் செய்துள்ளது. எங்கள் நாட்டின் ஆதரவை சூகி இழந்துவிட்டார் என்று மலேசியாவின் பிரதமர் அதிகாரபூர்வமாகவே அறிவித்துவிட்டார். ஐ.நா. சபை உட்பட பல சர்வதேச அமைப்புகள் சூகியின் செயலற்ற தன்மையைக் கோபத்தோடும் வருத்தத்தோடும் விமர்சித்துள்ளன. ஆம்னெஸ்டி இன்டர்நஷனல் மனித உரிமைப் போராளிகளுக்கு அளிக்கும் உயரிய அங்கீகாரமான 'மனச்சாட்சியின் தூதர்' என்னும் விருதை சூகிக்கு அளித்திருந்தது. மிகுந்த ஏமாற்றத்துடன் அந்த விருதைச் சென்ற வாரம் ஆம்னெஸ்டி திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளது.

'மக்களின் அடிப்படை விருப்பம் என்ன தெரியுமா? சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழவேண்டும் என்பதுதான். உலகிலுள்ள மூலைமுடுக்குகளில் இருப்பவர்கள்கூட இப்படி வாழ்வதற்கான உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்.' இவை சூகியின் சொற்கள். இந்த உரிமை ரோஹிஞ்யாக்களுக்கு மறுக்கப்படுவதைக் கண்ட பிறகும் அமைதியாக இருந்ததுதான் சூகியின் வீழ்ச்சிக்குக் காரணம். மியன்மாரின் 53 மில்லியன் மக்கள் தொகையில் நான்கு சதவிகிதம் வகிக்கும் சிறு பொட்டலம்போல் இருக்கும் ரோஹிஞ்யா முஸ்லிம்களைக் கைவிட்டதன்மூலம் ஜனநாயகத்தின் இதயத்தையும் இலட்சக் கணக்கான மக்களின் நம்பிக்கைகளையும் சிதறடித்திருக்கிறார் சூகி.

இத்தனைக்கும் 9ஆம் நூற்றாண்டு தொடங்கி ரோஹிஞ்யாக்கள் மியன்மாரில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தொடக்கத்தில் இருந்தே மியன்மாரின் மண்ணோடும் மக்களோடும் அவர்கள் ஒன்று கலந்துதான் இருந்தனர் என்றாலும், 90வீத பௌத்தர்கள் அவர்களை அந்நியர்களாகக் கருதுவதை நிறுத்திக்கொள்ளவேயில்லை. 2010இல் தொடங்கிய இந்த வெறுப்பு ரோஹிஞ்யாக்களுக்கு எதிரான வன்முறையாக வெடிக்க ஆரம்பித்தது. அப்போது சூகி எதிர்க்கட்சித் தலைவர். இந்த வெறுப்பு உற்பத்தியானதற்கு இராணுவத் தலைமைதான் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்று அப்போது சரியாகவே குற்றம் சாட்டினார் அவர். 'சர்வாதிகார ஆட்சிக்கு உட்பட்டிருப்பதால் தான் நாம் இத்தகைய வேதனைகளைக் காணவேண்டியிருக்கிறது. மனித உரிமைகளையும் ஜனநாயக விழுமியங்களையும் உயர்த்திப்பிடிக்கும் வரை இந்தச் சிக்கல் தீராது.'

ஆனால் இராணுவ ஆட்சி அகற்றப்பட்டு, சூகியின் கட்டுப்பாட்டின்கீழ் அந்நாடு வந்து சேர்ந்தபிறகும் தங்கள்மீதான தாக்குதல் நிறுத்தப்படாததைக் கண்டு ரோஹிஞ்யாக்கள் திகைத்து நின்றார்கள். மியான்மார் நிகழ்வுகள் இப்போது சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருந்தன என்பதால் உலகம் முழுவதிலுமுள்ள ஜனநாயக ஆர்வலர்கள் சூகியின் செயல்களைப் (அல்லது செயலற்ற நிலையை) புரிந்துகொள்ள முடியாமல் தவித்தனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகும் ஏன் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றன? ஏன் குழந்தை குட்டிகளோடு, மூட்டை முடிச்சுகளோடு இரவோடு இரவாக ரோஹிஞ்யா மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்? ஏன் அவர்களுடைய குடிசைகள் லும்பன் கும்பல்களால் கொளுத்தப்படுகின்றன? மியன்மார் இராணுவமும் தன் பங்குக்கு ஏன் ரோஹிஞ்யாக்களைத் தேடித் தேடி வேட்டையாடுகிறது? ஒரு நாட்டின் இராணுவம் அந்நாட்டுக் குடிமக்கள்மீதே திருப்பப்படுவது என்ன மாதிரியான ஜனநாயகம்? முன்பு இராணுவத் தலைமைக்கு வீரர்கள் கட்டுப்பட்டுக் கிடந்தனர். இப்போது சூகியின் கரங்களில் அல்லவா அதிகாரம் குவிந்திருக்கிறது? எனில், இராணுவத்துக்கும் மக்களாட்சிக்கும் வேறுபாடே கிடையாதா? மியன்மார் மாறவேயில்லையா?

மாறியிருக்கிறது. ஆனால் எதிர்பாராத திசையில். சூகியின் வெற்றிக்குப் பிறகு ரோஹிஞ்யாக்களின் நிலைமை முன்பைவிட மோசமடைந்திருக்கிறது. ஒகஸ்ட் 2017 தொடங்கி ஏழு இலட்சத்துக்கும் அதிகமான ரோஹிஞ்யா முஸ்லிம்கள் வெளியேறி பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். உங்கள் நாட்டில் நடைபெறுவது வெறும் வகுப்புவாதக் கலவரம் அல்ல, மிகப்பெரிய இனவொழிப்பு என்கிறது ஐ.நா சபை. ரோஹிஞ்யாக்கள்மீதான திட்டமிடப்பட்ட தாக்குதல்களைக் கண்டிக்க மறுப்பதோடு நில்லாமல், அவற்றை மூடிமறைக்கவும் முயல்கிறார் சூகி. இன்றைய திகதிவரை ஐ.நா. ஊழியர்களைத் தன்னுடைய நாட்டுக்குள் அவர் அனுமதிக்கவில்லை.

'சொல்லுங்கள், எங்களை ஏன் கைவிட்டீர் சூகி?' - ரோஹிஞ்யா முஸ்லிம் சமூகத்தின் இந்தக் கேள்விக்கும் சூகியிடமிருந்து பதிலில்லை. பெரும்பான்மை பௌத்தர்களை அனுசரித்துப் போனால் போதும், அவர்களிடமிருந்து சிறுபான்மையினரைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நீங்களும் அரசியல் கணக்கு போடுகிறீர்களா சூகி? ஓட்டு அரசியல் உங்களை இவ்வாறு உருமாற்றி விட்டதா அல்லது இதுதான் உங்களுடைய நிஜமுகமா?

ஜனநாயகம், விடுதலை, நீதி ஆகிய விழுமியங்களை சூகி வெவ்வேறு காலங்களில் உயர்த்திப்பிடித்தது நிஜம். ஆனால் இவற்றையெல்லாம் ரோஹிஞ்யாக்களுக்கும் நீட்டிக்க அவர் தயாராக இல்லை என்னும்போது அந்த விழுமியங்கள் அர்த்தமிழந்து போகின்றன. 2013ஆம் ஆண்டு பிபிசிக்கு அளித்த ஒரு பேட்டியில், 'ரோஹிஞ்யா முஸ்லிம்கள்மீதான வன்முறை அதிகரித்து வருகிறது என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. பௌத்தர்களுக்கும்கூடத்தான் பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களும்கூட வன்முறையை அனுபவிக்கிறார்கள். அவர்களும் கூட வீடுகளை இழந்திருக்கிறார்கள்' என்று பாதிக்கப்பட்டவர்களையும் தவறிழைத்தவர்களையும் ஒரே தட்டில் நிறுத்தி வாதிட்டிருக்கிறார் சூகி.

'மியன்மார் மட்டுமல்ல, முழு உலகமும் முஸ்லிம்களின் அதிகாரத்தைக் கண்டு அஞ்சிக்கொண்டு தான் இருக்கிறது' என்றும் அதே பேட்டியில் சொல்லியிருக்கிறார். ரோஹிஞ்யாக்கள் மீது வன்முறையைப் பிரயோகிக்கும், அதை நியாயப்படுத்தும் பௌத்தர்களின் வாதமும்கூட இதுவேதான் இல்லையா?

மொத்தத்தில் சூகியின் குரல் என்பது ஜனநாயகத்தின் குரலல்ல; பெரும்பான்மை வாதத்தின் குரல். ஆதிக்க சக்தியின் குரல். மறைந்திருக்கும் வெறுப்பு அரசியலின் குரல். அதனால்தான் அந்தக் குரல் தவிர்க்கவியலாத படிக்கு சிறுபான்மையினருக்கு எதிரானதாக ஒலிக்கிறது. அதனால்தான் அந்தக் குரல் முக்கியமான தருணங்களில் எல்லாம் ஒலிக்காமல் புதையுண்டு போகிறது. கால ஓட்டத்தில் இத்தகைய குரல்கள் சரிவைச் சந்திப்பதும் மறைந்து காணாமற்போவதும்கூடத் தவிர்க்கவியலாததுதான்.

**ஜூனியர் விகடன்**

# யுவராஜுக்கு முன் களமிறங்கியது ஏன்?

## 2011 உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் நடந்த டோனியின் நினைவுகள்



2011 உலகக் கிண்ண இறுதிப்போட்டியில்யுவராஜுக்கு முன்னால் களமிறங்கியது ஏன் என்பது குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி மனம் திறந்திருக்கிறார்.

2011ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியை இந்தியக் கிரிக்கெட் ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய அணி உலகக் கோப்பையைக் கையில் ஏந்தியதினம் அன்று. இலங்கை அணிக்கெதிரான அந்தப் போட்டியில் இந்திய அணிக்கு 274 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சேஸிங் செய்யக் களமிறங்கிய இந்திய அணி சச்சின் மற்றும் சேவாக் ஆகியோரது விக்கெட்டுகளை 31 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் இழந்து தடுமாறியது. அப்போது கௌதம் கம்பீருடன் ஜோடி சேர்ந்த விராட் கோலி 3ஆவது விக்கெட்டுக்கு 83 ஓட்டங்கள் சேர்த்து நல்ல அத்திபாரம் அமைத்துக் கொடுத்தார்.

22ஆவது ஓவரில் விராட் கோலி ஆட்டமிழந்ததும், அணித்தலைவர் டோனி களமிறங்கினார்.

உலகக்கோப்பைத்தொடரில் தொடர் நாயகனாக ஜொலித்த யுவராஜுக்கு முன்னதாக டோனி களமிறங்கியது, ரசிகர்கள் மட்டுமின்றி விமர்சகர்களையும் புருவம் உயர்த்தச் செய்தது. ஆனால், அன்று டோனி நிகழ்த்தியதோ இந்தியக் கிரிக்கெட் ரசிகன் என்று மறக்க முடியாத மஜிக். ஆட்டமிழக்காமல் டோனி 91 ஓட்டங்கள் சேர்க்க, இந்திய அணி உலகக் கோப்பையைக் கையில் ஏந்தியது. இதன்மூலம் இருபது-20 மற் றும் 50 ஓவர் உலகக் கோப்பை என இரண்டு உலகக் கோப் பைகளை வென்ற ஒரே அணித் தலைவர் என்ற சாதனையை டோனி படைத்தார். இன்றைய திகதி வரை இந்த சாதனை தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில், அந்தப் போட்டியில் யுவராஜுக்கு முன்னர் தான் களமிறங்கியது ஏன் என்பது குறித்து டோனி தற்போது மனம் திறந்திருக்கிறார். சத்தீஸ்கர் மாநிலம் டோங்கர்கோன் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட டோனி கூறுகையில், "இலங்கை அணியின் பெரும்பாலான பந்துவீச்சாளர்கள் ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடியவர்கள்.

அந்த நேரத்தில் முத்தையா முரளிதரன் பந்துவீசிக் கொண்டிருந்ததால், நான் யுவராஜுக்கு முன்னதாகக் களமிறங்கலாம் என முடிவு செய்தேன். சென்னை அணிக்கான வலைப்பயிற்சியின் போது முரளிதரன் வீசிய பந்துகளை அதிகம் எதிர்கொண்டிருந்தேன்.

எனவே, அவரின் பந்து வீச்சில் நம்பிக்கையுடன் அதிக ரன்களைச் சேர்க்க முடியும் என்று நினைத்ததால், இறுதிப் போட்டியில் யுவராஜுக்கு முன்னதாக நான் களமிறங்கினேன்" என்று தெரிவித்தார்.

மேலும், விக்கெட் கீப்பர் பணிச் சுமை இருப்பதால் ஒரு கீப்பரால் வெற்றிகரமான கப்டனாக செயற்பட முடி யாது என தேர்வாளர்கள் நினைத்ததை மாற்றியதாகக் கூறிய டோனி, "விக்கெட் கீப்பர் என்பவர் கப்டனுக்குப் பயனளிக்கும் ஆலோசனைகளைச் சொல்லக் கூடியவர். அவரது ஆலோசனைகள் மூலம் அணித்தலைவர் பணிச்சுமையைக் குறைக்கக் கூடியவர் கீப்பர்" என்றார்.



# விராட் கோலி என்னுடைய பேவரட் - அப்ரிடி ஒப்பின் டோக்

இந்திய அணியின் அணித் தலைவர் விராட் கோலி, ஒரு பட்ஸ்மனாக எனக்குப் பிடித்த வீரர் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் ஷாகித் அப்ரிடி கூறியிருக்கிறார்.

இந்திய அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

தலா 3 போட்டிகள் கொண்ட இருபது-20 மற்றும் ஒருநாள் தொடர்கள் மற்றும் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விராட் கோலி தலைமையிலான இந்திய அணி விளையாடுகிறது.



முதல் 2 இருபது-20 போட்டிகள் முடிவடைந்த நிலையில், அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது. முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்ற நிலையில், மெல்பேர்னில் நடைபெற்ற இரண்டாவது போட்டி மழை காரணமாகக் கைவிடுவதாக அறி விக்கப் பட்டது.

இந்த நிலையில், இந்திய அணியின் அணித்தலைவர் விராட் கோலி குறித்து பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் ஷகித் அப்ரிடி மனம்திறந்திருக்கிறார்.

விராட் கோலி, தான் விளையாடும் ஒவ்வொரு தொடரிலும் பட்டிங்கில் சாதனைகள் படைத்து வருவதாகவும், மிகச்சிறந்த களத்தடுப்பாளராகத் தன்னை மெருகேற்றிக் கொண்டிருப்பதாகவும் அப்ரிடி பாராட்டியிருக்கிறார். அதேநேரம், ஒரு அணித்தலைவராக அவர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருப்பதாகவும் அப்ரிடி சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தனியார் ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ள அவர், எனக்கு மிகவும் பிடித்த வீரர்களுள் ஒருவர் விராட் கோலி. ஆனால், ஒரு அணித்தலைவராக அவர், நிறைய கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது.


இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான தொடர் ரசிகர்களுக்கு விருந்தாக அமையும். விராட் கோலி தலைமையிலான இந்திய அணி, அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தத் துடிக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்.


# விண்வெளியில் காலாவதியான செயற்கைக்கோள்கள் என்னவாகின்றன?

ஒவ்வொரு நாடும் தனது பாதுகாப்புக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துகின்றன.

மனிதனால் உருவாக்கப்படும் ஒவ்வொரு எலக்ட்ரோனிக் பொருளுக்கும் குறிப்பிட்ட வாழ்நாள் உண்டு. எலக்ட்ரோனிக் சாதனங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் பழுதாகி தானாகவே செயலிழந்து விடும். மீண்டும் உபயோகிக்க முடியாத அவற்றை மறுசுழற்சி செய்வதுதான் சூழலியலுக்கு நல்லது. ஆனால், விண்வெளியில் பழைமையான செயற்கைக்கோள்களை அப்படிச் செய்ய முடியாது. அப்படியென்றால் அவற்றை என்ன செய்கிறார்கள்?

ஒரு பொருளைச் சுற்றுப் பாதையில் (ஆர்பிட்) சுற்றும் மற்றொரு பொருள் கோள் என்று அழைக்கப்படுகிறது. இவற்றில் இயற்கைக்கோள் மற்றும் செய





ற்கைக்கோள் என இரண்டு வகைகள் இருக்கின்றன. பூமியைத் தனது சுற்றுப் பாதையில் சுற்றி வரும் வளிமண்டலக் கோள்கள், "இயற்கைக்கோள்கள்" என அழைக்கப்படுகின்றன.

மனிதனால் உருவாக்கப்படும் கோள் தனது சுற்றுப் பாதையில் சுற்றி வருபவை "செயற்கைக் கோள்கள்" என அழைக்கப்படுகின்றன. இதில் இயற்கையான கோள்களைப் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை. அவை தனது வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருக்கும். ஆனால், செயற்கையாக உருவாக்கப்பட்ட கோளானது விண்ணில் சில ஆண்டுகள் மட்டுமே பயணத்தைத் தொடர முடியும். நிர்ணயிக்கப்பட்ட காலத்தை நீடிக்கச் செய்ய முடியாது. அதனால் அவற்றை சுற்றுப் பாதையை விட்டு இறக்கிச் செயலிழக்க வைக்கப்படும் அல்லது அழிக்கப்படும்.

மேலே அனுப்பப்படும் பல செயற்கைக்கோள்கள் பல்வேறு காரணங்களுக்காக அனுப்பப்படுகின்றன. அவற்றில் பொதுவாக புவி கண்காணிப்பு, தகவல் தொடர்பு, வானிலை, கோள் ஆராய்ச்சி எனப் பொதுவான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாடும் தனது பாதுகாப்புக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துகின்றன. ஒரு செயற்கைக் கோள் 25 ஆண்டுகள் வரைகூட தனது பணியைச் சிறப்பாகச் செய்யும். அதன் பின்னர் அதன் செயற்றிறன் குறைந்து பழுதாகி, செயலற்றதாக்கி விடும். செயலிழக்கும் செயற்கைக்கோளானது மற்ற செயற்கைக்கோள்களுடன் மோதி விபத்துக்குள்ளாகும் வாய்ப்புகளும் இருக்கின்றன.

அதனால் அந்தச் செயற்கைக் கோளைப் பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்ய வேண்டும். செயலிழக்க வைக்கும் நேரங்களில் மனிதர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பாக கையாள்வது அவசியம். இதற்கு இரண்டு வழிகள் மட்டுமே இருக்கின்றன. இரண்டில் எந்த வழி என்பதைச் செயற்கைக்கோளின் தொலைவு தான் தீர்மானிக்கிறது.

முதல் வழி, வெகு தொலைவில் இருக்கும் செயற்கைக் கோளாக இருந்தால், மேலும் தொலைவுக்கு அனுப்பி விடுவார்கள். அதாவது கைவிடப்படும் செயற்கைக்கோளை சுற்று வட்டப் பாதையை விட்டு விலக்கி 300 கி.மீற்றருக்கு மேல் அதிக தொலைவில் அனுப்பப்பட்டு விடும்.

அந்தப் பகுதியின் பெயர் கல்லறை கோளப் பாதை என்று அழைக்கப்படுகிறது. கல்லறை கோளப் பாதைக்கு அனுப்பப்படும் செயற்கைக் கோளானது பல மில்லியன் ஆண்டுகளுக்கு அங்கேயே சுற்றிக்கொண்டிருக்கும். இவற்றிற்கு "விண்வெளிக் குப்பைகள்" என்று பெயர். பூமிக்கு வெகு தொலைவில் அனுப்பப்படும் செயற்கைக்கோளை மீண்டும் பூமிக்குக் கொண்டு வந்து எரிப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. ஏனெனில் செயலிழக்கும் தன்மை கொண்ட நிலையில் இருக்கும் செயற்கைக்கோளில் எரிபொருள் குறைவானதாகவே இருக்கும்.

அதனால் இடையிலேயே எரிபொருள் குறைந்து, தானாகவே செயலிழந்து மற்ற செயற்கைக்கோளுடன் மோதும் வாய்ப்பு அதிகம். இதனால்தான் தொலைவில் இருப்பதை மேலும் தொலைவுக்கு அனுப்புகிறார்கள்.

இரண்டாம் வழி பூமிக்கு அருகில் சுற்றும் செயற்கைக்கோளாக இருந்தால், அதன் எரிபொருளை காலி செய்து வேகத்தை மட்டுப்படுத்தி, பூமியை நோக்கி வர வைத்து வளிமண்டலத்தில் எரித்து விடுவார்கள். பூமிக்கு அருகில் சுற்றும் சிறிய செயற்கை கோளாக இருந்தால் பூமியை நோக்கி வர வைத்தால் தானாகவே எரிந்துவிடும். ஆனால், மிகப் பெரிய செயற்கைக்கோளாகவோ, விண்கலமாகவோ இருந்தால் பூமியை நோக்கி வர வைத்தால் முற்றிலுமாக எரியாது. இதனால் பூமியை வந்தடையும் போது மக்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும். எனவே இதைத் தவிர்க்க விண்வெளி கழிவுகளை நியூசிலாந்து நாட்டின் வெலிங்டன் நகரின் தென் கிழக்கில் சுமார் 3,900 கி.மீ. தொலைவிலுள்ள தென் பசுபிக் பெருங்கடலில் விழச்செய்து அழித்து விடுவார்கள். இதனால் மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் எந்தவிதமான பாதிப்புகளையும் ஏற்படுத்தாதவாறு பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்தப் பகுதிக்குப் பெயர்தான் "விண்கலங்களின் கல்லறை". செயற்கைக்கோள் எவ்வளவு பாதுகாப்பாக ஏவப்படுகிறதோ, அதை விட அதிக பாதுகாப்புடன் அதைக் கையாள்வதும் முக்கியம்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சவாலே சமாளி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன்
பாடியவர் : பி.சுசிலா



சம் சம்.. சம் சம் சம்
சம் சம்.. சம் சம் சம்
சம் சம்.. சம் சம் சம் லல்லல் லா

சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு
தென்றலே உனக்கேது சொந்த வீடு
சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு
தென்றலே உனக்கேது சொந்த வீடு
உலகம் முழுதும் பறந்து பறந்து
ஊர்வலம் வந்து விளையாடு
உலகம் முழுதும் பறந்து பறந்து
ஊர்வலம் வந்து விளையாடு
சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு ஓஹோ

மரத்தில் படரும் கொடியே உனை வளர்த்தவரா
இங்கு படர விட்டார்
டப்பபடப்ப டட டா டப்பபடப்ப டட டா
மரத்தில் படரும் கொடியே உனை வளர்த்தவரா
இங்குப் படர விட்டார்
மண்ணில் நடக்கும் நதியே உன்னைப் படைத்தவரா
இந்தப் பாதை சொன்னார்
உங்கள் வழியே உங்கள் உலகு
இந்த வழி தான் எந்தன் கனவு
லலலலலலாலலல லி...லலலா
சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு..கட்டுப்பாடு.. ஓஹோ

பழத்தைக் கடிக்கும் அணிலே
இன்று பசிக்கின்றதோ
டப்பபடப்ப டட டா டப்பபடப்ப டட டா
பழம் ருசிக்கின்றதோ
பழத்தைக் கடிக்கும் அணிலே
இன்று பசிக்கின்றதோ
பழம் ருசிக்கின்றதோ
பாட்டு படிக்கும் குயிலே நீ படித்ததுண்டோ
சொல்லிக் கொடுத்ததுண்டோ
நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும்
னினைத்தபடியே நடக்க வேண்டும்
லலலலலலாலலல லி...லலலா
சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு..கட்டுப்பாடு.. ஓஹோ

வளரும் தென்னை மரமே
நீ வளர்ந்ததைப் போல் நான் நிமிர்ந்து நிற்பேன்
டப்பபடப்ப டட டா டப்பபடப்ப டட டா
வளரும் தென்னை மரமே
நீ வளர்ந்ததைப் போல் நான் நிமிர்ந்து நிற்பேன்
வணங்கி வளையும் நாணல்
நீ வளைவதைப் போல் தலை குனிவதில்லை
பார்க்கும் கண்கள் பணிய வேண்டும்
பாவை உலகம் மதிக்க வேண்டும்
லலலலலலாலலல லி...லலலா

சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு
தென்றலே உனக்கேது சொந்த வீடு
சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு
தென்றலே உனக்கேது சொந்த வீடு
உலகம் முழுதும் பறந்து பறந்து
ஊர்வலம் வந்து விளையாடு
உலகம் முழுதும் பறந்து பறந்து
ஊர்வலம் வந்து விளையாடு
சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு ஓஹோ,




தமிழ் சினிமாவில் தொடர்ந்து வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பவர் விதார்த். இவர் நடிப்பில் குற்றமே தண்டனை, ஒரு கிடாயின் கருணை மனு, குரங்கு பொம்மை ஆகிய தரமான படங்களை தொடர்ந்து ராஜேஸ் இயக்கத்தில் வண்டி என்ற படமும் வந்துள்ளது. இந்த படமும் அந்த லிஸ்டில் இணைந்ததா? பார்ப்போம்.

படத்தின் ஆரம்பத்திலேயே டுட்டு என்ற பைக் பொலிஸ் நிலையத்தில் நிற்கின்றது. அந்த பைக் ஏன் பொலிஸ் நிலையத்திற்கு வந்தது என்று கதை விரிகின்றது.

அந்த கதை மூன்றாக நான் லீனியராக வருகிறது. இதில் ஒவ்வொரு கதையும் எப்படி ஒரு இடத்தில் சந்தித்து படத்தின் டுவிஸ்ட் ஒவ்வொன்றாக அவிழ்கின்றது என்பதே வண்டி படத்தின் மீதிக்கதை.

விதார்த் எப்போதும் கதை தேர்வில் கோட்டை விட மாட்டார். அதை இந்த முறையும் சுப்பராக செய்துள்ளார். விதார்த்வேலையை விட்டு சுற்றும் இளைஞராக நடித்துள்ளார். அவரை போலவே கூட வரும் நண்பர்களும் அப்படியே உள்ளனர்.

ஜான் விஜய் காமெடியில் கலக்கி எடுத்துள்ளார். அதேபோல் வண்டியை திருட இரண்டு இளைஞர்கள் வருகின்றனர். அதில் ஒரு இளைஞரின் நடிப்பு சுப்பர். நல்ல எதிர்காலம் தமிழ் சினிமாவில் அவருக்கு உள்ளது.

படத்தின் முதல் பாதியில் வரும் கதை மிகவும் சுவாரஸ்யமாக நகர்கின்றது. அடுத்து என்ன, அடுத்து என்ன என்று சென்றாலும், இரண்டாம் பாதியில் மூன்றாவது கதை தொடங்கியது கொஞ்சம் டல் அடிக்க ஆரம்பிக்கின்றது.

முதல் டுவிஸ்டிலேயே படத்தின் கதை தெரிந்துவிட, அதன் பின் சுவாரஸ்யம் கொஞ்சம் குறையத்தொடங்குகிறது. படத்தின் பின்னணி இசை கலக்கல். ஒளிப்பதிவும் நான் லீனியர் கதையை நமக்கு புரியும் படி தெளிவாக கலர் டோன் மாற்றி காட்டியுள்ளனர்.



படத்தின் திரைக்கதை அனைத்தும் மக்களுக்கு புரியும் படி காட்டிய விதம், படத்தின் கிளைமேக்ஸ் 3 கதையும் ஒரு இடத்தில் சந்திக்கும் விதம் சுப்பர்.

மூன்றாவது கதை வரும் போது ஓடியன்ஸிடமே கொஞ்சம் சுவாரஸ்யம் குறைகிறது. மிகவும் டபுள் மீனிங் வசனம். அதை தவிர்த்து இருக்கலாம்.

மொத்தத்தில் இந்த வண்டி ரேஸ் பைக் போல் செல்லவில்லை என்றாலும், ஒரு முறை உட்கார்ந்து ரைடு வரலாம்.




aprilia

#be a racer

இத்தாலி
தொழில்நுட்பம் மற்றும் நிறைவு

ஸ்கூட்டர் அணிவகுப்பின் RACING ஸ்கூட்டர்
அபான்ஸ் ஓட்டோ அறிமுகம் செய்யும் Aprilia ஸ்கூட்டர்கள்

Aprilia நிறுவனம் இத்தாலியின் முன்னணி RACING மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்வதோடு, 125cc முதல் 1000cc வரையான மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் உலகளாவிய ரீதியில் பல்வேறு விருதுகளை வென்றுள்ளது. மேலும் Aprilia ஸ்கூட்டர்கள் அனைத்தும் சிறப்புவாய்ந்த இத்தாலி தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்படுகின்றன.



- 14" அங்குல அலோய் வீல்
- டியூப்லெஸ் டயர்கள்
- 6.5 லீட்டர்கள் கொள்ளளவுடைய எரிபொருள் தாங்கி
- கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதி
- CVT தன்னியக்க கியர் அமைப்பு
- 125cc / 150cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின், 3 வேல்வுகள்
- MAP sensing மற்றும் Variable Spark Timing Management
- டுவின் பிஸ்டன் கெலிப்பருடன் வரும் முன்புற ஹைட்ரோலிக் 220mm டிஸ்க் பிரேக்
- முன்புறம் - டெலஸ்கொபிக் சஸ்பென்ஷன் பின்புற ஹைட்ரோலிக் ஷொக் அப்சோபர்

விலை ரூ.309,990/- இலிருந்து

0115 777 000

அபான்ஸ் ஓட்டோ மோட்டார் சைக்கிள் காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

Abans AUTO

# ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு ஏன் கோபம்?

திட்டமிடத் தவறுகிறவர்கள், தவறு செய்யத் திட்டமிடுகிறார்கள் என்ற பொன்மொழி தற்போதைய தமிழக அரசுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும். கஜா புயலை எதிர்கொள்வதை ஒரு நாள் கூத்தாகக் கருதிய தமிழக அரசு, அதற்காகத் தன்னைத்தானே பாராட்டியும் கொண்டது. ஆனால், பெரும் புயல் கொண்டுவந்து சேர்த்திருக்கும் துயரத் தில் அரசாங்கத்தின் சாயம் வெளுத்து விட்டது. 'கஜா புயல் தமிழக அரசிடம் கூஜா புயலாகி விட்டது' என்றும், 'தமிழக அரசின் வேகத் துக்கு முன்னால் புயலின் வேகம் தோற்று விட்டது' என்றும் அமைச்சர்கள் பேசிய பேச்சு களும், முதல்வர் சொன்ன 'ஜீபூம்பா' உதாரணமும் வடிவேலு நடித்த 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படத்தை நினைவூட்டுகின்றன.



இயற்கை ஏற்படுத்தும் பேரிடரைவிடப் பெருந்துயரை அளிக்கக்கூடியது, ஆட்சியாளர்கள் ஏற்படுத்தும் பேரிடர். இயற்கையின் சீற்றம் உருவாக்கும் பாதிப்பைவிட, அரசாங்கத்தின் அலட்சியமும், ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனமும் அதிகமான ஆபத்தை உருவாக்கும். கஜா புயல் நிவாரணப் பணி களின் களநிலவரங்கள், அந்தப் புண்ணின் ஆழத்தையும் ஆபத்தையும் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

2004 டிசெம்பர் 26 அன்று சுனாமி என்கிற ஆழிப்பேரலை ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்த பிறகே நமக்கு 'இயற்கைப் பேரிடர்' என்ற வார்த்தை அறி முகமானது. அதுவரை புயல், மழை, பூகம் பம் போன்ற அனைத்துமே நமக்கு 'இயற் கைச் சீற்றம்'தான். சுனாமிக்குப் பிறகு 2005இல் தாக்கிய 'பானூஸ்' புயல், 2008 இல் டெல்டா பகுதிகளில் பாதிப்பு உருவாக்கிய 'நிஷா' புயல், 2010இல் உருவான 'ஜல்' புயல் போன்ற 'இயற்கைப் பேரிடர்கள்' ஏற்படுத்திய சேதம் குறித்த முறையான மதிப்பீடும் கணக்கீடும் நம்மிடம் இல்லை. 2011 டிசெம்பர் 28 அன்று 135 கி.மீ. வேகத்தில் வீசிய 'தானே' புயல் கடலூர், புதுச்சேரி மக்களைச் சூறையாடிய போது, தமிழக ஊடகங்கள் உரிய கவனம் அளித்தபோதும், தேசிய ஊடகங்கள் நம் பக்கம் திரும்பவே இல்லை.

இத்தகைய பேரிடர் காலங்களில் அரசு இயந்திரம் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களின் ஒரே புகலிடம். 'நிவாரணப் பணி'களை அரசு இயந்திரம் மட்டுமே அதிக அளவில் மேற்கொண்டபோது, அரசாங்கம் சொல்கிற சேத மதிப்பீடே இறுதியாக இருந்தது. நிஜத்தை மதிப்பிட அரசு இயந்திரத்தை விட நமக்கு வேறு வழி இல்லாமல் இருந்தது. 2015 டிசெம்பரில் சென்னையை மூழ்கடித்த பெரு வெள்ளம், தமிழகத்தைத் தட்டி எழுப்பியது. பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்கும் பணியில் அரசாங்கத்தை மட்டுமே நம்பியி ருக்காமல், பொதுமக்கள் தங்கள் பங்களிப் பின் அவசியத்தை அனைவருக்கும் உணர்த்தினர். 'நிலைமை கைமீறிப்போன சூழ்நிலை'யை அம்பலப்படுத்தி, தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து உதவிகளைக் கொண்டு சேர்த்ததில் சமூக ஊடகங்களின் பங்களிப்பு மகத்தானது. இப்போதும் சமூக ஊடகங்கள் அதைச் செய்கின்றன. அதனால்தான் 'எல்லாம் சுமுகமாக இருக்கிறது' என்று ஆட்சியாளர்க ளால் முன்புபோல ஏமாற்ற முடியவில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் தர முடிகிற நிவாரணத்தை, தன்னார்வலர்களோ, தனியார் அமைப்புகளோ தந்துவிட முடியாது. ஆனால், வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் காவிரிப் படுகை மக்கள், உதவிக்கு வருகிற சக மனிதர்கள் மீது வைக்கிற நம்பிக்கையைக்கூட அரசாங்கத்தின் மீதோ, அதிகாரிகள் மீதோ வைக்கவில்லை.

புயல் பாதிப்புக்குள்ளான ஏழு மாவட்டங்களிலும், ஏறக்குறைய 20 அமைச்சர்கள் பொறுப்பேற்று நிவாரணப் பணிகளை மேற் கொள்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் உணவு, குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கே தவித்துப்போய் நிற்கிற மக்கள், அமைச்சர்களையும் அதிகாரிகளையும் விரட்டியடிக்கிறார்கள். ஏற்கெனவே மீதேன், ஐதரோ காபன், காவிரி நீர்ப் பங்கீடு போன்ற விவகாரங்களில் மாநில அரசால் புறக்கணிக்கப்பட்டு மனம் வெதும்பியிருந்தவர்கள் இப் போது மேலும் கொந்தளிப்புக்கு ஆளாகியி ருக்கிறார்கள்.

ஆட்சியாளர்களையும், அதிகாரிகளையும் மக்கள் ஏன் கோபத்தோடு எதிர்கொள்கிறார்கள் என்பது விடை காண வேண்டிய முக்கியமான கேள்வி. இயற்கைப் பேரிடர் காலங்களில் பலரும் முதலமைச்சர் நிவா ரண நிதிக்கே பணம் கொடுப்பார்கள். இந்த முறை நடிகர்கள், வணிகர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும், தொண்டு நிறுவனங்க ளுக்கும், களப் பணியாளர்களுக்கும் தங்கள் உதவியை அனுப்பிவைத்திருக்கிறார்கள். ஏன்? யாரோ அனுப்பிய பொருட்களில் தங்கள் கட்சியின் ஸ்டிக்கரை ஒட்டியதைப் பார்த்த பிறகு அவர்களுக்கு நம்பிக்கை எப்படி வரும்?

ஆளும் அரசாங்கம் இப்படி என்றால், களத்தில் சிலருடைய வன்முறைச் செயற்பாடோ 'செல்லம் கொடுத்து கெடுக்கப்பட்ட குழந்தைகளின் செயற்பாடுகளைப் போல' மேலும் இடைஞ்சலாக இருக்கிறது. "எங்கள் வீட்டுக்கு வந்து சேதாரத்தைக் கணக்கெடுங்கள்" என்று மூத்த அதிகாரிகளிடம் வலியுறுத்துகிற மக்களிடம், 'ஒவ்வொரு வீடாகப் போய்ப் பார்ப்பது சாத்தியமில்லை' என்று நடைமுறைச் சிக்கலை அவர்கள் விளக்கினாலும், அதை ஏற்கச் சிலர் தயாராக இல்லை. "ஓட்டுக்குக் காசு கொடுக்கும்போது மட்டும் வீடுவீடாக வர் றாங்கள்ல?" என்பதாகவும் சேதாரங்களை முறைப்படி கணக்கெடுக்க முயற்சி செய்யும் போது, 'எல்லாருக்கும் பொதுவாகக் கொடுக்க வேண்டும்' என்று வலியுறுத்தி, கணக்கெடு ப்பு நடத்தச் சிலர் தடையாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. "இத்தகைய இடையூறுக ளுக்குப் பின்னால் அரசியல் கட்சியினரின் தூண்டுதலும் இருக்கிறது" என்கின்றனர் பத்திரிகையாளர்கள்.

பொதுவாக, இதுபோன்ற சீரமைப்புப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளை வைத்துச் சீர்செய்வதே முறையானது. ஆனால், தேர்தலையே நடத்தாமல் உள்ளாட்சி அமைப்புகளை முடக்கிவைத்ததன் விளைவு இப்போது மோசமாக வெளிப்பட்டிருக்கிறது.

ஆட்சியில் இருப்பவர்களோ, தங்களின் நலனுக்காக ஒட்டுமொத்த மாநில மக்களையும் இடர்பாடுகளில் சிக்கவைப்பதில் குற்றவுணர்ச்சி அற்றவர்களாக இருக்கின்றனர். ஆட்சி அதிகாரத்தின் மீதும், அரசியல் கட்சிகள் மீதும் மக்களுக்கு இருக்கிற கோபத்தில் அவநம்பிக்கையின் கங்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தீ உடனடியாக அணைக்கப்பட வேண்டும். பேரிடர் காலத்திலும் குறுகிய அரசியல் நோக்கத்தோடு நடந்து கொள்பவர்களிடம் 'மக்கள்நல செயற்பாடு'களை எதிர்பார்ப்பது பேராசைதான். ஆனால், ஆசை யாரைத்தான் விட்டது?

**நன்றி: த ஹிந்து**

# இறையாண்மையைவிட சக்திமிக்க அதிகாரம் வேறு எதுவுமில்லை



மக்கள் இறையாண்மையைவிட சக்தி மிகுந்த அதிகாரம் வேறு எதுவும் இல்லை என்பதை பலர் மறந்து விட்டார்கள். 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பின்னர் நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் அசட்டை செய்யப்படுவதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய கூட்டணியின் தலைவரும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளருமான ஆர். மனோஜ் கமகே கூறுகிறார்.

இதன் காரணமாக சபாநாயகரே தனக்கு ஜனாதிபதியைவிட உயர்வான அதிகாரம் இருப்பதைப் போல் நடந்துகொள்கிறார். எனவே 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மோதலை ஏற்படுத்தியுள்ள நிறைவேற்றதிகாரம் மற்றும் சட்டவாக்கத்துக்குமான அதிகாரங்கள் தொடர்பான அனைத்து சரத்துக்களையும் திருத்த வேண்டிய தேவையுள்ளது என்று அவர் வழங்கிய பேட்டியொன்றின் போது குறிப்பிட்டார்.

**கேள்வி: 19ஆவது திருத்தச்சட்டம் ஏன் அறிமுகப்படுத்தப்பட்டது?**

பதில்: 19ஆம் திருத்தச் சட்டம் மக்களுக்கு தேவையான ஒன்றல்ல. அது வெளி நாடுகள், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டதாகும். 62 இலட்சம் வாக்காளர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ள அதிகாரங்களை குறைத்து நாட்டை கட்டுப்படுத்தும் ஒரு வழியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது ஆதரவாளர்களினால் அரசாங்கத்துக்கு பிரேரிக்கப்பட்டதே 19 ஆவது திருத்தச்சட்டம்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை இரத்துச்செய்ய வேண்டிய தேவை 19ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கவில்லை. முன்னாள் பிரதமரின் நோக்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரதமரின் தேவைக்கேற்ப பயன்படுத்துவதாகவே இருந்தது.

அதே நேரம் 19ஆவது திருத்த சட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது மகன்மார் மற்றும் அவரது சகோதரர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் உரிமையை இரத்துச் செய்வதாகவே இருந்தது.

இது 19ஆம் திருத்தச் சட்டத்தில் மறைக்கப்பட்டிருந்த ஒரு நிரல். இந்த தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் காரணமாக அரசியலமைப்பின் 19ஆவது திருத்த சட்டம் சாத்திய மற்றதும் முழுமையற்றதுமாக ஆகியது.

**கேள்வி: 19வது திருத்தச் சட்டம் எவ்வாறு வரையப்பட்டது?**

பதில்: 19ஆவது திருத்தச் சட்டத்தை வரைவதில் வெளிநாடுகளும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுமே பின்னணியில் இருந்தன. இந்த அரசியலமைப்பு திருத்தச் சட்டத்துக்கு பங்களிப்பு செய்தவர்களுக்கு ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இருந்ததே தவிர நாட்டின் நன்மை பற்றிய அக்கறை அவர்களுக்கு இருக்கவில்லை. எனவே இதனை சரியான முறையில் அதனை முன்னெடுத்துச் செல்ல அவர்களால் முடியவில்லை.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக 12 தரப்பினர் முறைப்பாடுகளை செய்திருந்தனர். எனினும் இது உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது அதில் உள்ள சில சரத்துக்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுப்படுத்துவது அரசியலமைப்பு மீறலாக உள்ளது என்று கூறப்பட்டது. அது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டுமென்றும் கூறப்பட்டது. எனினும் அரசியலமைப்பு சட்டத்துறையினர் உயர் நீதிமன்றத்துக்கு செல்லவில்லை. எனவே அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் முழுமையடையாமலேயே உள்ளது.

**கேள்வி: 19ஆவது திருத்தச் சட்டத்தை எப்படி ரத்து செய்வது?**

பதில்: அது இலகுவானது. 19ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. எனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 19ஆவது திருத்தச் சட்டத்தின் எந்தவொரு பிரிவையும் நீக்க முடியும்.

facebook

# இட்லியை துரத்திய பாட்டி

ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு பாட்டி. அந்தப் பாட்டிக்கு இட்லி என்றால் ரொம்பப் பிடிக்கும்.

இட்லி சாப்பிடுவது மட்டுமல்ல, இட்லி சமைப்பதும் அவளுக்குப் பிடிக்கும், அதை மற்றவர்களுக்குத் தருவது இன்னும் பிடிக்கும்.



பாட்டி தினமும் மாவை அரைத்துச் சுடச்சுட இட்லி செய்து எல்லாருக்கும் தருவார். அவர்கள் ருசித்துச் சாப்பிட்டுப் பாராட்டுவார்கள், உன்னைமாதிரி இட்லி செய்ய இன்னொருத்தர் பொறந்துதான் வரணும்!

அந்தப் பாராட்டுகளைக் கேட்டுப் பாட்டி மனம் திறந்து சிரிப்பார். அவர்கள் தருகிற காசுகூட ரெண்டாம்பட்சம்தான்.

ஒருநாள், பாட்டி இட்லிகளைத் தட்டில் போட்டபோது, ஒரே ஒரு இட்லிமட்டும் கீழே விழுந்து விட்டது. மறுகணம், அங்கிருந்து அது உருண்டு ஓடத் தொடங்கியது.

ஏய், நில்லு, நில்லு என்று கத்தியபடி அந்த இட்லியைத் துரத்தினார் பாட்டி. அப்போது, திடீரென பூமி பிளந்தது. இட்லியோடு பாட்டியும் அதற்குள் விழுந்துவிட்டார்.

பூமிக்குக் கீழே, இட்லி தொடர்ந்து ஓடியது, பாட்டியும் துரத்தினார். சற்றுத் தொலைவில், சில சாமி சிலைகள் நின்றிருந்தன. பாட்டி முதல் சிலையிடம் கேட்டார், இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்துச்சா? நீங்க பார்த்தீங்களா?'

ஆமா, பார்த்தேன் என்றார் முதல் கடவுள், ஆனா, நீ அதைத் துரத்திகிட்டுப் போகாதே ஏன்? அந்தப் பக்கம் ஒரு அரக்கி இருக்கா, அவ உன்னைத் தின்னுடுவா.

நான் அரக்கியைப் பார்த்து பயப்படமாட்டேன்' என்று சொல்லி விட்டுத் தொடர்ந்து நடந்தார் பாட்டி. சற்றுத் தொலைவில், அடுத்த சாமி சிலை வந்தது. அதனிடம் கேட்டார் பாட்டி, இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்துச்சா? நீங்க பார்த்தீங்களா?

ஆமா, பார்த்தேன் என்றார் இரண்டாவது கடவுள். ஆனா, நீ அதைத் துரத்திகிட்டுப் போகாதே ஏன்? அந்தப் பக்கம் ஒரு அரக்கி இருக்கா, அவ உன்னைத் தின்னுடுவா. நான் அரக்கியைப் பார்த்து பயப்படமாட்டேன் என்று சொல்லி விட்டுத் தொடர்ந்து நடந்தார் பாட்டி.

சற்றுத் தொலைவில், அடுத்த சாமி சிலை வந்தது. அதனிடம் கேட்டார் பாட்டி, இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்துச்சா? நீங்க பார்த்தீங்களா?'

ஆமா, பார்த்தேன் என்றார் மூன்றாவது கடவுள். 'நீ சட்டுன்னு எனக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கோ ஏன்?

இதோ அரக்கி வர்றா இதைக் கேட்ட பாட்டி அந்தச் சாமிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டார்.

சில நிமிடங்களில், அந்த அரக்கி வந்தாள். அவள் பெரிய, பயமுறுத்தும் உருவத்தில் இருந்தாள். சாமி முன் வந்து கும்பிட்டாள். பிறகு, மூக்கை உறிஞ்சி, மனுஷ வாசனை அடிக்குதே என்றாள்.

அதெல்லாம் இல்லை என்றார் கடவுள். நீ கிளம்பு! கண்டிப்பா மனுஷ வாசனை அடிக்குது என்ற அரக்கி, பாட்டியைப் பார்த்துவிட்டாள், அட, நீயா? என்றாள்.

என்னை உனக்குத் தெரியுமா? உன் இட்லியைப்பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன்' என்றாள் அரக்கி என்னோட வா! கடவுள் கேட்டார், நீ அவளைத் தின்னப் போறியா?

ம்ஹூம், என்னோட சமையல் காரியா வெச்சுக்கப்போறேன்' என்ற அரக்கி பாட்டியை ஒரு படகில் ஏற்றினாள். ஆற்றில் படகு சென்றது.

இந்தச் சின்ன ஆத்தைக் கடக்கறதுக்குப் படகு எதுக்கு? என்று கேட்டார் பாட்டி. நீதான் அரக்கியாச்சே, என்னைத் தூக்கிட்டுத் தண்ணியில நடக்கமாட்டியா

அச்சச்சோ, எனக்குத் தண்ணின்னா பயம், நீச்சலடிக்கவும் தெரியாது என்றாள் அரக்கி.

சிறிது நேரத்தில் அவர்கள் அரக்கி மாளிகைக்குள் நுழைந்தார்கள். அங்கே இவளைப்போலவே இன்னும் பல அரக்கிகள் இருந்தார்கள்.

இனிமே எங்களுக்கு நீதான் தினமும் சமைக்கணும் என்றாள் அரக்கி. சமைக்கிறேன், ஆனா இவ்ளோ பேருக்குச் சமைக்க அரிசிக்கு எங்கே போறது?'

இதோ என்று ஒரே ஒரு அரிசியை எடுத்துக் கொடுத்தாள் அரக்கி. இந்த ஒரு அரிசி எப்படிப் போதும்?

இதைப் பாத்திரத்துல போட்டு இந்த மந்திரக் கரண்டியால ஒரு முறை கலக்கினாப் போதும். அது பாத்திரம் முழுக்க நிறைஞ்சுடும்' என்றாள் அரக்கி.

பாட்டி ஆச்சர்யத்துடன் சமையலறை சென்று ஒரு பாத்திரத்தில் அரிசியைப் போட்டுக் கலக்கினார். மறுகணம் அந்தப் பாத்திரம் முழுக்க அரிசி நிறைந்திருந்தது. அதை வைத்து ருசியாகச் சமைத்தார். அதை அரக்கிகள் தின்று தீர்த்தார்கள்.

சிலநாள் கழித்து, பாட்டிக்கு வீடு திரும்பும் ஆசை வந்தது. ஆனால் அரக்கியை மீறி எப்படிச் செல்வது என்று தெரியவில்லை. மறுநாள், அரக்கி இல்லாத நேரத்தில் படகில் ஏறிப் புறப்பட்டார் பாட்டி. ஞாபகமாக அந்த மந்திரக் கரண்டியைத் தன் மடியில் செருகிக் கொண்டார்.

சிறிது நேரத்தில் அவர் நதியைக் கிட்டத்தட்ட கடந்துவிட்டார். அப்போது, அரக்கி வந்துவிட்டாள். பாட்டி திகைத்தார். அரக்கி சத்தம் போட்டு எல்லாரையும் அழைத்தாள். இப்போது ஆற்றின் இருபுறமும் அரக்கிகள். ஆனால் யாருக்கும் நீச்சல் தெரியாது. அவர்களால் பாட்டியை நெருங்க இயலாது. பாட்டியாலும் கரையேற இயலாது.

அரக்கிகள் சட்டென்று குனிந்து ஆற்று நீரைக் குடிக்க ஆரம்பித்தார்கள். சில நிமிடங்களில் ஆற்று நீரை அவர்கள் முழுக்கக் குடித்துவிட்டார்கள், பாட்டியின் படகு சேற்றில் சிக்கிக்கொண்டது.

அரக்கிகள் கோபத்தோடு பாட்டியை நெருங்கினார்கள். பாட்டி இறங்கி ஓடத் தொடங்கினார்.

சேற்றில் பாட்டியின் கால் சிக்கிக் கொண்டது, தடுமாறி விழுந்தார். இதைப் பார்த்த அரக்கிகளுக்குச் சிரிப்பு தாங்கவில்லை. 'ஹாஹாஹா' என்று அவர்கள் வாய்விட்டுச் சிரிக்க, அவர்கள் குடித்த தண்ணீரெல்லாம் வெளியே வந்து விட்டது. ஆறு மறுபடி ஓடத் தொடங்கியது.

சட்டென்று படகில் ஏறிக்கொண்டார் பாட்டி, அரக்கிகள் நீரில் சிக்கித் தவிக்க, அவர்களுக்கு நடுவே படகைச் செலுத்தி மறுகரைக்கு வந்துவிட்டார். மளமளவென்று ஓடித் தன் வீட்டுக்குள் நுழைந்தார். அதே கணம், அந்தப் பள்ளமும் மூடிக்கொண்டது.

பாட்டியைப் பார்த்தவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். 'இவ்ளோ நாளா எங்கே போனீங்க பாட்டி? உங்க இட்லி சாப்பிடாம ரொம்ப கஷ்டப்பட்டுட்டோம்' என்றார்கள்.

இதோ, வந்துட்டேன்' என்றார் பாட்டி. 'இனிமே உங்களுக்கு மட்டுமில்லை, இந்த ஊருக்கே நான் இட்லி செஞ்சு போடுவேன்' என்றார் தன் இடுப்பிலிருந்த மந்திரக் கரண்டியைத் தொட்டுக்கொண்டு.

அன்றுமுதல், பாட்டியின் வீட்டில் அரிசியும் மற்ற பொருள்களும் நிறைந்து வழிந்தன. தினமும் ஆயிரக்கணக்கானோர் அவர் தந்த இட்லியைச் சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்!

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1567

### விதுசன் விது

ஏமாற்றத்தைக்கூட தாங்கிக் கொள்ளலாம்.
ஆனால் ஏமாந்தபின் இந்த உலகம் பேசும்
கேலியான வார்த்தைகளைத்தான்
தாங்கிக் கொள்ள முடியாது



### அசோக் ரமணா

பேசும் வார்த்தையைவிட பேசாத
மௌனத்திற்கு அதிகம் அர்த்தம் உண்டு!
பேசும் வார்த்தை எல்லோர்க்கும் புரியும்...
ஆனால் மௌனம் உன்னை
நேசிப்பவர்களுக்கு மட்டுமே புரியும்



### ரஜிகரன்

தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்காமல் தனது
அக்கா, தங்கையைப் பற்றி யோசிப்பவனும்
இன்னொரு தந்தைக்குச் சமன்



### கபிலன் கபில்

வார்த்தைகளில்லை! வாழும்போதே
உணர்ந்து கொள்ளுங்கள், சொர்க்கம்
இறந்த பின் அல்ல நம் உறவுகளுடன்
வாழும் போதே என்று



### நிரோஜன்

முன்னொரு நாள் அணு அணுவாய் ரசித்து செய்த
செயலை பின்னொரு நாளில் அணுவளவுகூட
ரசிக்காமல் புறக்கணித்து விடுகின்றோம்



### திலீபன்

தேவையான அளவிற்கு சம்பாதித்துவிட்டு,
அதன் பிறகு நல்வாழ்க்கை வாழ ஆரம்பிக்க
வேண்டும் என்று நினைக்கிற பலர் அந்த
எல்லைக்கோடு எங்கிருக்கிறது என்று
தெரியாததால் கடைசிவரை சம்பாதித்துக்
கொண்டு மட்டுமே இருக்கிறார்கள் வாழாமலே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 159

# சிறுவர்களின் கண்களில் விபத்து ஏற்படும் முறைகளும் அவற்றின் தடுப்பு முறைகளும்



சிறார்கள் எப்போதும் சுறுசுறுப்பானவர்கள். எதையும் ஆராயும் குணம் கொண்டவர்கள். வேகமாக செயற்பட விளைபவர்கள். அவர்களின் இயக்கம் பெரியோர்களைப் போன்று ஒருங்கமைக்கப்பட்டதல்ல. இவை சிறுவர்களின் கண்களில் விபத்துக்கள் அதிகளவில் ஏற்படக் காரணமாகின்றன.

கண்களில் காயங்கள் ஏற்பட்டுவிட்டால் அவர்களின் ஒத்துழைப்புடன் கண்களைப் பரிசோதித்தல் மிகவும் சிரமமானது. கண்களுக்கு உரிய முறையில் மருந்திடவும் அவர்கள் அனுமதிப்பதில்லை. கண்ணில் ஏற்படும் வலிகாரணமாக கண்ணைக் கசக்க முற்படுவதால் காயங்கள் அதிகரிக்கலாம். காயங்களால் ஏற்படும் தற்காலிக பார்வை இழப்புகளும் சிறார்களின் மூளையில் நிரந்தர பார்வை விருத்தி குறைபாட்டை (Amblyopia) ஏற்படுத்தலாம். எனவே சிறுவர்களின் கண் விபத்துக்களைத் தடுத்தல் மிகவும் இன்றியமையாதது.

இலகுவான சில படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் சிறார்களின் கண் விபத்துக்களை வீட்டிலும் வெளியிலும் தடுக்கலாம்.

- **கண் இடர்கள் ஏற்படக்கூடிய முறைகளை விளங்கிக் கொள்ளுதல்.**
- **ஆபத்துக்களைக் கண்டறிதலும் அகற்றுதலும்.**
- **சிறுவர்களை வீடுகளிலும் விளையாடும் போதும் கவனமாகக் கண்காணித்தல்.**

**இவை பற்றி விரிவாகப் பார்ப்போம்**

விளையாட்டுப் பொருள்களின் தவறான பாவனை கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தும். மிகவும் மலிவான, தரமற்ற குறைபாடுடைய விளையாட்டுப்பொருள்களைத் தவிர்க்கவும். சிறார்களின் வயதுக்கு உகந்த விளையாட்டுப் பொருள்களை மட்டும் வழங்கவும்.

விளையாட்டுப் பொருள்களில் உள்ள எல்லா எச்சரிக்கைகளையும் அறிவுறுத்தல்களையும் அவற்றைச் சிறுவர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் வாசிக்கவும்.

கூரான கடினமான முனைகளை ஆபத்தான விளிம்புகளை கடினமான வெளிநீட்டங்களைக் கொண்ட விளையாட்டுப்பொருள்களைத் தவிருங்கள். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மென்மையான விளையாட்டுப் பொருள்களை (Soft toys) கொடுப்பது விரும்பத்தக்கது.

பறக்கின்ற விளையாட்டுப் பொருள்களும் அதிவேகமாக பொருள்களை வீசும் விளையாட்டுத் துப்பாக்கி போன்ற உபகரணங்களும் எல்லாச் சிறுவர்களின் கண்களுக்கும் ஆபத்தானவை. குறிப்பாக ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களிடம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

சிறுவர்கள் விளையாடும் போது உரிய கண்காணிப்பு அவசியம் செய்யக்கூடியவை. செய்யக்கூடாதவை பற்றி சிறுவர்களுக்கு சொல்லித் தரவும் வேறுபட்ட விளையாட்டுக்களுக்குரிய தனித்துவமான கண்பாதுகாப்பு உபகர்ணங்கள் (உ+ம்: Goggles, Safety glasses, helmets போன்றவை) கடைகளில் கிடைக்கும் இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்தது.

கட்டிலில் இருந்து விழுதல், வீட்டுத் தளபாடங்களில் மோதுதல், படிகளில் விழுதல், விளையாட்டுப் பொருள்களுடன் விழுதல் என்பன கண் காயங்களுக்கு முக்கிய காரணமாகும். மாடிப் படிகளில் பாதுகாப்பு கதவுகளை அமைக்கலாம். போதியளவு வெளிச்சமும் பாதுகாப்புக் கைப்பிடிகளும் படிகளுக்கு அவசியம்.

கூரான முனைகளைக் கொண்ட தளபாடங்கள் மற்றும் அலங்காரப் பொருள்களை அவற்றின் விளிம்புகளையும் முனைகளையும் துணி மற்றும் மென்மையான இறப்பரினால் கவசமிடலாம் அல்லது மறைக்கலாம்.

வீட்டின் சமையலறை, களஞ்சிய சாலை, குளியலறை போன்றவற்றில் உள்ள கூரிய உபகரணங்கள், மரவேலை மற்றும் இரும்பு வேலை செய்யும் ஆயுதங்கள், மின்சார உபகரணங்கள் என்பவற்றை எப்போதும் அவற்றுக்குரிய பெட்டகங்களில் அல்லது இலாச்சிகளில் வைத்துப் பூட்ட வேண்டும். இதன்மூலம் சிறார்களின் கைகளுக்கு அவை செல்வதைத் தடுக்க முடியும்.



வாசனைத்திரவியங்கள் (Perfumes & Sprays) அழகுசாதனப் பொருள்கள், மலசலகூடங்களில் பயன்படுத்தும் அழுக்கு நீக்கிகள், தொற்றுநீக்குகள், சமையலறையில் பயன்படுத்தும் பல்வேறுபட்ட இரசாயனப் பொருள்கள் கண்களுக்கு மிகவும் ஆபத்தானவை. இவை குழந்தைகளுக்கு எட்டாத இடங்களில் பேணப்படுதல் வேண்டும்.

இவைபோன்று வர்ணப்பூச்சுகள், கிருமிநாசினிகள், உரங்கள், பசைகள் (glus) போன்றனவும் பாதுகாப்பான இடங்களில் வைக்கப்படுதல் அவசியம்.

சுடுநீர், சூடான உணவுகள், சூடான எண்ணெய் போன்றன கவனமின்றி வைக்கப்படும்போது குழந்தைகளின் கண்களில் விசிறப்பட போதிய வாய்ப்புக்கள் உள்ளன.

சிறார்களை வீட்டின் திருத்த வேலைகள், தூசுதட்டுதல், தோட்ட வேலைகள், கிருமிநாசினி விசிறுதல் போன்றவற்றின் போது தூர இருக்கச் செய்யுங்கள்.

வீட்டுத் தோட்டத்தில் உள்ள முள்மரங்கள், பதிவான கிளைகள் என்பன சிறார்கள் அவற்றிடையே விளையாடும் போது கண்களில் காயத்தை ஏற்படுத்தலாம். இவை பார்வை இழப்பை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான பங்கசுத் தொற்றுக்கு வழிவகுக்கும். பதிவான கிளைகளையும் முள்மரங்களையும் வெட்டி வீட்டுத் தோட்டத்தை சுத்தமாக பேணுங்கள்.

பண்டிகைக் காலங்களில் வாணவேடிக்கைகளால் ஏற்படும் கண் காயங்கள் பண்டிகையின் மகிழ்ச்சியை இல்லாது செய்துவிடும். ஒருபோதும் சிறார்களை வாணவேடிக்கைகளைப் பற்றவைக்க அனுமதிக்க வேண்டாம்.

பெரியவர்கள் வாணவேடிக்கைகளைப் பற்றவைக்கும் போது சிறார்களை தொலைவில் வைத்திருங்கள். தரமற்ற, உற்பத்திக் குறைபாடுடைய போதிய பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்காத வாணவேடிக்கைப்பொருள்கள் சந்தைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. இவை சிறார்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களின் கண்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

## கண் ஆபத்துக்களின் போதான முதலுதவிகள்

உரிய நேரத்தில் வழங்கப்படும் சரியான முதலுதவிகள் கண்களில் ஏற்படும் நிரந்தரப் பாதிப்பை தடுக்கும் அல்லது குறைக்கும்.

கண்காயங்கள் தீங்கற்றவை என்று தவறாக எடை போட வேண்டாம். சந்தேகம் இருப்பின் கண்வைத்தியரை உடனடியாக நாடவும். கண்ணில் இரசாயனப் பொருள்கள் பட்டால் மிகவும் ஆபத்தானது. உடனடியாக சுத்தமான நீரால் கண்ணை குறைந்தது 15 நிமிடமாவது கழுவுங்கள். தண்ணீரால் கழுவும்போது கண்ணை நன்றாக திறந்து வைத்திருங்கள். பின் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவும். கண்ணில் ஏதாவது தூசு அல்லது துணிக்கைகள் விழுந்தால் கண்ணை கசக்க வேண்டாம். அது கண் காயத்தை அதிகரிக்கும். கண்ணை சுத்தமான நீரால் கழுவலாம். அகற்ற முடியாவிடின் மருத்துவ உதவிதேவை.

கண்ணில் பலமாக அடிபட்டால் அல்லது கூரிய பொருள்களால் குத்தப்பட்டால் கண்களைக் கழுவவேண்டாம். கண்ணுக்குள் இருக்கும் பொருளை அகற்ற முற்பட வேண்டாம்.

எந்தவிதமான கண் மருந்துகளையும் பாவிக்க வேண்டாம். வைத்தியசாலைக்கு விரையுங்கள். வருமுன் காப்போம்.

Dr.மு.ஞானரூபன்